




Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 442 பிலவ வருடம், தை மாதம் 18ஆம் திகதி திங்கட்கிழமை (31.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜமா அத்துல் ஆகீர் - 27, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30







## கமெண்ட் கந்தர்..



அப்போ மாகாண சபைத் தேர்தல் வேட்பாளர் பதவி, முதலமைச்சர் கனவு, வடக்கு - கிழக்கு இணைப்பு என்பதெல்லாம் கனவா கோபால்....

# இந்தியாவின் கைக்குள்ளே நின்று சிங்களத் தலைவர்களின் வழிநடத்தலில் தமிழ்க்கட்சிகள் மக்களை ஏமாற்றுகின்றன!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தெரிவிப்பு

ஐ.சிவசாந்தன்

இந்தியாவின் கைக்குள்ளேயும் சிங்களத் தலைவர்களின் வழிநடத்தலிலும் செயற்பட்டு இங்குள்ள தமிழ்க் கட்சிகள் மக்களை ஏமாற்றுகின்றன - என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக யாழில் நேற்று இடம்பெற்ற பேரணியின் பின்னர் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

34 வருடங்களுக்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட ஒற்றையாட்சியை இப்போதும் தூக்கிப் பிடிக்கும் 11 பேர் பற்றி நாம் இங்கு குறிப்பிட வேண்டும். இந்தியாவின் கைக்குள்ளே நின்று கொண்டு சிங்களத் தலைவர்களின் நிகழ்ச்சி நிரலிலே மக்களின் ஆணையை பெற்று நாடாளுமன்றம் சென்றவர்கள் இன்று என்ன செய்கிறார்கள்?. சீனாவை நாம் இங்கே விடமாட்டோம் ... 02 பக்கம்



## தமிழரசுக் கட்சியின் செயற்குழு வவுனியாவில் நேற்று கூடியது



வவுனியா நிருபர்

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியா குருமண்காட்டில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றது. 02 பக்கம்

# புதிய அரசியலமைப்பில் மாகாணசபை அபேஸ்!

## 13ஆவது திருத்தத்துக்கும் முழு ஆப்பு

யோ.தர்மராஜ்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைப் பிரகடனத்துக்கமைய, உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பில் மாகாண சபை நீக்கப்படவுள்ளதுடன் மாகாண சபை முறைமையை உள்ளடக்கியுள்ள 13 ஆவது திருத்தமும் உள்வாங்கப்படாமல், அதிலுள்ள சிற்சில விடயங்கள் மாத்திரம் மாற்றங்களுடன் உள்ளடக்கப்படலாம் என உயர்மட்ட அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான குழு பெப்ரவரி முதல் வாரத்தில் புதிய அரசியலமைப்புக்கான யோசனை வரைபை நிறைவு செய்து ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. 02 பக்கம்

## புதிய சுகாதார வழிகாட்டல் இன்று வெளியாகும்

கொவிட் நோயாளர்கள் பதிவாகும் வீதம் அதிகரித்துள்ள நிலையில், தற்போது அமுலிலுள்ள சுகாதார விதிமுறைகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

புதிய சுகாதார வழிகாட்டல்கள் இன்று (31) வெளியிடப்படும் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் இந்த நாட்களில் செயற்படும் விதம், அடுத்த இரண்டு வாரங்களில் பதிவாகும் நோயாளர்களின் எண்ணிக்கையை தீர்மானிக்கும் என்பதால் மிகுந்த பொறுப்புடன் செயலாற்றுமாறு விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

## நாட்டை மீண்டும் முடக்கினால் மாதச் சம்பளம் பெறுவோருக்கு சிக்கல்

### விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை

நா.தினுஷா

கொரோனா தொற்றுப் பரவல் அதிகரித்துள்ளமையினால் எதிர்காலத்தில் நாட்டை முடக்க வேண்டியநிலை ஏற்பட்டால் மாத சம்பளம் பெறுபவர்களுக்கு பாரதூர சிக்கல்நிலை ஏற்படுமென சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், விசேட..... 02 பக்கம்



## ஓட்டமாவடியில் மாணவனை காணவில்லை; வட்ஸ்அப் செயலி ஒன்லைன் காட்டுகிறது!

### வாழைச்சேனை பொலிஸார் தீவிர விசாரணை

02 பக்கம்

## இனப் பிரச்சினை தீர்வு முயற்சியில் பொது இணக்கத்தை எட்டுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - முஸ்லிம் புத்திஜீவிகள் பேச்சுவார்த்தை

### பெப்ரவரி நடுப் பகுதியில் சந்திப்பு; சுமந்திரன், ஹசன் அலி ஏற்பாடு

14 பக்கம்

## ஐ.ஓ.சியிடமிருந்து நேரடியாக எரிபொருளைப் பெற ஏற்பாடு

### மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தகவல்

யோ.தர்மராஜ்

மின்சார சபைக்கு தேவையான எரிபொருளை இந்திய ஓயில் நிறுவனமான ஐ.ஓ.சியிடமிருந்து நேரடியாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இன்று அல்லது நாளை எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள் ளார்.

மின் உற்பத்தி மற்றும் மின் துண்டிப்பு குறித்து நேற்று (30) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை வார இறுதி நாட்கள் என்பதோடு, விடுமுறை நாட்களாக இருப்பதால் வார நாட்களை விட மின்சாரத்திற்கான கேள்வி குறைவாகும். சிறு உற்பத்தி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் என்பன வார இறுதி நாட்களில் மூடப்பட்டிருப்பதால் 60 வீதமான... 02 பக்கம்

## உஷ்



வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று கதிர்காமம் சதொச நிலையத்திற்கு சென்றபோது அங்கு வந்த வாடிக்கையாளர் பெண்மணியொருவர் அமைச்சரை அடையாளம் கண்டுவிட்டு திட்டித் தீர்த்து வார்த்தைகளால் அபிஷேகம் செய்தாராம்.

மனிசர் சாப்பிட இல்லாமல் இருக்கிறான்... அரிசி இருக்கிறதா என்று பார்த்துவிட்டு போக வந்துவிட்டார் இவர் என்று கொச்சை கொச்சையாக அமைச்சர் என்றும் பாராமல் ஏசினாராம் அந்தப் பெண்மணி...

இப்போ நாடு இருக்கும் நிலைமையில், இதையாவது தருகிறோம் என்று சந்தோஷப்படுங்களென கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டாராம் அமைச்சர்.



# அட்டாம்பிட்டியில் நீரில் மூழ்கி ஐந்து பேர் பரிதாபப் பலி

## ஒருவரையொருவர் காப்பாற்ற முயன்றபோது நீச்சல் தெரியாததால் விபரீதம்

06 பக்கம்

### திதி கிரியைகளுக்குச் சென்றவர்களுக்கு ஏற்பட்ட சோகம்




# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரி மட்டக்களப்பில் கவனயீர்ப்பு நிகழ்வு!



(கல்லடி நிருபர்)

ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கெதிரான தாக்குதல்களுக்கு நீதிகோரி முன்னெடுக்கப்பட்டு வரும் கறுப்பு ஜனவரி வார நிகழ்வின் இறுதி நாளான நேற்று(30) மாலை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு நகரிலுள்ள காந்தி பூங்கா வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபி அருகே மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வு, மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியப் பொருளாளர் எஸ்.சசி தரன் தலைமையில் இடம்பெற்றது.

இக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், சிவில் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது நினைவுத்தூபி அருகே துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன், மெழுகுவர்த்தி ஏந்தி ஊடக சுதந்திரத்தினைக் கோரி அனைவரும் வலியுறுத்தி நின்றனர்.

# 13ஆம் திருத்தத்துக்கு எதிராக யாழில் கிட்டு பூங்கா பிரகடனம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் வெளியீடு

13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் யாழில் நேற்று (30) மாபெரும் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது. பேரணியின் இறுதியில் கிட்டு பூங்காவில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தின்போது வெளியிடப்பட்ட பிரகடனத்தின் முழு வடிவம் வருமாறு,

**கிட்டு பூங்கா பிரகடனம்**

"தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை 13 ஆம் திருத்தத்திற்குள் முடக்கும் சதி முயற்சியை முறியடிப்போம்" என்ற நோக்கத்துடன் தமிழ் மக்களினதும், வெகுசன அமைப்புகளினதும் பங்குபற்றலுடன் நடைபெறும் தமிழ்த் தேசிய அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் போராட்டத்தில், 2022 தை 30 இன்று (நேற்று), கிட்டு பூங்காவில் நாம் அனைவரும் திரண்டுள்ளோம்.

சிங்கள பௌத்த மேலாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிவரும் தமிழ்த் தேசமானது - தனது அடிப்படையான அரசியல் உரிமைகளான வடக்கு - கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசம் அதன் இறைமை, சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வில் எப்போதுமே உறுதியாக இருக்கும் என்ற செய்தியைச் சிங்கள தேசத்திற்கும், இலங்கைத் தீவின் மீது கரிசனை கொண்டிருக்கும் சர்வதேச சக்திகளுக்கும் இத் தொடர் போராட்டம் வலியுறுத்திக் கூற விரும்புகின்றது.

சிங்கள பௌத்த பெரும்பான்மை மக்களின் ஏகோபித்த வாக்குகளால் ஆட்சிப்பீடம் ஏறியுள்ள இன்றைய அரசாங்கத்தால் இலங்கைக்கான நான்காவது அரசியலமைப்பு கொண்டுவரப்படவுள்ளது. அதை இந்த வருடத்துக்குள் நிறைவேற்றவுள்ளதாக இவ்வரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டும் உள்ளது. அது இறுக்கமான ஒற்றையாட்சிக்கு உட்பட்டதாகவே அமையும் என்பதையும், அரசாங்கம் உறுதிப்படக் கூறியுள்ளது. இந்த அரசியலமைப்பை ஒருதலைப்பட்சமாக நிறைவேற்றுவதற்குரிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் இந்த அரசாங்கம் கொண்டுள்ளது. இலங்கையில் கொண்டுவரப்பட்ட மூன்று அரசியலமைப்புகளும் இதேபோன்றதொரு சிங்கள பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டே நிறைவேற்றப்பட்டிருந்தது. அச்சந்தர்ப்பங்களிலெல்லாம் தமிழ்த் தலைமைகள் அந்த ஒற்றையாட்சி அரசியல் யாப்புகளை எதிர்த்திருந்ததுடன், வடக்கு கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசம் அதன் இறைமை, சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வை வலியுறுத்தி வந்ததன் விளைவாகவே, தமிழர்களுக்கு இனப்பிரச்சினையொன்று உண்டு என்னும் விடயத்தைத் தக்கவைக்கக்கூடியதாக இருந்தது. குறிப்பாக, சிங்கள அரசு தமிழருடைய உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாதமாக சித்தரித்து, இங்கு பயங்கரவாத பிரச்சினை மட்டுமே உள்ளதாகக் கூறி, போரை முடிவுக்குக் கொண்டு வந்து 13 வருடங்கள் கழிந்துள்ள நிலையிலும், இன்றுவரை தமிழ் மக்களுக்கு இனப்பிரச்சினை தொடர்ந்தும் இருக்கிறது என்கின்ற நிலையை நாம் தக்கவைத்திருப்பதற்கான ஒரேயொரு காரணம், இந்த நாட்டின் பிரதான சட்டமாக இருக்கும் மூன்று அரசியலமைப்புகளையும் தமிழ் மக்கள் நிராகரித்திருந்தமையேயாகும்.

இவ்வாறிருக்க, 1980களில் இலங்கையை



மையமாகக் கொண்டிருந்த அமெரிக்க - இந்திய பூகோளப்போட்டி காரணமாகவே இந்தியா தனது நலனை அடைவதற்காக தமிழர்களின் இனப்பிரச்சினையைக் கையிலெடுத்திருந்தது. 1987இல் இலங்கையானது, இந்திய நலன்சார்ந்து செயற்பட தயாரான நிலையில், இந்தியா தனது தேசிய பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்தி, சிங்களத் தரப்புடன் உடன்பட்ட பின்னர், எந்த ஒற்றையாட்சிக் கெதிராக தமிழ்த் தரப்பை பயன்படுத்தியதோ, அதே ஒற்றையாட்சிக்குள்ளான 13ஆம் திருத்தத்தையே தமிழ் மக்களுக்கான தீர்வாக இலங்கை அரசு முன்வைத்திருந்த நிலையில், தமிழ்த் தரப்பை இந்தியா கைவிட்டிருந்தது. இந்நிலையில், அப்போதிருந்த தமிழ்த் தரப்புகளாலும் ஒற்றையாட்சிக்குட்பட்ட 13 ஆம் திருத்தச் சட்டம் நிராகரிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் நேர்மையான தலைமைத்துவத்தின் காரணமாக ஒற்றையாட்சிக்குள் முடக்கும் செயற்பாடுகள் அனைத்தும் தடுக்கப்பட்டிருந்தன. 2005இன் பின்னர், இந்தியா - சீனா பூகோளப்போட்டி மீண்டும் இலங்கையில் உருவாகியிருந்த பின்னணியிலேயே ஒரு இனப்படுகொலையூடாக போராட்டம் மௌனிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர், இந்தியா மீண்டும் தனது ஆதிக்கத்திலுள்ள தமிழ்த் தரப்புகளைப் பயன்படுத்தி, தமிழ் அரசியலை ஒரு துருப்புச்சீட்டாகக் கையாண்டு இலங்கை அரசோடு பேரம்பேசி வருகின்றது. இலங்கை, சீனாவின் விவகாரத்தில் இந்திய நலன்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் செயற்படுமானால், இந்திய ஆதிக்கத்துக்குட்பட்ட தமிழ்த் தரப்புகளைப் பயன்படுத்தி, தமிழரின் அரசியலை ஒற்றையாட்சிக்குள்ளான 13ஆம் திருத்தத்திற்குள் முடக்குவதற்கும் இணங்கியுள்ளது.

இந்தப் பின்னணியிலேயே, இந்திய ஆதிக்கத்துக்குட்பட்ட தமிழ்த் தரப்புகளான இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலைக் கழகம் (ரெலோ), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (டி.பி.எல்.எவ்.) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி(ஈ.பி.ஆர்.எல்.எவ்.), தமிழ்த் தேசியக் கட்சி உள்ளிட்ட தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் இணைந்து 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரி கூட்டாக கையொப்பமிட்ட கடிதத்தை 18-01-2022 அன்று இந்திய தூதுவரிடம் கையளித்துள்ளனர்.

இதன்மூலம், 13ஆம் திருத்தச்சட்டத்திலுள்ள சரத்துகள் புதிய அரசியலமைப்பிலும் உள்வாங்கப்படும் பட்சத்தில், இந்திய ஆதிக்கத்துக்குட்பட்ட வடக்கு, கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், புதிய ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு ஆதரவு வழங்குவதனூடாக, தமிழ் மக்கள் ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டுவிட்டார்கள் என்ற நிலைமையை உருவாக்கி, நாட்டிலுள்ள அனைத்து இனங்களும் ஏற்றுக்கொண்ட ஒரு அரசியலமைப்பை உருவாக்கிவிட்டதாகவும், இனப்பிரச்சினை இதனூடாக தீர்க்கப்பட்டு விட்டதாகவும் உலகுக்கு பறைசாற்றுவதற்கு தயாராகிறார்கள்.

இந்த ஆபத்திலிருந்து தமிழ்த் தேசத்தை மீட்டெடுப்பதற்கு, தமிழ்த் தேச மக்கள் அணிதிரள்வதன் ஊடாகவே தடுத்து நிறுத்த முடியும் என்னும் யதார்த்தத்தை விளங்கிக் கொண்டு, இந்தத் தொடர் போராட்டம் பின்வருவனவற்றை பிரகடனப்படுத்துகிறது:

தமிழ்த் தேச மக்கள் தொடர்ச்சியாக ஒற்றையாட்சியை நிராகரித்து, தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கின்ற ஒரு தீர்வை 70 வருடங்களுக்கு மேலாக வலியுறுத்தி வந்திருக்கின்ற நிலையிலே, 2009இல் இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட பின்னரும், ஒற்றையாட்சியை நிராகரித்தும், தமிழ்த் தேசத்தின் அங்கீகாரத்தைக் கோரியும் ஒவ்வொரு தேர்தல்களூடாகவும் தங்களது ஏகோபித்த ஆணையை வழங்கி வந்திருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசமும் அதன் இறைமையும், சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கப்படுகின்ற தீர்வுக்குப் பதிலாக - ஒற்றையாட்சிக்குள் இருக்கக்கூடிய ஒரு கட்டமைப்பாக (13ஆம் திருத்தச் சட்டமாகவோ அல்லது வேறு வடிவத்திலோ) இருக்குமானால் அவ்வகையான செயல், தமிழ் மக்களுடைய ஆணைக்குத் துரோகம் இழைக்கும் வகையிலேயே அமையும் என்ற விடயத்தை இப்போராட்டம் பிரகடனப்படுத்துகிறது.

தமிழ் மக்கள், காலம் காலமாக வழங்கிவரும் தமிழ்த்தேச அங்கீகாரத்துக்குரிய ஆணையை மீறி, ஒற்றையாட்சிக்குட்பட்ட 13ஆம் திருத்தத்தையோ அல்லது வேறு எந்தவொரு திருத்தத்தையோ வலியுறுத்துகின்ற தரப்புகள், அம்முயற்சியை கைவிட வேண்டுமென இப்போராட்டமூடாக வலியுறுத்துகிறோம்.

இந்திய அரசானது இலங்கையோடு நல்லுறவை பலப்படுத்திக்கொள்வதையோ அல்லது தனது பூகோள அரசியல் நலன்களைப் பேணுவதையோ அல்லது தென்ஆசிய பிராந்திய வல்லரசாக தன்னை நிலைநிறுத்திக்கொள்வதையோ ஈழத்தமிழ் மக்கள் எதிர்க்கவில்லை. இந்தியாவை எமது நட்பு சக்தியாகவே கருதுகின்றோம். இந்தியாவின் தேசிய நலன்களைப் பேணுவதில் எமக்கு மிகுந்த விருப்பமும் அக்கறையும் ஈடுபாடும் உண்டு. ஆனால் தமிழ் மக்கள் தமது நட்பு சக்தியாக கருதும் இந்தியா, தனது பூகோள நலன்களைப் பூர்த்திசெய்வதற்காக தமிழ் மக்களைப் பலிக்கடாவாக்கி, தமிழ் மக்களின் நலன்களை முற்றாகப் புறக்கணிக்கும் செயற்பாட்டை நிறுத்துமாறு கோருகின்றோம்.

தமிழ் மக்கள் 70 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற வடக்கு, கிழக்கு இணைந்த தாயகத்தில், தமிழ்த்தேச அங்கீகாரத்தையும் அதனுடைய தனித்துவமான இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் முழுமையாக அனுபவிக்கக்கூடிய 'சமஷ்டி' அடிப்படையிலான தீர்வை அடைய இந்திய அரசும் ஏனைய நட்பு நாடுகளும் இலங்கையை வலியுறுத்த வேண்டும் என்றும் இப்போராட்டம் கோருகின்றது.

### நாட்டை மீண்டும்...

வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறானவொரு நிலைமைக்கு நாட்டை தள்ளிவிடாமல் பாதுகாக்கும் பொறுப்பு மக்களிடம் இருப்பதாகவும் முழுமையாக தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டு சுகாதார விதிமுறைகளை பின்பற்றினால் நாடு இக்கட்டான நிலையை சந்திப்பதை தவிர்த்துக்கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எந்த வைரஸ் பரவலடைகிறது என்பதை ஆராய்வதற்கு பதிலாக சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதே மிக அவசியமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனா தொற்றுப்பரவலின் தற்போதைய நிலை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்த அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சமூகத்தில் பரவலடைந்துவரும் பல்வேறு கருத்துகளின் காரணமாக மூன்றாம் கட்ட தடுப்பூசி பெற்றுக்கொள்வதில் சிலர் பின்னடைவை காட்டுகின்றனர். அவ்வாறான போலி கருத்துகளுக்கு மக்கள் ஏமாறக் கூடாது.

தற்போதைய காலகட்டத்தில் 900 - 1000 இடையில் கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். நான்கு மாதங்களின் பின்னர் நோயாளர்களின் எண்ணிக்கையில் இவ்வாறான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

ஒமிக்ரோன் தொற்று நாடு பூராகவும் பரவலடைந்து வருகிறது. அதனால், கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக விதிக்கப்பட்டுள்ள சுகாதார வழிமுறைகளை பின்பற்ற வேண்டியது அவசியமாக காணப்படுகின்றது. மூன்றாம் கட்ட தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்கள் சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயம் அல்லது பிரதான வைத்தியசாலைகளுக்கு சென்று தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

### புதிய அரசியலமைப்பில்...

இந்த நிலையில், இக்குழுவானது தாங்கள் தயாரித்துள்ள புதிய அரசியலமைப்புக்கான வரைபில் மாகாண சபை முறைமையை உள்ளடக்காத காரணத்தினால் மாகாண சபை முறைமை முற்றாகவே இல்லாதொழிக்கப்படவுள்ளதாக அறிய முடிந்தது.

மாகாண சபைகளின் முன்னாள் அமைச்சராக இருந்த சரத் வீரசேகர மாகாண சபை நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கத்திடம் முன்வைத்திருந்ததோடு, சில யோசனைகளையும் முன்வைத்திருந்தார். அத்தோடு, சில தேரர்களும் மாகாண சபை நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக் கையை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில், புதிய அரசியலமைப்புக்கான குழுவினால் மாகாண சபை முறைமை தங்களுடைய யோசனையில் உள்வாங்கப்படாதமையினால் மாகாண சபை முறைமை நீக்கப்பட வாய்ப்புள்ளதாக அறிய கிடைத்தது.

இதேவேளை, மாகாண சபை முறைமையை உள்ளடக்கியுள்ள 13ஆவது திருத்தமும் உள்வாங் கப்படாது, அதிலுள்ள சிற்சில விடயங்கள் மாத்திரம் மாற்றங்களுடன் உள்ளடக்கப்படலாம் என உயர் மட்ட அரசியல் வட்டாரத் தகவல்கள் 'தமிழன்' செய்திகளிடம் நேற்றிரவு தெரிவித்தன.

அதேபோன்று, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிரகாரம் பிரதமர் முறைமையை உருவாக்குவதற்கு குறித்த குழு தங்களுடைய யோசனையில் உள்ளடக் கியுள்ளதாகவும் அறிய முடிந்தது.

### ஓட்டமாவடியில் மாணவனை...

(மீராவோடை நிருபர் - எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி -1 பழைய மக்கள் வங்கி வீதியில் வசித்து வந்த 17 வயதுடைய மாணவன் ஒருவன் கடந்த வெள்ளிக்கிழமை மாலை முதல் காணாமல் போயுள்ளார்.

தனது வீட்டிலிருந்து அன்றைய தினம் மாலை 3 மணியளவில் துவிச்சக்கர வண்டியில் சென்ற மாணவன் இதுவரை வீடு திரும்பாத நிலையில் மாணவனை பெற்றோர்கள் தேடி வருகின்றனர்.

இந்நிலையில், மாணவன் சென்ற துவிச்சக் கர வண்டியும் அவர் அணிந்திருந்த மேற் சட்டையும் நேற்றுமுன்தினம் 29ஆம் திகதி கல்குடா - கல்மலை கடலோரத்தில் கண்டெடுக்கப் பட்டுள்ளது.

மாணவன் கடலில் மூழ்கி மரணமடைந்திருக்கலாம் எனும் சந்தேகத்தில் கல்குடா பொலிஸாரின் உதவியுடன் சுழியோடிகள் தேடியபோதும் மாணவன் கிடைக்கவில்லை.

நேற்றைய தினம் (30) வரை மாணவன் தொடர்பான எந்தவித தகவலும் கிடைக்காத நிலையில், மாணவன் பயன்படுத்தி வந்த வட்ஸ் அப் நேற்றுமுன்தினம்வரை (29) ஒன்லைன் காட்டியதாகவும், மெஸேஜ் அனுப்பப்பட்டால் அனுப்பப்படும் இலக்கங்கள் ப்ளொக் பண்ணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மர்மமான முறையில் காணாமல் போயுள்ள மாணவனை கண்டுபிடிக்க வாழைச் சேனை பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### ஐ.ஓ.சியிடமிருந்து...

கேள்வி குறைவு என்பதால் எங்களால் மின்துண்டிப்பில்லாமல் முன்னோக்கிச் செல்ல முடிகின்றது.

இதனைத் தொடர்ந்து, இன்று திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரையான ஒரு வாரத்திற்கு தேவையான எரிபொருள் இருப்பதை பார்க்க வேண்டும். எரிபொருள் கூட்டுத்தாபனமும் எரிபொருள் வழங்குகின்றதோடு, ஐ.ஓ.சியிடமிருந்து நேரடியாக மின்சார சபைக்கு எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்று அல்லது நாளை ஐ.ஓ.சியிடமிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும். இதேவேளை, தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கான அனுமதியையும் இன்று (31) இடம்பெறவுள்ள அமைச்சரவையில் கோரியுள்ளோம்.

மேலும், சூரிய சக்தியின் ஊடாக மின் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளையும் பெப்ரவரி மாதம் முதல் ஆரம்பிக்கவுள்ளோம்.

### இந்தியாவின் கைக்குள்ளே...

அதற்கு நாம் உதவுவோம். நீங்கள் இந்த ஒற்றையாட்சிக்கு ஆதரவு கொடுங்கள் என தமிழ்க் கட்சிகள் இப்போது கையேந்தி நிற்கின்றன. இந்தியாவுடன் பேரம் பேசியுள்ளனர். மக்களே அடுத்த தேர்தலில் நீங்கள் எமக்கு வாக்களிக்க வேண்டாம். ஆனால், 13ஆம் திருத்தத்துக்கு எதிராக செயற்படுங்கள். 13ஐ ஆதரிப்பவர்களை நீங்கள் விரட்டியடிக்க வேண்டும். அந்த 11 பேர் இப்போது என்ன செய்கிறார்கள். மக்களின் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத் தருவோம் என தெரிவித்து நாடாளுமன்றம் சென்றவர்கள் இன்று என்ன செய்கிறார்கள். புதிய அரசியலமைப்பை கொண்டு வருவோம் என தெரிவித்துள்ள தற்போதைய ஆட்சியாளர்களுக்கு இவர்கள் நன்றாக முண்டு கொடுக்கிறார்கள்.

ஆனால், நாம் விட மாட்டோம். அனைத்து தமிழ்ப் பிரதேசங்களிலும் இந்தப் போராட்டம் தொடரும் – என்றார்.

### தமிழரசுக் கட்சியின்...

இந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, சி.வி.கே.சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், அரியநேத்திரன், சிவமோகன், ஞா.சிறிநேசன் ஆகியோர் உட்பட்ட பல பிரமுகர்கள் பங்கேற்றனர். அத்துடன், மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், குருகுலராஜா, சட்டத்தரணி வி.தவராசா, மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் சரவணபவன் மற்றும் பல கட்சி முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில், ஜெனிவா அமர்வுகள் மற்றும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் சமகால பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக் கப்பட்டது.












தமிழன் தமிழன் ஜூனியர்

கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.

தொடர்பு – சந்திரகுமார்
0777983308

# ஊடகர் அஷ்ரப் ஏ சமட்டின் தந்தை காலமானார்



ஓய்வுபெற்ற தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் அல்ஹாஜ் எம்.எச்.ஏ.சமட் நேற்று ஞாயிற்றுக்கிழமை (30) மாலை கொழும்பில் காலமானார்.

இவர் சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி, பேருவளை இக்ரா தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபரும் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் ஆலோசகரும் ஆவார்.

சாய்ந்தமருதை பிறப்பிடமாகக் கொண்ட அல்ஹாஜ் எம்.எச்.ஏ.சமட்டின் ஜனாஸா இன்று காலை தெஹிவளை ஜும்ஆப் பள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படும்.

# இன்றைய ராசி பலன்

**31.01.2022 திங்கட்கிழமை தை 18**

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

| | | |
|---|---|---|
| **நட்சத்திரம்: உத்தராடம்** | காலை 10.26 -01.02.2022 | காலை 11.15 வரை |
| அ.கா 12.23 - இரவு 9.57 | காலை 6.41 வரை | **முற்கரணம்: சகுனம்** |
| **திருவோணம்** | **திதி: அமர பட்ச சதுர்த்தசி** | காலை 3.53 - பி.ப 2.18 |
| இரவு 9.57 - 01.02.2022 | பிற்பகல் 2.18 வரை | **பிற்கரணம்: சதுஷ்பாதம்** |
| இரவு 7.44 வரை | **அமாவாசை** | பி.ப. 2.18 - 01.02.2022 |
| **யோகம்: சித்தி** | பி.ப. 2.18 - 01.02.2022 | அதிகாலை 12.45 வரை |

| | | |
|---|---|---|
| **சுப நேரங்கள்** | பிற்பகல் 1.53 - 3.22 | லோகநாயகி |
| காலை 6.29 - 7.33 | **எமகண்ட காலம்** | ஸஹஷ்ர சீர்ஷ |
| மாலை 4.50 - 6.19 | காலை 10.55 - பி.ப. | வதனா அன்னை |
| **அசுப நேரங்கள்** | 12.24 | ப்ரத்யங்கிராவின் |
| **ராகு காலம்** | **துர் முகூர்த்தம்** | கருணையாலே |
| காலை 7.58 - 9.27 | பிற்பகல் 12.48 - 1.35 | நற்பவி நற்பவி |
| **குளிகை காலம்** | மாலை 3.10 - 3.57 | நற்பவி |

**மேஷம்:** வணிக பங்குதாரர்களுடன் உறவில் நல்ல நிலை தோன்றலாம். பணிகளில் சக ஊழியர்களின் செயல்களில் மகிழ்ச்சி கிடைக்கலாம். வேலைகளில் அதிகாரமும் உண்டாகலாம். வீட்டுத்தேவைகளும் உங்களால் நிறைவேறும்.

**ரிஷபம்:** வணிக விற்பனை குறையலாம். வருவாய்க் குறைவு ஏற்படலாம். பெற்றோரை மதிப்புடன் பேணுவது மேன்மை. பொறுப்புகளில் அர்ப்பணிப்பு தேவைப்படலாம். உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். இறை தியானம் நன்மை.

**மிதுனம்:** புதிய தொழில் அல்லது வேலை தொடங்குவதற்கு இன்றைய நாள் சாதகமானதாக இல்லை. நிதி சிக்கல் ஏற்படலாம். திருமண உறவில் சிறிய பிரச்சினை தோன்றலாம். விரும்பத்தகாத செய்திகள் கிடைக்கலாம். இறைவணக்கம் தேவை.

சந்திராஷ்டமம்: மிருகசீரிடம் நட்சத்திரம் பாதம் 3/4க்கு அ.கா 5.46 - மாலை 4.33. திருவாதிரை நட்சத்திரத்திற்கு மாலை 4.33 - 01.02.2022 பிற்பகல் 2.16 வரை.

**கடகம்:** தொழில் வளர்ச்சிக்கான சாதகமான நிலை உண்டாகலாம். பணிகளில் உரிமைகள் அதிகரிக்கலாம். திருமண உறவில் வரம்புகளை மதிப்பது நன்மை. சமூக மதிப்பு மேம்படும்.

**சிம்மம்:** பணியிடத்தில் மேலதிகாரிகள் உங்கள் பணித்திறனால் மகிழ்ச்சியடையலாம். இரகசியங்களை பகிர்வதில் கவனம் தேவைப்படலாம். உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். இல்லத்தில் அமைதி நிலவும். பணியிடங்களில் உங்களுக்குப் புதிய அதிகாரம் கிடைக்கப் பெறலாம்.

**கன்னி:** பிள்ளைகளைப் பற்றிய கவலைகள் நீங்கத் தொடங்கலாம். வேலைகளில் பணிமுறையை மாற்றம் செய்ய சாதகமான நாள். தனிப்பட்ட உறவுகள் வலுப்படும். சிலருக்கு புதிய கற்கைகளும் ஏற்படலாம்.

**துலாம்:** தொழிலில் இருந்த சில தடைகள் நீங்கலாம். வருவாய்நிலை சீராகும். பிறரின் உதவியைப் பெறுவதில் சுயமரியாதையையும் பேணுவது மேன்மை. வாழ்க்கைத்துணையின் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். காதலிலும் பொறுமை அவசியமாகலாம்.

**விருச்சிகம்:** வணிக இலாபங்கள் மேம்படும். ஆன்மீக நிகழ்வுகளில் பங்குபெறும் நிலை உண்டாகலாம். சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் நல்ல நிலை ஏற்படலாம். புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கலாம். உங்கள் பகுத்தறியும் திறனுக்குப் பாராட்டுகள் கிடைக்கப் பெறலாம்.

**தனுசு:** பணிகளில் தாமதத்தைத் தவிர்ப்பது நன்மை. பணியிடத்தில் உங்கள் மீது முதலாளிக்கு அதிருப்தி உண்டாகலாம். தேவையற்ற பயணங்கள் ஏற்படலாம். அயலவர்களுடன் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நன்மை. காதலிலும் அனுசரிப்பு தேவைப்படலாம். இறை தியானம் நன்மை.

**மகரம்:** உற்பத்தி சம்பந்தப்பட்ட தொழிற்துறையில் இலாபங்கள் அதிகரிக்கலாம். புதிய நட்பு உண்டாகலாம். வளங்களுக்கான செலவுகள் ஏற்படலாம். வணிக பங்குதாரர்களின் சந்திப்பு ஏற்படலாம்.

**கும்பம்:** இணையம் சம்பந்தப்பட்ட விடயங்களில் கவனம் தேவை. ஏற்றுமதி/இறக்குமதி வர்த்தக இலாபங்கள் கிடைக்கப் பெறலாம். பயணங்களில் கவனம் தேவைப்படலாம். கண் சம்பந்தப்பட்ட சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம்.

**மீனம்:** வேலை தேடுவோருக்கு புதிய பணி கிடைக்கலாம். புதிய தொழில் இலக்குகளிலும் வெற்றி கிடைக்கப் பெறலாம். அரசாங்க பணியாளர்களின் மதிப்பு மேம்படும். காதலிலும் இனிமையான நாளாக அமையலாம்.

# சதொசவில் குறைந்த விலையில் அரிசி

சதொச விற்பனை நிலையங்களில் ஒரு கிலோ சம்பா அரிசியை 128 ரூபாவுக்குப் பெற்றுக் கொள்ள முடியுமென வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சர் புறக்கோட்டையில் அரிசி மொத்த விற்பனை நிலையங்களை நேற்று முன்தினம் சென்று கண்காணித்தார். இதன்போது அவர் வியாபாரிகளுடன் கலந்துரையாடினார். சம்பா அரிசி, நாட்டரிசி, பச்சரிசி ஆகியவற்றை முறையே ரூ.100, ரூ.105, ரூ.115 ஆகிய விலைகளில் பெற்றுக் கொள்ள முடியுமென வியாபாரிகள் தெரிவித்தனர்.

விரைவில் இந்த அரிசித் தொகையை சதொச விற்பனை நிலையங்களுக்கு வழங்கி, நுகர்வோர் ஒருவருக்கு 128 ரூபா என்ற அடிப்படையில், பத்து கிலோவை வழங்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். ஏனைய அரிசி வகைகளை 130 ரூபாவிற்கும், குறைந்த விலையில் வழங்குமாறும் அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

# விரைவாக கொழுந்து பறிக்கும் போட்டி; கிளாரெண்டனில் தொழிலாளர்கள் கௌரவிப்பு







(க. கிஷாந்தன்)

தலவாக்கலை பெருந்தோட்டக் கம்பெனிக்குட்பட்ட கிளாரெண்டன் தோட்ட நிர்வாகத்தின் ஏற்பாட்டில் 2022ஆம் ஆண்டு சிறந்த கொழுந்து பறிப்போருக்கான போட்டி நேற்று முன்தினம் குறித்த தோட்டத்தில் 7 ஆம் இலக்கம் கொண்ட தேயிலை மலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முகாமையாளர் இஷான் மொஹமட் தலைமையில் இடம்பெற்ற இந்த தேயிலை பறிக்கும் போட்டியில் அதிதிகளாக நானுஓயா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பெருந்தோட்டக் கம்பனியின் மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் முகாமையாளர் ராம், தோட்ட அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

பத்து நிமிடங்களில் பறிக்கப்பட்ட கொழுந்தின் நிறைக்கு ஏற்ப வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

அதற்கேற்ப எம்.விஜயலட்சுமி 2 கிலோ 560 கிராம் கொழுந்தைப் பறித்து முதலாமிடத்தையும், இருதயசாமி ரட்ணமேரி 2 கிலோ 260 கிராம் பறித்து இரண்டாமிடத்தையும், சுப்பிரமணியம் கோமதி 2 கிலோ 200 கிராம் கொழுந்து பறித்து மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இதன்போது வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும், பெறுமதிமிக்க பரிசுப் பொருட்களும் தோட்ட நிர்வாகத்தால் வழங்கிவைக்கப்பட்டு தொழிலாளர்கள் கௌரவப்படுத்தப்பட்டமை விசேட அம்சமாகும்.

# எமது பிரச்சினைகளை ஜனாதிபதியுடன் இணைந்து தீர்த்து வையுங்கள்

## அமைச்சர் அலி சப்ரியிடம் யாழ். முஸ்லிம்கள் கோரிக்கை

(நெல்லியடி செய்தியாளர்)

"நீங்கள் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுகின்றீர்கள். ஜனாதிபதியின் ஆலோசகராக இருக்கிறீர்கள். எனவே, எமது பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்து எமக்குரிய தீர்வைப் பெற்றுத் தாருங்கள்" - இவ்வாறு நேற்று முன்தினம் (29) நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

நீதி அமைச்சினால் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவையை ஆரம்பித்து வைக்க வருகை தந்த நீதி அமைச்சர் அலி சப்ரி சனிக்கிழமை மாலை யாழ்ப்பாண நகர் ஜும்மா பள்ளிவாசலுக்கு வருகைதந்து யாழ். முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இதன்போது அமைச்சரிடம் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறிய மக்கள்,

"நாங்கள் 1990 ஆம் ஆண்டு வலுக்கட்டாயமாக வடக்கிலிருந்து அனுப்பப்பட்டு மீண்டும் மீள்குடியேறி இங்கே வந்திருக்கின்றோம். ஆனால், எம்மில் பலர் தற்போதும் புத்தளம் பகுதியில் வசித்து வருகின்றார்கள்.



வடக்கில் முஸ்லிம் மக்களுக்கு காணிப் பிரச்சினை காணப்படுகின்றது. அதிலும் 1990 ஆம் ஆண்டு நாங்கள் இங்கே வெளியேற்றப்படும்போது இருந்த குடும்பங்கள் பல மடங்காகியுள்ளதால் பலர் யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற விரும்புகின்ற போதிலும் தற்போது காணிப்பிரச்சினை காணப்படுகின்றது.

2014ஆம் ஆண்டு மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் வடக்கில் முஸ்லிம்களுக்கு தொடர் மாடிக் கட்டடங்கள் அமைத்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அது நிறைவேற்றப்படவில்லை.

தற்போது நீங்கள் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுகின்றீர்கள். ஜனாதிபதியின் ஆலோசகராக இருக்கிறீர்கள். எனவே, எமது பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்து எமக்குரிய தீர்வைப் பெற்றுத் தாருங்கள்.

யாழ்ப்பாண முஸ்லிம்கள் சார்பில் பேசுவதற்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கூட இல்லை. நாங்கள் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைப் பெற்றுக் கொள்ளவும் முடியாது. எனவே, எமது சார்பில் எமது பிரச்சினைகளை ஜனாதிபதியிடம் எடுத்துரைத்து, எமக்குள்ள காணிப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வைப் பெற்றுத் தாருங்கள்" எனக் கோரிக்கை விடுத்தனர்.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த நீதி அமைச்சர் அலி சப்ரி,

இந்த காணிப் பிரச்சினை என்பது முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்ல, வடக்கில் அனைத்து மக்களுக்கும் காணப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் உரிய தரப்பினரிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

# கொட்டாவ அதிவேக மத்திய நிலையத்தில் 15 பேருக்கு கொரோனா

கொட்டாவ இடமாற்ற மத்திய நிலையத்தில் சேவையாற்றும் கட்டணம் அறவிடும் 15 அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த 15 அதிகாரிகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், கொட்டாவ இடமாற்ற மத்திய நிலையத்தினூடாக அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் வாகனங்களிடம் கட்டணம் அறவிடும் நடவடிக்கை நேற்றிலிருந்து (30) தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கொட்டாவ இடமாற்ற மத்திய நிலையத்தின் செயற்பாடுகளுக்காக, பொலிஸ் அதிகாரிகள் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

# 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக யாழில் அலையென திரண்ட மக்கள்


















13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்புப் பேரணி யாழ்ப்பாணம் தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில் திலீபனின் உருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தி தீபம் ஏற்றப்பட்டு ஆரம்பமானது. இப்பேரணியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டோரும் பெருந்திரளான பொதுமக்களும் கலந்துகொண்டனர். இந்தப் பேரணி கிட்டு பூங்காவில் பொதுக்கூட்டத்துடன் நிறைவடைந்தது.

(படங்கள்: யாழ். செய்தியாளர்கள்)

**வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்**

| வாகன இலக்கம் | செசி இலக்கம் | தயாரிப்பு வகை | |
|---|---|---|---|
| 16 - 7XXX | WBAAC12070AA88506 | CAR | 3161 BMW |
| NC - 8XXX | XZB50-0001578 | MOTOR COACH | PBXZB50M HINO |
| 30 - 8XXX | BB11001853 | MOTOR COACH | COASTER TOYOTA |
| LJ - 9XXX | MAT357652C8R02811 | LORRY | SFC407 TATA |

- வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை : 2022 பெப்ரவரி 01, 02ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 5.00 மணி வரை. பெப்ரவரி 03ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும்.
- டென்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 2022 பெப்ரவரி 03ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை.
- டென்டர் பத்திரத்தின் விலை : ரூபா.250/- (மீளப்பெற முடியாது)
- டென்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி : வாகன பிரிவு, இல :140, அதுருகிரிய வீதி, ஹோமாகம.
- டென்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள மற்றும் டென்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி : வாகன பிரிவு, இல :140, அதுருகிரிய வீதி, ஹோமாகம.

டென்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டென்டர் பத்திர கடித உறையின் முன்பக்க இடது புற மேல் மூலையில் **"வாகன விற்பனை"** என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டென்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.

கடன் அறவீட்டு அதிகாரி,

**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.**

இல. 165, கின்சி வீதி கொழும்பு 08

தொலைபேசி இல. : 0112 000 000

COMMERCIAL CREDIT

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஜனவரி 31ஆம் திகதி, திங்கட்கிழமை

# மூன்றாவது தடுப்பூசிக்கு முக்கியத்துவமளியுங்கள்!

உருமாறிய ஒமிக்ரொன் வகை கொரோனா தொற்று அச்சுறுத்தலே இன்னும் முடிவுக்கு வராத நிலையில், தென்னாபிரிக்காவில் மிகவும் தீவிரம் வாய்ந்த 'நியோகோவ்' என்ற புதிய வகை கொரோனா வைரஸ் பரவலை சீன ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

சீனாவின் வூஹான் நகரில் 2019 டிசம்பரில் கொரோனா தொற்றுப் பரவல் முதன்முதலாகக் கண்டறியப்பட்டது. மற்ற நாடுகளுக்கும் மெல்லப் பரவத் தொடங்கிய அந்த வைரஸ் 2020இல் உலகம் முழுதும் பரவி மனிதகுலத்தையே முடக்கியது. பலமுறை உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸுக்கு எல்பா, பீட்டா, டெல்ட்டா எனப் பெயர்கள் சூட்டப்பட்டன. ஒவ்வொரு முறையும் வைரஸ் உருமாற்றம் அடையும்போது அதன் தீவிரத்தன்மை கூடியது. டெல்ட்டா வகை தொற்றுப் பரவலின் போது உலகம் முழுதும் அதிக உயிர்ப்பலி ஏற்பட்டது.

சமீபத்தில் தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட ஒமிக்ரொன் வகை தொற்றுக்கு மிக வேகமாகப் பரவும் தன்மை இருந்தாலும், அது தீவிரமில்லாத காரணத்தினால் உயிர்ப்பலி அதிகரிக்கவில்லை.

இந்நிலையில், கொரோனா வைரஸ் பரவத் தொடங்கிய சீனாவின் வூஹான் நகரைச் சேர்ந்த ஆய்வாளர்கள் சமீபத்தில் ஆய்வொன்றை மேற்கொண்டனர். இதில் நியோகோவ் என்ற புதிய வகை கொரோனா வைரஸ் தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்டுள்ளது. இது தற்போது பரவி வரும் கொரோனா வைரஸின் உருமாறிய வகையல்ல என்றும், மத்திய கிழக்கு நாடுகளில் 2012 மற்றும் 2015இல் பரவி மிகப் பெரியளவில் நுரையீரல் பாதிப்புகளையும், உயிரிழப்புகளையும் ஏற்படுத்திய கொரோனா வைரஸ் குடும்பத்தை சேர்ந்தது என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் வகைகளை விட இது அதிக வீரியம் மிக்கது என்றும், தொற்றுப் பாதிப்புக்கு ஆளாகும் மூவரில் ஒருவர் உயிரிழக்கும் அபாயம் உள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த தொற்றால் பாதிக்கப்படுபவர்களுக்கு சாதாரண சளி, காய்ச்சலில் தொடங்கி மிகக் கடுமையான நுரையீரல் தொற்று ஏற்படும் அபாயமுள்ளதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தென்னாபிரிக்காவில் வெளவால்களிடம் இந்த நியோகோவ் வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது. ஆனால், இன்னும் ஒருமுறை உருமாற்றம் அடைந்துவிட்டால் இது மனிதர்களைத் தாக்கும் வீரியமுடையதாக மாறிவிடும் என ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். தற்போதைய கொரோனா தொற்றுப் பாதிப்பு மற்றும் தடுப்பூசிகளால் நம் உடலில் உருவாகியுள்ள நோய் எதிர்ப்பு சக்தியை நியோகோவ் வைரஸ் எளிதில் வீழ்த்தி விடும் எனக் கூறப்படுகிறது. உலக சுகாதார ஸ்தாபனமும், நியோகோவ் வைரஸின் வீரியம் குறித்து அடுத்தகட்ட ஆய்வு நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையைப் பொறுத்தவரை தற்போது நாட்டில் பரவியுள்ள கொவிட், சுனாமி அலை போன்றது என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வைத்திய ஆலோசகரான வைத்தியர் உபுல் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடு கொவிட் அலையின் உச்சக்கட்டத்தை அனுபவித்து வருகிறது. தற்போதைய நிலையில் ஒரு சமூகப் பரவல் தெளிவாகத் தெரிகிறது. மேலும், பதிவுசெய்யப்பட்ட புள்ளிவிவரங்களுக்கு மாறாக நிலைமை மோசமாக உள்ளது. பல நோயாளிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படாமலோ, பரிசோதனை செய்யாமலோ அல்லது இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் குணமடைவதால், புள்ளிவிபரங்கள் ஒப்பீட்டளவில் இருக்கின்றன. ஒரு நபர் இரண்டு முறை கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நிகழ்வுகள் உள்ளன. மேலும், ஒரு நபர் பலமுறை வைரஸால் பாதிக்கப்படுவது சாத்தியமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகின் கொரோனா நிலைமையும், இங்குள்ள நிலைமையும் மூன்றாவது தடுப்பூசி செலுத்திக் கொள்ளவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. தனிநபர்கள் பூஸ்டர் டோஸைப் பெற்றிருந்தாலும், அவர்கள் இன்னும் கொரோனா வைரஸால் பாதிக்கப்படலாம். ஆனால், தடுப்பூசி போடப்பட்டால் ஆபத்து குறைவாக இருக்கும்.

மருத்துவர்களின் அறிக்கைகளின்படி ஒமிக்ரொன் பிறழ்வால் ஏற்படும் சிக்கல்கள் குறைவாகவே உள்ளன. மேலும், 10 டெல்ட்டா வகை நோய்த்தொற்றுகள் மூன்று கடுமையான அறிகுறிகளைக் காட்டுகின்றன.

எனவே, வைரஸ் பரவுவதைத் தணிக்க பூஸ்டர் டோஸைப் பெறுவது அவசியம்.

இலங்கையில் மற்றொரு கொரோனா அலையைத் தவிர்க்க பொதுமக்கள் பூஸ்டர் தடுப்பூசியை விரைவில் பெற்றுக்கொள்ள வேண்டும். இதுவரை மருத்துவமனைகளில் கூட்டம் நிரம்பி வழியவில்லை என்றாலும், ஒவ்வொரு நாளும் பதிவாகும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அத்துடன் கொரோனா நோயாளர்களின் மரணங்களும் அதிகரித்து வருகின்றன. மக்கள் இனியும் தாமதிக்காமல், வீண் வதந்திகளை நம்பாமல் மூன்றாவது தடுப்பூசியை செலுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

# மூக்கும் முகர்வும்!



ஒமிக்ரொனுக்கு முன்புவரை, கொரோனாவின் பொதுவான அறிகுறிகளில் ஒன்று, சுவை மற்றும் முகரும் திறன் இழப்பு. பெரும்பாலும் மூக்கு வழியாக உடலுக்குள் அழையா விருந்தாளியாக வன்நுழைவு செய்யும் வைரஸ் என்பதால், கொரோனா முகர்வுத்திறனை பாதித்தமை எதிர்பார்த்த ஒன்றுதான். ஐம்புலன்களில் ஒன்றான முகர்வையும், அது சார்ந்த அறிவியல், தொழில்நுட்பங்களைக் கதைப்போம்.

முதலில் முகர்வின் அடிப்படை அறிவியல். பிரபஞ்சத்தின் அனைத்து உயிரிகளுக்கும் முகர்வுத் திறன் என்பது உண்டு. மனிதன் உட்பட நமக்கு பரிச்சயமான விலங்குகள் அனைத்துக்கும் மூக்கு என்ற உறுப்பின் மூலம் முகர்வு சாத்தியமாகிறது. ஒக்டோபஸ் போன்ற விலங்குகளுக்கு மூக்கு என்ற உறுப்பு நேரடியாக இல்லை என்றாலும், அதன் செயல்திறனைக் கொண்ட சமமான உறுப்புகள் உண்டு. இவ்வளவு ஏன், ஒரு செல் உயிரியான பக்டீரியாவுக்குக்கூட முகரும் திறன் உள்ளது என்பதைக் கண்டறிந்திருக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். அப்படியானால், வைரஸுக்கு முகரும் திறன் உண்டா? இல்லை என்பதே பதில்.

காரணம், வைரஸ் என்பது உயிரி அல்ல. அது வாழ்ந்து பெருகப் புரவலவனாக உயிருள்ள செல் தேவை. உயிரிகளின் முகர்வுத்திறனை ஒல்ஃபேக்டரி (Olfactory) என அழைக்கிறார்கள். அதைப் புரிந்து கொள்ள மனித மூக்கை அடிப்படையாக எடுத்துக் கொள்ளலாம். 2.5 சென்டி மீற்றர் அளவே நீளமான பகுதியில் 5 கோடி அளவில் ஏற்பி செல்களைக் (Receptor Cells) கொண்டதாக அமைந்திருக்கும் இப்பகுதியின் பணி ஓர் உயர் தொழில்நுட்ப தொழிற்சாலையைப் போன்றது. சுவாசிக்கப்படும் காற்றிலிருக்கும் துகள்கள் படர்ந்திருக்கும் சளிப்படத்தில் கரைந்து முகர்வு நியூரான்களால் கிரகிக்கப்படும். அது என்ன வாசனை என்பதை மூளையிலுள்ள ஒல்ஃபேக்டரி பல்ப் என்ற பகுதிக்கு மின் சமிக்ஞைகளாகக் கொண்டு செல்ல, மூளை அதை பகுத்தறிந்து நல்லதா, கெட்டதா என்பதை ஆராய்ந்து அதற்குத் தகுந்த விதத்தில் உடலின் மற்ற பாகங்களுக்கு விபரங்களை அனுப்பிவைக்கும்.

உயிரினங்களுக்குக் கிடைத்திருக்கும் பாதுகாப்பு அரண்களில் முகர்வுத்திறன் முதன்மையானது. இதனால்தான், உணவு பரிமாறப்படும் இடம் நமக்கு மகிழ்ச்சியையும், தேங்கி நிற்கும் கழிவுநீர் அருவருப்பையும் உண்டாக்குகிறது. மனித முகர்வுத்திறன் மூலம் 10 ஆயிரத்துக்கும் சற்று அதிகமான வாசனைகளை உணர முடியும் என்றுதான் நீண்ட காலமாக நம்பப்பட்டது. ஆனால், 2014 இல் வெளியான ஆராய்ச்சி முடிவு ஒன்று, மனித முகர்வால் ஒரு இலட்சம் கோடி வரை வாசனைகளை வித்தியாசப்படுத்தி பதிந்து கொள்ள முடியும் என்பதை நிரூபித்தது. அவ்வளவு திறனா என மூக்கின் மீது விரல் வைக்க வேண்டாம். காரணம், மனிதனின் உற்ற நண்பனான நாயின் ஒல்ஃபேக்டரியில் 30 கோடி ஏற்பி செல்கள் உண்டு என்பதால், நம்மைவிட ஆறு மடங்கு அதிகமாக முகர்வுத் திறன் கொண்டவை நாய்கள்.

மனித உடலிலிருந்து வரும் துர்வாசனைக்குக் காரணம் வியர்வையல்ல. வியர்வை எந்த மணமும் அற்றது. அதற்குக் காரணமாக இருப்பது பக்டீரியாக்கள். குறிப்பாக, ஸ்டபிலோகஸ் (Staphylococcus) என்ற பாக்டீரியாவில் இருக்கும் 'சி-டி லையாஸ்' (C-T lyase) என அழைக்கப்படும் நொதி. வியர்வையிலிருக்கும் வேதிப்பொருள்களுடன் கலந்து தியோல்கஹால் என்ற கெட்ட நாற்ற கலவையை உருவாக்குகிறது. உறங்கியதும் காலையில் எழுகையில் வாயில் இருக்கும் அதிகப்படி பாக்டீரியாக்கள்தான் நம்மை உடனடியாக பல் துலக்க உந்தித் தள்ளுகின்றன. இரவு தூக்கத்தில் நம் உடல் உறுப்புகள் ஓய்வெடுப்பதால், அவற்றின் செயல்திறன்களும் குறைந்துவிடுகின்றன. நாள் முழுக்க வாயில் உமிழ்ந்து கொண்டேயிருக்கும் எச்சில் பக்டீரியாவின் அளவைக் கட்டுப்படுத்தியபடி இருக்கும். இரவில் உமிழ்நீர் தயாரிப்பு குறைந்துபோவதால், பக்டீரியாக்களின் அளவு காலையில் அதிகமாகி, காலை நேர வாய் துர்நாற்றத்துக்குக் காரணமாகிறது.

ஒவ்வொரு சவாலும் ஒரு வாய்ப்பு (Every challenge is an opportunity) என்ற சொலவடையைக் கேள்விப்பட்டிருக்கலாம். நுகர்வுத்திறனை மையமாக வைத்து பல்வேறு தொழில்முனைவு வாய்ப்புகள் தொடர்ந்து கண்டறியப்பட்டு, வணிக வடிவில் வந்த வண்ணம் இருக்கின்றன. பக்டீரியாவில் இருக்கும் நொதியால் துர்நாற்றம் உடலில் இருந்து அணிந்திருக்கும் உடைகளுக்கும் சென்றுவிடுகிறது. உடைகளை சலவை செய்யும் சோப்பு, இயந்திரங்கள் எனக் காலங்காலமாக பல தொழில்முனைவுகள் இருந்தாலும், சமீபத்திய ஆராய்ச்சிகள் மற்றொரு கோணத்தில் இந்தச் சவாலை மேற்கொள்ள முயல்கின்றன. துர்வாசனை எதிர்ப்பு தொழில்நுட்பம் (Anti-odor technology) என்ற பிரிவில் நடத்தப்படும் இந்த முனைவுகளில் குறிப்பிடத்தகுந்தது நுண்ணியிர் எதிர்ப்பு துணிவகைகள் (Antimicrobial fabrics).

வியர்வை ஒட்டாமல் இருக்கும் விளையாட்டு வீரர்கள் அணியும் பளபளப்பான துணிவகைகளுடன் இதைக் குழப்பிக் கொள்ளவேண்டாம். பக்டீரியாக்களைக் கொன்றுவிடும் வேதிப்பொருட்களான ட்ரைக்லோசன் (Triclosan) போன்றவற்றைத் துணிகளை நெய்கையில் இணைத்து தயாரித்துவிட, அவற்றிலிருந்து செய்யப்படும் ஆடைகள் நுண்ணுயிர்க் கொல்லிகளாக அமைந்து, துவைத்து எடுத்த அதே வாசனையுடன் ஆடைகள் இருக்க உதவுகின்றன. வெள்ளி, இயல்பில் ஒரு நுண்ணுயிர்க்கொல்லியாகும். வெள்ளி, ஒட்சிசனுடன் இணையும்போது கிடைக்கும் வெள்ளி அயனிகள், பாக்டீரியாவுக்குப் பரம எதிரிகள் என்பதால் இன்னொரு ஆராய்ச்சி வெள்ளி உலோகத்தைத் துணி நெய்யும்போது இணைத்துக் கொள்ளும் முயற்சியில் நடக்கிறது.

பலமுறை துவைத்தாலும் இந்த வேதிப்பொருட்கள் துணியிலிருக்க வேண்டும் என்ற கடைசிக்கட்ட முயற்சி நடப்பது அறிவியல் சஞ்சிகைகளில் வெளியாகும் ஆராய்ச்சியாளர்களின் கட்டுரைகளிலிருந்து தெரிய வருவதால், விரைவில் பக்டீரியாக்வுக்கு எதிர்ப்பு சொல்லும் துணிவகைகளின் ஆடிக்கழிவு விற்பனைகளை விரைவில் காணலாம்.

அது இருக்கட்டும், மனித புலன்களில் பார்வை மங்கிப்போனால், அதைச் சரி செய்துகொள்ள கண்ணாடி போட்டுக் கொள்ளலாம். காது கேட்கும் திறன் குறைந்தால், ஹியரிங் எய்ட் வைத்துக் கொள்ளலாம். ஆனால், முகர்வுத் திறனை மேம்படுத்திக் கொள்ள அப்படி எந்தத் தொழில்நுட்பமும் இல்லையா என உங்களைப் போல எனக்கும் கேள்வி எழுந்தது. அதற்கும் பதில் தொழில்நுட்ப வடிவில் வந்துவிட்டது. ஷக் மெக்கின்லி என்ற பொறியாளர் / கண்டுபிடிப்பாளரின் முயற்சியில் உருவாகியிருக்கும் முகர்வு ரேஞ்சர் (Nasal Ranger) நம் மூக்குக்கான பைனாகுலர் எனச் சொல்லலாம். பார்ப்பதற்கு பைனாகுலர் போலவே இருக்கும் இந்த உபகரணம் நம்மைச் சுற்றியிருக்கும் வாசனை வடிவத்தை மேம்படுத்தி ஒல்ஃபேக்டரிக்கு அனுப்புவதன் மூலம் மெல்லிய வாசனைகளையும் கண்டறிந்து சேமித்துக் கொள்ளப் பயன்படுகிறது. உணவுப் பொருள் உற்பத்தி, வாசனைத்திரவிய உருவாக்கம், சுவாசிக்கும் காற்றின் தரம் போன்ற பல பிரிவுகளில் மேற்படி உபகரணம் உதவியாக இருக்கும். நம்மிடம் இருந்தால், காலையில் பார்க்கும் நண்பரின் முகத்திற்கு நேராக வைத்து "உன் காலை உணவு பொங்கல், வடைதானே?" என சொல்லி அதிர வைக்கலாம்.

நன்றி - தமிழ் இந்து

# இன்றைய நாளில்...

- 1327 – பதின்ம வயது மூன்றாம் எட்வர்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான். ஆனால், அவனது தாய் இசபெல்லாவும், தாயின் காதலன் ரொஜர் மோர்ட்டிமரும் நாட்டை ஆண்டனர்.
- 1662 – ஒன்பது மாத முற்றுகையின் பின்னர் சீனத் தளபதி கோசிங்கா தாய்வான் தீவைக் கைப்பற்றினார்.
- 1788 – ஐசக் பிறிக்ஸ், வில்லியம் லோங்ஸ்ட்ரீட் ஆகியோர் நீராவிப்படகுக்கான காப்புரிமம் பெற்றனர்.
- 1814 – பிலிப்பைன்ஸில் மயோன் எரிமலை வெடித்ததில் 1,200 பேர் உயிரிழந்தனர்.
- 1832 – ஆசியாவின் முதலாவது அஞ்சல் வண்டி சேவை (Mail coach) இலங்கையில் கண்டியில் ஆரம்பமாகியது.
- 1835 – மொரீஷியஸில் அடிமை வணிகம் ஒழிக்கப்பட்டது.
- 1880 – யாழ்ப்பாணத்திற்கும், பருத்தித்துறைக்கும் இடையில் முதலாவது தபால் வண்டி சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1884 – ஒக்ஸ்ஃபோர்ட் ஆங்கில அகராதியின் முதற்பதிப்பு வெளியானது.
- 1918 – ஜூலியன் நாட்காட்டியிலிருந்து கிரிகோரியன் நாட்காட்டிக்கு ரஷ்யா மாறியது.
- 1972 – கோலாலம்பூர் மலேசிய மன்னரால் மாநகரமாக அறிவிக்கப்பட்டது.
- 2003 – கொலம்பியா விண்ணோடம் பூமியின் வளிமண்டலத்தினுள் வெடித்துச் சிதறியதில் இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா உட்பட ஏழு பேர் உயிரிழந்தனர்.
- 2004 – சவூதி அரேபியாவில் ஹஜ் பயணத்தின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 251 பேர் உயிரிழந்ததுடன், 244 பேர் காயமடைந்தனர்.
- 2005 – நேபாள மன்னர் ஞானேந்திரா இராணுவப் புரட்சி ஒன்றை நடத்தி நாடாளுமன்றத்தைக் கலைத்து நாட்டைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.
- 2005 – கனடா, சம பாலின திருமணத்தை சட்டபூர்வமாக்கிய நான்காவது நாடானது.
- 2012 – எகிப்தில் கால்பந்து அரங்கு ஒன்றில் இரு அணி ரசிகர்களிடையே இடம்பெற்ற மோதலில் 74 பேர் உயிரிழந்தனர்.
- 2021 – மியான்மர் இராணுவப் புரட்சியில் ஆங் சான் சுகி கைதுசெய்யப்பட்டார். இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது.

# நக்கல் நமசிவாயம்



# விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும் சட்டமூலம் உடனடியாக அவசியம்

## நாடாளுமன்றத்தில் அனுமதி பெறப்பட வேண்டுமென சஜித் வலியுறுத்து





உரத்தை தடை செய்து விவசாயிகளை பேரழிவில் ஆழ்த்திய அரசாங்கம், குறித்த விவசாயிகள் சிரமப்பட்டு நெற்செய்கை மேற்கொண்டு அறுவடை செய்யத் தயாராகும் போது, சீனா மற்றும் இந்தியாவிலிருந்து அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்காக உடனடியாக நஷ்டஈடு வழங்க வேண்டும் என்பதோடு அதற்கான பிரேரணைகளை அரசாங்கம் உடனடியாக நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

விவசாயத்தின் எதிர்காலம் குறித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைநோக்கு, கொள்கை மற்றும் வேலைத்திட்டம் ஆகியவை உள்ளடங்கும் முகமாக "ஐக்கிய கமத்தொழிலாளர் பிரகடனம்" நாட்டிற்கு கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (29) பொலன்னறுவை பராக்கிரம சமுத்திரத்திற்கு முன்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கற்பனை ரீதியாக உரத்தை தடை செய்து இந்நாட்டின் விளைநிலங்களை தரிசு நிலங்களாக மாற்றும் சதித்திட்டத்தை கையில் எடுத்துள்ள அரசாங்கம், தனது கூட்டாளிகளுக்கும், தனது எடுபிடிகளுக்கும் கோடிக்கணக்கில் சம்பாதிக்க வாய்ப்பளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பொலன்னறுவை உட்பட ரஜரட்ட பகுதிகளை மையமாக கொண்டே தானிய களஞ்சிய தளமாக இலங்கை உருவானது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அப்படியான வரலாற்று சிறப்புமிக்க பிரதேச விவசாய மக்களுக்கு சீனா மற்றும் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியை ஊட்டும் அளவிற்கு தேசப்பற்றுமிக்க அரசாங்கம் கீழ்தரமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

2010ஆம் ஆண்டு ஆகும்போது அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருந்த நம் நாட்டை, தற்போது சீன அரிசிகளினால் நிரப்பும் நிலைக்கு இந்த அரசாங்கம் தள்ளியுள்ளது என்று கூறிய எதிர்க்கட்சித் தலைவர், துர்ப்பாக்கிய நோக்கு அமுலுக்கு வந்ததும் முழு நாட்டிலும் காண கிடைப்பது பஞ்சத்திற்கான அறிகுறிகளாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த சந்தர்ப்பத்தில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்காக உடனடியாக நஷ்டஈடு வழங்க வேண்டும் என்பதோடு, அதற்கான பிரேரணைகளை அரசாங்கம் உடனடியாக நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு தேவையான அனைத்து ஒதுக்கீடுகளுக்கும் நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி நிபந்தனையின்றி ஆதரவு வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த நஷ்டஈடு சிறியளவிலான தொகை அன்றி ஏற்பட்ட பாதிப்புகளுக்கு ஏற்ற வகையில் உரிய நஷ்டஈட்டு தொகையை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

விளை நிலங்களை கிராமிய அபிவிருத்தியின் கேந்திர நிலையமாக மாற்றுவதோடு விவசாயிகளை பலப்படுத்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்புவதற்கான பொறுப்பை ஐக்கிய மக்கள் சக்தி பொறுப்பேற்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது ஒரு சிலர் அமைச்சு பதவி மற்றும் இராஜாங்க அமைச்சு பதவிகளை பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டு புதிய அரசாங்கமொன்றை உருவாக்க முனைவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஐக்கிய மக்கள் சக்தி சந்தர்ப்பவாத முறைமையை முற்றாக மாற்றியமைப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய கமத்தொழில் கொள்கை பிரகடனத்தை நாள் மற்றும் கால படிமுறைமையின் பிரகாரம் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், விவசாயிகளின் வாழ்க்கையுடன் விளையாடும் யுகத்திற்கு முற்றிப்புள்ளி வைப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# கொரோனா தடுப்பூசியை செலுத்தி ஒருவருட பூர்த்தியை கொண்டாடும் நிகழ்வு







(இக்பால் அலி)

ஜனாதிபதியின் தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ், நாடு தழுவிய ரீதியில் 'ஐக்கியமாக ஒரே மனதுடன் வலுவானதாக பெருந்தொற்றுக்கு சவால்விடுத்த மனித நேயத்திற்கு செய்யும் மரியாதை' எனும் தொனிப் பொருளில் கொரோனா தடுப்பூசியை செலுத்தி ஒரு வருட பூர்த்தியினை கொண்டாடும் நிகழ்வு அக்குரணை சுகாதார வைத்திய பணிமனையின் ஏற்பாட்டில் அக்குறணை பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் அக்குரணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஹரிஸ்பத்துவ தேர்தல் தொகுதி அமைப்பாளருமான திலக் ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் அக்குரணைப் பிரதேசத்தில் கொரோனா தொற்று நோயினை கட்டுப்படுத்துவதற்காக செயற்பட்ட அக்குரணை பிரதேச சபை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், அலவத்துகொட பொலிஸ் நிலையம், அக்குரணை ஜம்இய்யதுல் உலமா சபை, அக்குரணை ஜும்ஆப் பள்ளிவாசல் மற்றும் பாதுகாப்புப் படையினர் ஆகியோருக்கு சேவையாற்றியமைக்காக சான்றிதழ்கள், விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.





ஜோன் டி சில்வாவின் 100ஆவது வருட நினைவு தின நிகழ்வு எல்பின்ஸ்டன் மண்டபத்தில் சனிக்கிழமை (29) காலை இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தலைமையில் நடைபெற்றபோது நிலயத்தின் பணிப்பாளர் நாயகம் டீ.எம்.எஸ்.திசாநாயக்க குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் அமரர் ஜோன் டி சில்வாவின் பாடல்கள் அடங்கி இறுவட்டை அமைச்சர், பாடலாசிரியர் ஜயந்த அரவிந்தவுக்கு வழங்குவதையும் அருகில் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் மற்றும் கலந்துகொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

# நல்லாட்சி அரசாங்கத்திற்கு முன்பு மலையகத்தில் முறையான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவில்லை

## மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஸ்ரீதரன் தெரிவிப்பு





1977ஆம் ஆண்டு முதல் மலையகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சுப் பதவிகள் வகித்தவர்களால் தோட்டப் பகுதிகளில் முறையான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் நோட்டன் தோட்ட ஆலயத்துக்கான குடிநீர் விநியோகத்தை ஆரம்பித்து வைத்து பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் நோட்டன் தோட்டத் தலைவர் நவரட்னராஜாவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தொழிலாளர் தேசிய முன்னணியின் நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர் இராமச்சந்திரன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் நோட்டன் பிரதேச அமைப்பாளர் நந்தகோபால் ஆகியோரும் தோட்ட மக்களும் கலந்து கொண்டனர்.

அங்கு ஸ்ரீதரன் தொடர்ந்து பேசுகையில்,

1977ஆம் ஆண்டிலிருந்து மலையகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் கிடைத்தபோதும் அவர்களால் மலையகப் பெருந்தோட்ட பகுதிகளில் காணப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏனைய உரிமைகளையும் உரிய முறையில் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. அந்த அமைச்சுப் பதவிகளை வகித்த அவர்களின் வழித்தோன்றல்கள் இன்று இதனை ஒப்புக் கொள்கின்றார்கள்.

ஆனால், மலையக மண்ணின் மைந்தரான திகாம்பரம் நல்லாட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்று மக்களுக்கு உரிய வகையில் சேவையாற்றியதன் காரணமாக அவரை மக்கள் சேவைக்காக இன்னும் முன்னுதாரணமாக கொள்கின்றார்கள்.

இன்று வங்குரோத்து நிலையை அடைந்துள்ள சில அரசியல்வாதிகள் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் திகாம்பரம் தனது அரசியல் அதிகாரத்தின் ஊடாக மக்களுக்கு பல உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தபோதும் ஆட்சி மாற்றத்தின் காரணமாக ஏனைய உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் காலம் வெகுதூரமில்லை.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஊடாக நோட்டன் தோட்ட மக்களுக்கு கடந்த காலங்களில் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளோம். பின்தங்கிய பிரதேசம் என்று கருதாமல் தொடர்ந்து இந்தத் தோட்ட மக்களுக்கு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் திகாம்பரத்தின் ஆலோசனைக்கேற்ப எதிர்காலத்திலும் உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுக்க உள்ளோம்.

தற்போதைய அரசாங்கம் மக்களின் எந்தத் தேவையையும் பூர்த்தி செய்வதாக தெரியவில்லை.

அரசாங்கம் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. மக்களுக்கு தினந்தோறும் கையேந்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆட்சி மாற்றம் ஒன்றை சகல மக்களும் எதிர்பார்க்கின்றனர்.

மலையக மக்களுக்கு கோதுமை மாவை கொடுத்து ஏமாற்ற முடியாது.

உரிய காலத்தில் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தாத காரணத்தினால் மாகாணசபை உறுப்பினர்களால் மக்களுக்கு சேவையாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்றார்.

# நீதிக்கான அணுகல் செயற்றிட்டத்தின்கீழ் யாழ். பல்கலையில் விசேட கலந்துரையாடல்












(யாழ். செய்தியாளர்)

நீதி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் "நீதிக்கான அணுகல்" செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்துடனான கலந்துரையாடல் நிகழ்வு நேற்று (30) காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், நீதி அமைச்சர் அலி சப்ரி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ். மாவட்ட ஒருக்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன், பெருந்தோட்டப் பகுதிகளுக்கான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், நீதி அமைச்சின் செயலாளர் பி.கே. மாயாதுன்ன, நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.துஷார, தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின்போது, பல்கலைக்கழக சமூகத்தின் கேள்விகளுக்கு நீதி அமைச்சர் அலி சப்ரி, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் நீதி அமைச்சின் செயலாளர் பி.கே. மாயாதுன்ன ஆகியோர் பதிலளித்தனர்.






# அட்டாம்பிட்டியில் நீரில் மூழ்கி ஐந்து பேர் பரிதாபப் பலி

## ஒருவரையொருவர் காப்பாற்ற முயன்றபோது நீச்சல் தெரியாததால் விபரீதம்

## திதி கிரியைகளுக்குச் சென்றவர்களுக்கு ஏற்பட்ட சோகம்



(எம்.செல்வராஜா, நடராஜா மலர்வேந்தன், கிருஷாந்தன்)

பதுளை, அட்டாம்பிட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அட்டாம்பிட்டிய தோட்ட முதலாம் பிரிவிலிருந்து கெரண்டிஎல்ல பகுதியில் உள்ள உமாஓயா ஆற்றில் நீராடச் சென்ற ஐவர் திடீரென ஏற்பட்ட சுழியில் சிக்குண்டு ஆற்றில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் (29) பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்தப் பிரிவில் வசித்த கடந்த வருடம் இறந்த ஜெயராம் என்பவரது ஓராண்டு நினைவஞ்சலி திதி நிகழ்வில், கடந்த 28ஆம் திகதி கலந்து கொண்ட பின் உறவினர்களில் 11 பேர் சம்பவ தினம், வீட்டிலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கெரண்டிஎல்ல, உமாஓயா ஆற்றில் நீராடச் சென்றுள்ளனர். இவர்கள் அனைவரும் 20 தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகளாவர்.

ஆற்றில் நீராடிவிட்டு 6 பேர் கரைக்குச் சென்ற வேளையில், இளைஞர் ஒருவரும், 4 யுவதிகளும் ஆற்றிலிருந்த கற்பாறையொன்றில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கையில், இளைஞர் தவறி ஆற்றில் வீழ்ந்துள்ளார். அவரை காப்பாற்றுவதற்காக யுவதிகள் ஒவ்வொருவரும் கைகளைப் பற்றிக்கொண்டு ஆற்றில் இறங்கிய வேளையில், திடீரென ஏற்பட்ட சுழியில் சிக்குண்டு ஆற்றில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக அட்டாம்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட உத்தியோகத்தர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து தோட்ட இளைஞர்களுடன் இணைந்து மீட்பு பணியில் ஈடுபட்டு உயிரிழந்தோரின் நான்கு சடலங்களை நேற்று முன்தினம் (29) மீட்டுள்ளனர். மேலும் காணாமல் போன ஒருவரை தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு நேற்று(30) மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டவர்களில் நெலுவ, கின்ரூஸ் தோட்டத்தைச் சேர்ந்த ஜெயராம் காஞ்சனப்பிரியா (வயது21),



செல்வகுமார் பரிமளாதேவி (வயது19), ஹட்டன், திம்புலப்பத்தனையைச் சேர்ந்த அடையப்பன் பவானி சந்திரா (வயது24), அட்டாம்பிட்டிய, முதலாம் பிரிவைச் சேர்ந்த வனராஜா டேவிட்குமார் (வயது23) ஆகியோர் அடங்குவர். ஆற்றில் மூழ்கி காணாமல் போயுள்ள நெலுவ, கின்ரூஸ் தோட்டத்தைச் சேர்ந்த செல்வகுமார் சசிப்பிரியா (வயது20) என்ற யுவதியே நேற்று மாலை மீட்கப்பட்டார் என அட்டாம்பிட்டிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சடலங்களை மீட்கும் பணிக்கு தியத்தலாவ இராணுவ முகாமைச் சேர்ந்த சுழியோடும் வீரர்களின் உதவியும் பெறப்பட்டுள்ளன. உயிரிழந்த எஸ்.சசிப்பிரியா, எஸ்.பரிமளாதேவி ஆகியோர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். இச்சம்பவம் இப்பகுதியில் பலத்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கி வெடித்ததில் சார்ஜன்ட் உயிரிழப்பு

## ஹப்புத்தளையில் சம்பவம்

(எம்.செல்வராஜா)

ஹப்புத்தளை விசேட அதிரடிப்படையின் சார்ஜன்ட் ஒருவர் வைத்திருந்த துப்பாக்கி வெடித்ததில், சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் ஹப்புத்தளை அதிரடிப்படை முகாமில் நேற்றுமுன்தினம் (29) மாலை இடம்பெற்றுள்ளது.

54 வயதுடைய அதிரடிப்படை சார்ஜன்ட் தனது துப்பாக்கியை சுத்தம் செய்துகொண்டிருந்த வேளையில், எதிர்பாராதவிதமாக அத்துப்பாக்கி வெடித்துள்ளது.

துப்பாக்கியின் ரவை சார்ஜனின் தலைப்பகுதியை துளைத்துச் சென்றதினால், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.



இறந்தவரின் உடல் தியத்தலாவை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து ஹப்புத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ருவன்புர அதிவேகப் பாதை 2ஆம் கட்டப் பணிகளுக்கு நிலம் தெரிவு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

ருவன்புர அதிவேகப்பாதையின் 25கிலோ மீற்றர் தூர வீதியின் முதற்கட்டமான கஹதுடுவ முதல் இங்கிரிய வரையிலான அமைப்புப் பணிகள் தற்போது இடம்பெற்றுவருவதுடன், 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இப்பணிகள் நிறைவு பெறவுள்ளதாக இத்திட்டத்தின் நிறைவேற்றுக் காரியாலய அதிகாரிகள் நேற்றுமுன்தினம் (29) ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இதேவேளை, இங்கிரிய முதல் பெல்மதுளை வரையிலான இதன் இறுதிக்கட்டப் பணிகளுக்கு பொருத்தமான நிலத்தினை தெரிவு செய்யும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள ஆறு நிலப் பிரதேசங்களில் மிகவும் பொருத்தமானதை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மொரட்டுவை பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் இயந்திர தொழில்நுட்ப நிறுவனம் ஆகியன மேற்கொண்டு வருவதாகவும் இவ்வதிகாரிகள் தெரிவித்தனர்.

# பலாங்கொடை நகர சபையின் புதிய தலைவர் பதவியேற்பு



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டமைப்பின் கீழ் இயங்கி வந்த பலாங்கொடை நகர சபையின் நிர்வாகம் பொதுஜன பெரமுன வசமானதையடுத்து, புதிய தலைவராக வசந்த குணரத்ன கடந்த வெள்ளிக்கிழமை பதவியேற்றார்.

2022 வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டதையடுத்து, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிகிரி கொப்பேகடுவ இந்நகர சபையின் அதிகாரத்தை கலைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதன் பின் புதிய நிர்வாக அதிகாரத்தை தெரிவு செய்யும் கூட்டம் நடைபெற்றபோது, எதிர்க்கட்சித் தலைவராக கடமையாற்றிய வசந்த குணரத்ன, அதிகப்படியான வாக்குகளால் சபையின் தலைவராக தெரிவானார்.

வாக்களிப்பில் பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட சபைத் தலைவருக்கு 9 வாக்குகளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 6 வாக்குகளும் கிடைத்தன. இத்தெரிவின்போது மக்கள் விடுதலை முன்னணியின் ஒரு உறுப்பினரும் வாக்களிக்காது நடுநிலை வகித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதுவரை காலமும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கிய அதிகாரத்தில் இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இம்முறை பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவளித்துள்ளது.

இதேவேளை, நகர சபையின் கடந்த அதிகாரத்திலும் சபையின் உபதலைவராக விளங்கிய எம்.டி.எம்.ரூமி தொடர்ந்தும் சபையின் உபதலைவராக கடமையாற்றுகிறார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பெருந்தோட்ட வைத்தியசாலைகள் 'சீ' தரத்திலிருந்து உயர்த்தப்பட வேண்டும்

## கண்டி மனித அபிவிருத்தித் தாபனம் கோரிக்கை

(கண்டி நிருபர்)

பெருந்தோட்ட வைத்தியசாலைகளை அரச வைத்திய சாலைகளாக்கும் விடயத்தில் மனித அபிவிருத்தித் தாபனம் அளப்பரிய பங்களிப்புகளைச் செய்துள்ளது. இது தொடர்பாக வழங்கப்பட்ட அமைச்சரவை அனுமதியைப் பாராட்டுவதாக கண்டி மனித அபிவிருத்தித் தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பீ.பீ.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, பெருந்தோட்ட வைத்தியசாலைகளும் ஆகக் குறைந்தது சீ தரத்திலிருந்து படிப்படியாக ஏனைய தரங்களை அடைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

கண்டிலுள்ள மேற்படி தாபனத்தின் தலைமையகத்தில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுமார் 30 வருடங்களுக்கு மேல் பெருந்தோட்டப் பகுதி சுகாதார விடயங்கள் தொடர்பாக குரல்கொடுத்து பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்த ஒரு நிறுவனமாக மனித அபிவிருத்தி தாபனம் உள்ளது. அந்த அடிப்படையில் கடந்த ஆறு வருடகாலமாக நாம் முன்னெடுத்த பாரிய போராட்டம் ஒன்று வெற்றியடையும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது, ஏனைய சமூகங்கள் இந்த நாட்டில் கடந்த 150 வருடகாலமாக அனுபவித்து வந்த சுகாதார வசதிகள் எதையும் பெருந்தோட்ட மக்கள் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலைமையே இதுவரை காணப்பட்டது. தற்போது, அது மாற்றமடையும் ஒரு நிலைமை காணப்படுகிறது. காரணம் கடந்த 24ஆம் திகதி அமைச்சரவை வழங்கிய அனுமதியை மேற்படி 150 வருட வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாக கருத முடியும்.

ஏனெனில், கடந்த 150 வருடமாக பெருந்தோட்ட மக்களது தோட்ட வைத்தியசாலைகளில் ஏனைய மக்களுக்கு வழங்கப்பட்டது போன்ற சுகாதார வசதிகள் இருக்கவில்லை. வைத்தியசாலைகள் என்று சொல்லக்கூடிய பெருந்தோட்ட நிர்வாகங்களின்கீழ் இருந்துவந்த தோட்ட மருந்தகங்களே வைத்திய சேவைகளை வழங்கி வந்தன.

இதேவேளை, பெருந்தோட்டம் அல்லாத பகுதிகளில் வசிக்கும் ஏனைய பிரஜைகளுக்கு மத்திய அரசு அல்லது மாகாண அரசு சுகாதார சேவையினை வழங்கிவந்தது. இதனை ஒரு உரிமை மீறலாக நாம் எடுத்துக்காட்டி வந்தோம். பல கட்டங்களில் பேச்சு வார்த்தைகளை நடத்தி வந்தோம். அவ்வாறான எமது முன்னெடுப்புகளின் ஓர் அங்கமாகவே பெருந்தோட்டப் பிரதேசங்களில் உள்ள சுமார் 450 தோட்ட வைத்தியசாலைகளை அரசுடைமையாக்க அல்லது அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வர அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதில் முதற்கட்டமாக 59 வைத்தியசாலைகளை பொறுப்பேற்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை எம்மால் இதற்கான பல்வேறு வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன. அதனடிப்படையிலே இது நடந்துள்ளது. எனவே எமது மேற்படி பாரிய வேலைத்திட்டத்தை முறையாக நிறைவேற்ற முன்வந்துள்ள அரசு மற்றும் தொடர்புடைய அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள் என பலதரப்பினருக்கும் நாம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

ஏனைய சமூகங்கள் அனுபவித்து வந்த கல்வி உரிமையும் இதேபோல் 1974 இற்கு முற்பட்ட காலத்தில் தோட்ட நிர்வாகங்களின் அதிகாரத்தின் கீழே இருந்தது. அரசு அதனை படிப்படியாகப்



பொறுப்பேற்று இன்றைய இந்த நிலைக்கு கொண்டுவந்தது. அதனூடாக கல்வியில் யாவும் முற்றுப் பெற்றுவிட்டது என்ற கருத்தல்ல. அன்றைய காலக் கட்டத்தைவிட பல மடங்கு இன்று முன்னேற்றம் காணப்படுகிறது.

இதற்கு அரசு மட்டுமல்ல, அரச சார்பற்ற பல நிறுவனங்கள் முன்வந்து பௌதீக மானிட வளங்களை வழங்கின. சீனா, இந்திய அரசு போன்ற பல நிறுவனங்களும் ஆசிரியர் பயிற்சி மற்றும் பௌதீக வளங்களை வழங்கிவந்தன.

இதே அடிப்படையில், பெருந்தோட்ட வைத்தியசாலைகளும் ஆகக் குறைந்தது சீ தரத்தில் இருந்து படிப்படியாக ஏனைய தரங்களை அடைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

அதாவது, பெருந்தோட்ட வைத்தியசாலைகள் யாவும் கிராமிய வைத்தியசாலைகளாக, ஆதார வைத்திய சாலைகளாக அல்லது மாவட்ட வைத்தியசாலைகளாக, மாகாண சபை வைத்தியசாலைகளாக அல்லது மாவட்ட வைத்தியசாலைகளாக உயர்ந்து தேசிய வைத்தியசாலைகள் வரை அவை மேலே செல்ல வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அன்று சாதாரண தோட்டப் பாடசாலைகளாக இருந்தவை இன்று மத்திய மகா வித்தியாலயங்களாகவும் தேசிய பாடசாலைகளாகவும் மாற்றியுள்ளமை இதற்கு சிறந்த உதாரணமாகும் என்றார்.

# மத்திய மாகாணத்தின் நிறுவனங்களுக்கு புதிய ஆணையாளர்கள் நியமனம்





(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்திலுள்ள மூன்று நிறுவனங்களுக்கு புதிய ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே இதற்கான நியமனக் கடிதங்களைக் கையளித்தார்.

கண்டி மாநகர சபை ஆணையாளராக ஐ.டி.ஜீ. விஜேதிலக்க, மத்திய மாகாண கூட்டுறவு ஆணையாளராக எஸ்.பீ. நவரத்ன, போக்குவரத்து ஆணையாளராக எஸ்.பீ.தென்னகோன் ஆகியோர் நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

கண்டியிலுள்ள மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்தில் வைத்து இவை கையளிக்கப்பட்டன.

# Ride My Wave 2022 மூலம் அலையை ஏற்படுத்தும் Red Bull

சர்வதேச அலைச் சறுக்கல் சம்பியன்ஷிப் போட்டியான "Ride My Wave 2022" போட்டியை 2022 ஜனவரி 29ஆம் மற்றும் 30ஆம் திகதிகளில் இலங்கையின் தென்பிராந்தியத்தின் ஹிக்கடுவ கரையோரப் பகுதியில் நடத்துவதாக Red Bull அண்மையில் அறிவித்தது.

இந்த நிகழ்வானது பொழுதுபோக்கான மற்றும் துறைசார் அலைச் சறுக்கு வீரர்களுக்குத் திறந்திருப்பதுடன், இரண்டு நாட்கள் நடைபெறவிருக்கும் போட்டி உள்நாட்டு மற்றும் சர்வதேச வீரர்கள் நேருக்கு நேர் போட்டியிடுவதன் ஊடாக உள்ளூர் சமூகத்துக்கு விருந்தளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்வின் ஊடாக அலைச் சறுக்கு வீரர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குவது மற்றும் உலகளாவிய ரீதியில் பரந்த ஈர்ப்பைக் கொண்ட இந்த விளையாட்டை ஊக்குவிப்பதுமே Red Bull இன் நோக்கமாகும். இலங்கையிலுள்ள அலைச் சறுக்கு சமூகம், சுற்றுலாத்துறையின் ஊடாக உள்நாட்டு பொருளாதாரத்துக்குப் பங்களிப்பதைத் தவிர, அனைவரும் அறியாத உண்மையான – கரையோரம் மற்றும் சுற்றுச்சூழலை அழகிய நிலையில் பேணிவருகிறது.

ஒரு தீவாக இலங்கை மூலோபாய அமைவிடத்தைக் கொண்டிருப்பதால் அலைச் சறுக்கலுக்கான கேந்திரநிலையமாக இதனை மேம்படுத்த முடிவதுடன், இதையொட்டி வெளிநாட்டு வருவாயை உருவாக்குவதுடன், இலங்கையிலுள்ள அலைச் சறுக்கு, கடலோர சமூகத்தினருக்கு





இலாபகரமான வாழ்வாதாரங்களை வழங்க முடியும். விளையாட்டில் புலமையைக் காண்பிப்பதற்கு வெவ்வேறு மட்டங்களைக் கொண்டிருப்பதால் பூகோள ரீதியில் அலைச் சறுக்கலுக்கு இலங்கையை பொருத்தமான இடமாக்குகிறது.

நடைபெறவிருக்கும் இந்நிகழ்வு தொடர்பான ஊடக சந்திப்பில் அஷான் டயஸ் வழங்கிய நட்புரீதியான கலந்துரையாடலைத் தொடர்ந்து லக்ஷித மதுஷான் அல்லது லக்கியின் வெற்றிக் கதை சிறிய குறும்படமாகக் காண்பிக்கப்பட்டது. லக்கி, இலங்கையின் தெற்குப் பகுதியைச் சேர்ந்த மற்றும் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்ற ஒரு துறைசார் அலைச் சறுக்கு வீரராவார். Ride My Wave இன் வெற்றியாளராக அவரின் கதை மற்றும் காதலை வீடியோ குறும்படம் வெளிப்படுத்தியது. "அலைச் சறுக்கல் விளையாட்டை உயரடுக்கு விளையாட்டாக வளர்ப்பதற்கு இலங்கைக்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. எமது நாட்டைச் சுற்றி சமுத்திரம் காணப்படுகின்றமை இதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. Red Bull Ride My Wave இல் அலைச் சறுக்கலுக்காக மாத்திரம் கலந்துகொள்ளக் கூடாது. அனுபவத்தைப் பெற நீங்கள் இதில் கலந்துகொள்ள வேண்டும்" என்றார்.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தனது வாழ்த்துச் செய்தியில் : "உள மற்றும் உடல் ரீதியான சுமையைத் தணிப்பதற்கு அலைச் சறுக்கல் சிறந்த விளையாட்டாகும். அதேநேரம், இது ஒலிம்பிக் விளையாட்டாகும். எமது நாட்டில் திறமையான அலைச் சறுக்கு வீரர்கள் உள்ளனர். அவர்களின் திறமையை வெளிக்கொணர்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும் Red Bull இன் முயற்சிகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குகின்றோம். அலைச் சறுக்கு சுற்றுலாத்துறைக்கு நன்மையை ஏற்படுத்தும். Red Bull இன் ஆதரவுடன் இலங்கையிலுள்ள அலைச் சறுக்கு வீரர்கள் ஒருநாள் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். Red Bull Ride My Wave ஆனது வெறும் போட்டியல்ல. கற்றலுக்கான அனுபவமாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

Red Bull Ride My Wave இன் போட்டிக்கான பணிப்பாளர் சந்திக துஷார அல்லது மம்போ உள்நாட்டில் குறித்த விளையாட்டுக்குக் காணப்படும் முக்கியத்துவம் தொடர்பான அமைச்சரின் அதே நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார். "ஆரம்பம் முதல் நான் Red Bull Ride My Wave உடன் இருக்கின்றேன். இளமையான மற்றும் வளர்ந்துவரும் அலைச்சறுக்கு வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த இது ஒரு சிறந்த நிகழ்வாகும். இந்நிகழ்வு வெளிப்படையாக சர்வதேச தரங்களைக் கொண்டுள்ளதுடன், இதன் ஒரு பகுதியாக இருப்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்" எனக் குறிப்பிட்டார்.

அலைச் சறுக்கல் மற்றும் பிற விளையாட்டுகளில் உள்ளூர் இளைஞர்களுக்கு அதிகாரமளித்து, அவர்களிடையே விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் எல்லையை விஸ்தரிப்பதை Red Bull நோக்காகக் கொண்டுள்ளது. உத்தியோகபூர்வ அங்கீகாரம் மூலம் வாழ்க்கை முறை பற்றிய தவறான எண்ணங்களை அகற்றுவதற்கும், உள்நாட்டிலும் உலக அளவிலும் ஒரு தளத்தைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு ஊக்கமளிப்பதாக இது அமையும் என "Ride My Wave" இன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இந்நிகழ்வானது பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட்டிருப்பதுடன், உலகம் முழுவதிலிருந்தும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அலைச் சறுக்கு வீரர்கள் கலந்துகொள்வர்.

# மக்கள் வங்கியின் கந்தப்பளை சேவை நிலையம் புதிய இடத்திற்கு மாற்றம்





மக்கள் வங்கியின் கந்தப்பளை சேவை நிலையத்தைப் புதிய இடத்தில் திறந்து வைக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதன்மூலம் கந்தப்பளை பிரதேச மக்களுக்கு அதிநவீன டிஜிட்டல் வங்கியியல் சேவைகளை பெற்றுக்கொடுக்கக் கூடியதுடன், இங்கு நிறுவப்பட்டுள்ள மக்கள் வங்கியின் தன்னியக்க டெல்லர் இயந்திரத்தின் மூலம் பணத்தை மீளப்பெற்றுக் கொள்ளும் வசதிகளை கிழமையின் 7 நாட்களும், 24 மணிநேரமும் அனுபவித்திட முடியும்.

இந்நிகழ்வில் இலங்கை மத்திய வங்கியின் நுவரெலியா பிரதேச முகாமையாளர் அநுர தீகலகே, நுவரெலியா உதவி பொலிஸ் மாஅதிபர் பி.எம்.எஸ்.எல்.பி.பஸ்நாயக்க, மக்கள் வங்கியின் நுவரெலியாவின் முன்னாள் பிரதேச முகாமையாளரும், தற்போதைய கண்டி பிரதேச முகாமையாளருமான கபில திசாநாயக்க, நுவரெலியா பிரதேச முகாமையாளர் வினோதிகா பீரிஸ், நுவரெலியா கிளை முகாமையாளர் அநுர அபேகோன், கந்தப்பளை சேவை நிலைய முகாமையாளர் கிரிஷாணி செல்வகுமார் ஆகியோருடன் வங்கி ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். நாடு முழுவதும் 741 கிளைகள் மற்றும் சேவை நிலையங்களை கொண்டுள்ளதுடன், 14 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள நாட்டின் முன்னோடியான நிதிச்சேவை வழங்குனராக மக்கள் வங்கி விளங்குகின்றது.

# LANKAQRஐ தேசிய மட்டத்தில் ஊக்குவிக்க கொமர்ஷல் வங்கியின் தலைமையில் கம்பஹாவில் நிகழ்வு

LANKAQR தேசிய மட்ட ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தின் அண்மைய நிகழ்வு கம்பஹா நகர சபை மைதானத்தில் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்றது. இலங்கை மத்திய வங்கியோடு இணைந்து கொமர்ஷல் வங்கி இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. பெருந்திரளான அதிதிகள், பங்காளி வங்கிகளின் உறுப்பினர்கள், வர்த்தகர்கள் மற்றும் அழைக்கப்பட்டிந்த விருந்தாளிகள் பலரும் இதில் பங்கேற்றனர்.

2022ல் இடம்பெற்ற முதலாவது LANKAQR நிகழ்வு இதுவாகும். சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் மத்தியில் LANKAQR கொடுப்பனவு முறையை குறைந்த செலவிலான டிஜிட்டல் கொடுப்பனவு முறையாகவும், நடமாடும் கருவிகள் மூலம் மிகவும் பாதுகாப்பான மற்றும் வசதியான கொடுப்பனவு முறையாகவும் அமுல் செய்வதே இதன் நோக்கமாகும்.

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சரும், அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சரும், டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்நிகழ்வில் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டார்.

கம்பஹா நகர மேயர் ஏரங்க சேனநாயக்க, மத்திய வங்கி உதவி ஆளுநர் தர்மசிறி குமாரதுங்க ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.



அமைச்சர்களும், ஏனைய அதிதிகளும் கொமர்ஷல் வங்கி சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் இணைந்து LANKAQR தேசிய பிரசார வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

இந்நிகழ்வில் பொருள் கொள்வனவில் ஈடுபட்டு தமது கொடுப்பனவுகளை Q+ கொடுப்பனவு செயலி மூலம் செலுத்திய வாடிக்கையாளர்களுக்கும், உள்ளூர் சில்லறை கொள்வனவானவர்களுக்கும் கொமர்ஷல் வங்கி 35 சதவீத பணத்தை கழிவு சலுகையாக மீள வழங்கியது. தினசரி ஆகக் கூடியது 750 ரூபா என்ற வகையில் இந்த சலுகை வழங்கப்பட்டது. ஜனவரி 31ஆம் திகதி வரை இந்தச் சலுகை தொடரும் என வங்கி அறிவித்துள்ளது.

கம்பஹா பிரதேசத்தில் சில்லறை வர்த்தகர்களைச் சென்று சந்தித்து பதிவுகளை ஊக்குவிக்கும் பணிகளில் ஈடுபடுவதற்கு கொமர்ஷல் வங்கி ஒரு குழுவையும் நியமித்துள்ளது. அத்தோடு Q+ வர்த்தகர்கள் செயலி மூலம் LANKAQR கொடுப்பனவு மேடையில் வர்த்தகர்கள் இணைந்து கொள்வதையும் இந்தக் குழு ஊக்குவிக்கும்.

Q+ கொடுப்பனவு செயலியானது நாட்டில் மிகத் துரிதமாக வளர்ச்சி கண்டு வரும் QR செயலியாகும். QR அடிப்படையிலான முதலாவது கொடுப்பனவு செயலி LANKAQR மூலமே அறிமுகம் செய்யப்பட்டது. தற்போது Q+ கொடுப்பனவு செயலி இலங்கையில் VISAQR, MasterQR மற்றும் UnionPayQR என்பனவற்றோடு இசைந்து செல்லக் கூடிய ஒரேயொரு செயலியாகவும் காணப்படுகின்றது. இலங்கையின் முதல் 100 சதவீத கார்பன் பாவனையினை குறைத்த வங்கி, உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் தொடர்ந்தும் 11 வருடங்களாக பட்டியலிடப்பட்ட ஒரேயொரு இலங்கை வங்கி, கொமர்ஷல் வங்கியாகும். கொமர்ஷல் வங்கி வலையமைப்பினைக் கொண்ட 268 கிளைகள் மற்றும் 938 தானியங்கி இயந்திரங்களை கொண்டு இயங்குகின்றது. கொமர்ஷல் வங்கி இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத்துறைக்கு பாரிய கடனுதவி வழங்குவதோடு நாட்டின் வங்கித் துறையில் டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் உள்ளது. வங்கியின் வெளிநாட்டு செயற்பாடுகள் பங்களாதேஷை உள்ளடக்கியது. அங்கு வங்கி 19 கிளைகளை இயக்குகின்றது. மியன்மார் நய் பியி தாவில் நுண்நிதி நிறுவனத்தினை கொண்டுள்ளது. அத்துடன் மாலைதீவில் வங்கி பெரும்பான்மையான பங்குகளைக் கொண்ட முழு அளவிலான வங்கியாக காணப்படுகின்றது.

திகதி 29.01.2022
சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4662
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 12,448,960.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 5 5 8 2 2 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 34,353,970.00

கொவிசெத
Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2957
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,871,000.00
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 05 21 41 56
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 61,399,222.40

Mega POWER மெகா பவர்
கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 1010
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,660,220.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 196,992,850.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து A
சுப்பர் இலக்கம் 08
வெற்றி இலக்கங்கள் 32 61 62 74
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 02861

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 692
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,677,660.00
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 07 17 60 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 94.637.729.20

ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0003
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,731,280.00
இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 02 08 17 20
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,507,800.92

ஜாதிக சம்பத
JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1204
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,967,440.00
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 6 6 8 8 7 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 11,925,518.40

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# அரசாங்கம் ஒருபோதும் பாரபட்சம் காட்டுவதில்லை; நம்பிக்கையுடன் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்

## அமைச்சர் டக்ளஸ் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

எமது மக்கள் எதிர்கொள்ளும் நீதித்துறைசார் பிரச்சினைகளுக்கு இலகுவாக தீர்வினை வழங்கும் நோக்கோடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நீதிக்கான அணுகல் நடமாடும் சேவையை எமது மக்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட நீதிக்கான அணுகல் எனும் தொனிப் பொருளிலான நடமாடும் சேவை நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரின் பங்குபற்றலுடன் கலாசார நிகழ்வுகள் சகிதம் சம்பிரதாயபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.



இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"காலதாமதமான நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமனானது" என்ற ஒரு அனுபவ வாசகம் இருக்கின்றது. அந்தவகையில் இந்த நீதிக்கான அணுகல் நிகழ்வானது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில், நீதி அமைச்சர் அலி சப்ரியின் முயற்சியால் அமைச்சரவைக்கு கொண்டுவரப்பட்டு தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை நீண்டகாலமாக வன்முறையில் வடக்கு மக்களே அதிகளவில் பாதிப்புகளை சந்தித்துள்ளனர் என்பதாலும், இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள மக்களுக்கு பரிகாரங்களை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதாலும் அவர்களது வீடுகளுக்கே துறைசார் அதிகாரிகளுடன் நீதிக்கான அணுகல் என்னும் நடமாடும் சேவை வந்துள்ளது. இதை எமது மக்கள் சரியாக பயன்படுத்த வேண்டும்.

அதேபோன்று நீதி அமைச்சர் அலி சப்ரி ஒவ்வொரு அமைச்சரவையிலும் இவ்வாறான ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரங்களை சமர்ப்பித்து வருவதையும் காணமுடிகின்றது. அதாவது கடந்தகால சட்டத்தில் இருக்கக் கூடிய குறைபாடுகளை ஈடு செய்யும் வகையிலான புதிய சட்ட ஏற்பாடுகளை கொண்டுவருவதிலும் காலத்திற்கு பொருந்தக்கூடிய சட்டங்களை உருவாக்குவதிலும் அவர் அயராது பாடுபட்டு வருகின்றார்.

இதேவேளை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரது வழிகாட்டலில் நாடுதழுவிய ரீதியில் பல்வேறு சேவைகளும், அபிவிருத்திகளும் பாரபட்சமற்ற வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக 2022 ஆண்டுக்குரிய வரவு - செலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட அபிவிருத்திசார் திட்டங்கள் நாடுதழுவிய ரீதியில் ஒரே நேரத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆகவே, அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மக்களுக்கான விடயங்களில் பாரபட்சங்களை காட்டப்போவதில்லை. இந்த அரசாங்கத்தை நம்பி அவர்களுடன் பயணிப்பதனூடாக எமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளை விரைவாக பெற்றுக்கொள்ளவும் முடியும். அந்தவகையில் உங்களது பிரச்சினைகளை நம்பிக்கையுடன் கொண்டுசென்று தீர்வுகளையும், பரிகாரங்களையும் காணவேண்டும் - என்றார்.

# காணாமல் போனோர் விவகாரத்தை கையில் எடுக்காதீர்; நீதி அமைச்சின் நடமாடும் செயலமர்வுக்கு யாழில் எதிர்ப்பு!



(யாழ். நிருபர்)

நீதி அமைச்சின் நடமாடும் செயலமர்வில் காணாமல் போனோர் விவகாரத்தை கையில் எடுக்கக்கூடாது என தெரிவித்து, காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட நீதிக்கான அணுகல் எனும் தொனிப் பொருளிலான நடமாடும் சேவை நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிலையில், அதற்கு எதிர்ப்பு தெரிவித்தே காணாமல் போனோரின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அன்றைய தினம் காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முன்பாக கூடிய காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், உறவுகளை திருப்பித்தா, நடமாடும் செயலமர்வில் காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தை கையில் எடுக்காதே போன்ற பல கோஷங்களை எழுப்பினர்.

இந்நிலையில், போராட்டக்காரர்கள் நிகழ்வு மண்டபத்திற்குள் செல்ல முற்படுகையில் பொலிஸார் தடுத்து நிறுத்தியதுடன், அங்கு குழப்பமான நிலை ஏற்பட்டது.

இதன்போது குறித்த இடத்திற்கு வருகைதந்த வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா போராட்டத்தில் ஈடுபட்ட காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

காணாமலாக்கப்பட்டோரின் விபரங்களை தன்னிடம் தருமாறு ஆளுநர் கூறிய போது அதற்கு மறுப்பு தெரிவித்த போராட்டக்காரர்கள் பல முறை நாங்கள் விபரங்களைக் கொடுத்துள்ளோம். இதுவரை எதுவும் நடக்கவில்லை என தெரிவித்தனர்.

இதனையடுத்து ஆளுநர் அங்கிருந்து விலகிச் சென்றார்.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தொடர்ந்தும் அங்கு கூடியிருந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.








**இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் அதிபர், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து "நிறைபேறான எதிர்காலத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளில், வடமாகாணத்திற்கான பேராளர் மாநாடு நடைபெற்றது. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை காலை 10 மணியளவில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் வடக்கு மாகாண இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகிகள், வடக்கு மாகாண அதிபர், ஆசிரியர்கள் எனப் பலரும் மாநாட்டில் கலந்துகொண்டனர்.**

(யாழ். நிருபர்)

# கடற்றொழில் அமைச்சர் எமக்குத் தந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்

## யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளன உபதலைவர் வேண்டுகோள்




(யாழ். நிருபர்)

கடற்றொழில் அமைச்சர் தொடர்ச்சியாக இந்தியாவின் இழுவைமடி படகுகளை கைதுசெய்வேன் என்று எமக்கு வாக்குறுதி அளித்திருந்தார். இப்பொழுது அவர் நெல் அறுவடை செய்கின்றார். இறால் வளர்ப்பு செய்கின்றார். அது தவறல்ல. ஆனால், சொன்ன வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளன உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் மீனவர்களின் பிரச்சினை பின்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. எங்களுக்கும், இந்திய மீனவர்களுக்கும் எந்தவித பிரச்சினையும் இல்லை. மீனவர்கள் ஒன்றாகத்தான் இருக்கிறோம். ஆனால், நாங்கள் இழுவை மடி தொழிலை தடுத்து நிறுத்தக்கோரியே போராட்டத்தை நடத்துகிறோம்.

மீன்பிடி சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிவிட்டு நடைமுறைக்குக் கொண்டுவராமல் குப்பைக்குள் போட்டுவிட்டார்கள். எங்களுக்கு எந்த ஒரு அரசியல் கட்சியோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ உதவி செய்ய தேவையில்லை. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை அமுல்படுத்தலாம் தானே?

இந்தியா எமக்கு என்ன செய்தது? ஆறு தமிழ் கட்சிகள் சேர்ந்து இந்தியா எமக்கு வேண்டும். இந்தியாவை பகைக்க முடியாது என்கின்றனர். நாங்கள் படும் கேவலத்தை இந்தியாவிலும் நீங்கள் பேசலாம் தானே? மீனவர் பிரச்சினையையே தீர்க்கமுடியாத நீங்களா அரசியல் பிரச்சினையை தீர்க்கப் போகின்றீர்கள்? நீங்கள் சுகமாக வாழ்வதற்கு இந்தியா உங்களுக்கு வேண்டும். ஆனால், மீனவர்கள் சுகமாக வாழ்வதற்கு நாங்கள்தான் போராடுகிறோம்.

காரைநகரிலிருந்து சுண்டிக்குளம் வரை அரை கிலோ மீற்றர் தூரத்தில் ரோலர் படகுகள் வந்து செல்கின்றன. இது எமது அரசியல்வாதிகளுக்கு தெரியாதா? ஏன் இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முடியவில்லை? எங்கள் கடலுக்குள் வந்து எங்கள் வளத்தை அழிப்பதற்கு உங்களால் எதுவும் செய்ய முடியவில்லை. இந்தியா எமது போராட்டத்திற்கு என்ன செய்ததென்று தெரியாதா? இதை கவனத்தில் எடுக்காமல் இந்தியா வேண்டும் என்று கூறுகிறீர்கள். உங்களால் நிறுத்த முடிந்தால் அதனை செய்யுங்கள். இல்லாவிட்டால் எங்கள் பிரச்சினைகள் பற்றி நீங்கள் வாய் திறக்கக் கூடாது. திறந்தால் இதைவிட கேவலமாக நாங்கள் பதில் கூறுவோம். சிலர் இலங்கை அரசாங்கத்திற்கு சலாம் போடுகின்றனர். சிலர் இந்திய அரசாங்கத்திற்கு சலாம் போடுகின்றனர் .

இந்திய படகுகளை இலங்கை பிடித்து ஏலம் விடுவதற்கு தற்போது கத்திக் கொண்டிருப்பவர்கள், நமது ஆயிரக்கணக்கான படகுகள் ஏலத்தில் விடப்பட்டபோது எங்கு சென்றீர்கள்? இதற்கு யார் பொறுப்பு? நீங்கள் எங்கள் வரிப்பணத்தில் சாப்பிட்டுக் கொண்டு எங்களுக்கு எதிராகவே செயற்படுகின்றீர்கள். கடற்றொழில் அமைச்சர் தொடர்ச்சியாக இந்தியாவின் இழுவைமடி படகுகளை கைதுசெய்வேன் என்று எமக்கு வாக்குறுதி அளித்திருந்தார். இப்பொழுது அவர் நெல் அறுவடை செய்கின்றார். இறால் வளர்ப்பு செய்கின்றார். அது தவறல்ல. ஆனால், சொன்ன வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்றார்.

# தமிழ் அரசியல் கைதிகள் 27 பேர் விரைவில் விடுதலை

## நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

(யாழ் நிருபர்)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட (அரசியல் கைதிகள்) 27 பேர் விரைவில் விடுவிக்கப்படவுள்ளனர். இதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நீதிக்கான அணுகல் நடமாடும் சேவைக்காக யாழ்ப்பாணம் வந்த அவர், தனியார் விடுதியில் அழைக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

பயங்கரவாத தடைச் சட்டம் தற்போது திருத்தப்படுகின்றது. எதிர்காலத்தில் அதனை முழுமையாக மாற்றியமைக்கும் திட்டமும் இருக்கின்றது என்று அவர் குறிப்பிட்டார். அத்துடன் அரசியல் கைதிகள் என்று சட்டத்தின் அடிப்படையில் எவருமில்லை எனவும், அவர்கள் அனைவரும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

பயங்கரவாத தடைச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் முதல் தடவையாக நாம் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு பிணை அல்லது விடுதலையளிப்பது தொடர்பாக ஜனாதிபதிக்கு பரிந்துரைகளை முன்வைக்கும் ஆலோசனைக் குழுவை முன்னாள் பிரதம நீதியரசர் அசோக்க டி சில்வா தலைமையில் நியமித்தோம். இந்தக் குழுவுக்கு 44 விண்ணப்பங்கள் கிடைத்தன. அவை ஆராயப்பட்டன. அதனடிப்படையில் 27 பேரை விடுவிப்பதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள். கடந்த வெசாக்கின் போதும் 16 பேரை (தமிழ் அரசியல் கைதிகள்) விடுவித்தோம் என்றார்.



# வெட்டுக்குளம் அம்பாள் புகழ்பாடும் இறுவெட்டு வெளியீடு; அரியாலை கவிஞர்களும் இந்திய கலைஞர்களும் இணைவு

அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் புகழ் பாடுகின்ற இசை இறுவெட்டு 'இத்திமரத்தாயே' என்கிற பெயரில் வெளிவந்து உள்ளது.

புலம்பெயர் வாழ் இத்தி மரத்தாள் புத்திரர்கள் திருப்பணிச் சபையின் சிந்தனை, வழிகாட்டல், அறிவூட்டல், நிதிப் பங்களிப்பு ஆகியவற்றில் அரியாலை வெட்டுக்குளம் மண்ணின் மைந்தர்களின் பாடல்வரிகளுக்கு தென்னிந்திய கலைஞர்கள் இசை வழங்கியுள்ளார்கள்.

மண்ணின் மைந்தர்களான எம்.வி.கே.குமணா, க.கனகராசா, த.தர்மேந்திரா, எஸ்.என்.விஜிகாந்தன், கி.விதுஷிகா ஆகியோர் பாடல்களை எழுதியுள்ளனர்.

தென்னிந்திய இசையமைப்பாளர் ஏ.சி.தினகரனின் இசையில் தென்னிந்திய பாடகர்களான மதுபாலகிருஷ்ணன், சுர்முகி, சத்தியப்பிரகாஷ், மாலதி, வேல்முருகன், அனுராதா ஸ்ரீராம், மகாலிங்கம், உன்னிகிருஷ்ணன், வாணி ஜெயராம் ஆகியோர் பாடியுள்ளார்கள்.



ஆலயத்தின் பஞ்சதள உயர் கோபுர திறப்பு விழாவோடு இணைந்த மகா கும்பாபிஷேக நிகழ்வுகளில் ஒன்றாக இறுவெட்டு வெளியீட்டு விழா, புலம்பெயர் வாழ் இத்தி மரத்தாள் புத்திரர்கள் திருப்பணிச் சபையின் தலைமை செயலகத்தின் நெறிப்படுத்தலில் அதன் தாயக ஒருங்கமைப்பாளர் எம்.வி.கே.குமணாவின் தலைமையில் இடம்பெற்றது. அறிவிப்பாளர் பணியை அறப்பணி ஒருங்கமைப்பாளர் பிரதீபன் நடேசபிள்ளை மேற்கொண்டார்.

இதில் பேராளர்களாக யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், ஆகம வித்தகர்-கிரியாகால சிரோன்மணி சிவஸ்ரீ சீதாஸ்ரீ சாரங்க குருக்கள், வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய பிரதம குரு பிரமஸ்ரீ சண்முக மாதுள சர்மா, மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன், ஆலய பரிபாலன சபையின் தலைவர் ஜெஸ்லிபாலா முத்துராசா, திருப்பணி ஒருங்கமைப்பாளர் கோடீஸ்வரன் கனகசபை, வாழ்வாதார மேம்பாட்டு ஒருங்கமைப்பாளர் தீபன் தர்மலிங்கம் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

வேலன் சுவாமிகள் அவரின் உரையில், இது ஒரு மிகவும் மகத்தான முயற்சி, ஈழத்தமிழ் இளையோர்கள் எந்தத் துறையிலும் எவருக்கும் சளைத்தவர்கள் அல்லர் என்பது நிரூபணமாகி நிற்கின்றது. ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்றால் அந்த இனத்தின் கலை, கலாசார, பாரம்பரிய விழுமியங்களை அழித்தல் வேண்டும்.

அதுதான் வரலாற்றில் இடம்பெற்ற வண்ணம் உள்ளது. தமிழனின் கலை,கலாசாரம்,பண்பாடு ஆகியன வாழ்கின்றபோதுதான் தமிழன் தமிழனாக வாழ முடியும் என்றார்.

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் ஆய்வுரை வழங்கியபோது இது ஒரு தமிழினப் பணியாகும், இந்த இசைவெட்டு வரலாற்று முகவரியாகும். பூ மலர்களை விட இந்த பா மலர்கள் மகத்தானவை என்றார். பாடலாசிரியர்கள் ஐவரும் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து, நினைவுப்பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

முதல் இறுவெட்டு பிரதி ஆலய தலைவருக்கும், சிறப்பு இறுவெட்டு பிரதிகள் ஏனைய பேராளர்கள், பாடலாசிரியர்கள், அம்பிகை அடியார்கள் ஆகியோருக்கும் சம்பிரதாயபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டன

# யாழ்.பல்கலைக்கழகத்தின் நால்வர் பேராசிரியர்களாகப் பதவியுயர்வு



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் நால்வர் பேராசிரியர்களாகப் பதவியுயர்த்தப்பட்டுள்ளனர். மருத்துவ பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த இருவரும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவருமாக நான்கு சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் அன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின்படி, மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவ மற்றும் குடும்ப மருத்துவத்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவ நிபுணர் பி.குமரேந்திரன் சமுதாய மருத்துவத்துறையில் பேராசிரியராகவும், வணிக முகாமைத்துவ பீடத்தின் மனித வள முகாமைத்துவத்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி என்.கெங்காதரன் மனித வள முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும், நிதி முகாமைத்துவத்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.லிங்கேசியா நிதி முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும், விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர்.ஸ்ரீகரன் இரசாயனவியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.



## நீதித்துறை, காணி, காணாமலாக்கப்பட்டோர், மக்கள் உரிமை, அரசியல்கைதிகள் விவகாரம்

# ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு நீதி அமைச்சர் அலி சப்ரி யாழில் பதில்

ஐ. சிவசாந்தன்

**நீதி அமைச்சின் நீதிக்கான அணுகல் செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ள அமைச்சர் அலி சப்ரி, தனியார் விடுதியொன்றில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார்.**

### சுயாதீன நீதித்துறை

**கேள்வி: நல்லிணக்க வேலைத் திட்டங்களுக்கு உங்களது அமைச்சு எவ்வாறான பங்களிப்பை வழங்கப்போகின்றது?**

**பதில்:** ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் பாதுகாப்பதற்கான பொறுப்பு நீதித்துறைக்குத்தான் இருக்கின்றது. அதனால்தான் சுயாதீன நீதித்துறையை நாம் இலங்கையில் வலுப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

உச்சநீதிமன்றில் 11 நீதியரசர்கள் இருந்தார்கள். நாங்கள் அதனை 17ஆக அதிகரித்துள்ளோம். மேன்முறையீட்டு நீதிமன்றில் 12 பேர் நீதியரசர்கள் இருந்தார்கள். 43 ஆண்டுகளுக்குப் பின்னர் 20ஆக அதனை அதிகரித்துள்ளோம். நீதிவான்கள் பயிற்சிக்கு 47பேரை உள்வாங்கியுள்ளோம். மேல் நீதிமன்றத்துக்கும் நீதிவான்களுக்குரிய பதவி உயர்வுகளை வழங்கவுள்ளோம்.

நான் இவற்றைச் சொல்வதற்குக் காரணம் உண்டு. நீதித்துறையை வலுப்படுத்துவதன் ஊடாகவும் அதனை இலகுபடுத்துவதன் ஊடாகவும் நல்லிணக்க முயற்சிகளை வேகமாக முன்னெடுக்க முடியும் என்றும் நம்புகின்றேன்.

முதன் முறையாக நீதி அமைச்சு ஊடாக நடமாடும் சேவையை நாம் முன்னெடுத்துள்ளோம். நீதிக்கான அணுகல் என்ற தொனிப்பொருளில் இதனை வடக்கில் நடைமுறைப்படுத்துகின்றோம். நாடு முழுக்க இதனை செய்வோம்.

போரால் அதிகம் பாதிக்கப்பட்ட மாகாணம் வடக்கு என்ற அடிப்படையில் இங்கு முதலில் நடமாடும் சேவையை நடைமுறைப்படுத்துகின்றோம்.

### வடக்கில் காணிப் பிரச்சினை

**கேள்வி: நீங்கள் முன்னெடுத்த நடமாடும் சேவை ஊடாக வடக்கு மாகாணத்தில் அவதானித்த விடயங்கள் எவை?**

**பதில்:** காணிப் பிரச்சினையை முதலில் அடையாளம் கண்டுகொண்டேன். தங்களுடைய காணிகளை வனவளத் திணைக்களம் கையகப்படுத்தியமை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்தன. இது எனது அமைச்சுடன் தொடர்புடையதாக இல்லாவிட்டாலும் அந்த முறைப்பாடுகளை ஏற்றுக் கொண்டுள்ளேன். சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அதனைப் பாரப்படுத்துவேன். ஆவணங்கள் தொடர்பான குறைபாடுகள் தொடர்பிலும் முறைப்பாடு கிடைத்தது.

முல்லைத்தீவில் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 50 பேரை சந்தித்தேன். அவர்கள் வாழ்வாதாரத்துக்கான தொழில்வாய்ப்புப் பற்றி கோரிக்கை முன்வைத்தார்கள்.

நீதிமன்றங்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் புதிய நீதிமன்றக் கட்டடத் தொகுதிகளைத் திறந்து வைத்துள்ளோம்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆயிரம் பேருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் உதவித் தொகை வழங்கியுள்ளோம்.

நீதி அமைச்சுக்கு உட்பட்ட 16 நிறுவனங்களில் ஒன்றுதான் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம். அந்த அலுவலகத்துக்கும் இங்கு பல முறைப்பாடுகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

### கசப்பான உண்மை

**கேள்வி: காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் 12 ஆண்டுகளாகத் தொடர்கின்றது. எந்தவொரு அரசும் அதற்கு ஏன் தெளிவானதொரு பதிலை இதுவரை வழங்கவில்லை?**

**பதில்:** காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் உருவாக்கப்பட்டு அது பெயரளவில்தான் இருந்தது. நாம் ஆட்சிக்கு வந்ததும் இந்த அலுவலகத்துக்கு முடிவு கட்டுப்படும் என்றுதான் நினைத்தார்கள். ஆனால் நாங்கள் அதனை பல்மடங்கு பலப்படுத்தியுள்ளோம்.

போர் அல்லது வன்முறையின்போது ஒருவர் உயிரிழந்திருந்தால் எம்மால் அந்த உயிரைத் திரும்பக் கொடுக்க முடியாது.

தென்பகுதியிலும் இராணுவத்திலிருந்த 4 ஆயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டதாக முறைப்பாடு உள்ளது. அவர்கள் போரின்போது காணாமல் ஆக்கப்பட்டனர். ஆனால் அவர்களுக்குரிய இழப்பீடுகள் வழங்கப்பட்டு விட்டன.

இங்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் போரின்போது உயிரிழந்திருக்கலாம். ஆனால் அதனை ஏற்றுக் கொள்வதற்கு மக்கள் தயாரில்லை. இந்த மக்களின் உணர்வுகள் எனக்கு விளங்குகின்றன.

இதனால்தான் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய தகவல்களை கோரியுள்ளோம். எமக்குக் கிடைக்கும் தகவல்களுக்கமைய விசாரணைகளை நடத்துவோம். பின்னர் முடிவு எடுப்போம்.

உண்மையில் காணாமல் ஆக்கப்பட்டாரா, விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையதாக போரில் காணாமல் ஆக்கப்பட்டாரா, வெளிநாடுகளில் உள்ளாரா? என்பதை நாம் விசாரணையின் முடிவிலேயே அறிய முடியும்.

இந்த விசாரணையை முடிவுக்கு கொண்டு வந்தால்தான் நாம் என்ன செய்ய முடியும் என்ற முடிவை எடுக்கலாம்.

முல்லைத்தீவில் 4 குடும்பங்கள் என்னை வந்து சந்தித்தன. அவர்களது 16 வயது மற்றும் அதனை ஒட்டிய வயதுடைய பிள்ளைகள் தமிழீழ விடுதலைப் புலிகளால் கட்டாயப்படுத்தி போருக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் அவர்களை இப்போது காணவில்லை என்றும் கூறினார்கள். தமக்கு தமது பிள்ளைகள்தான் வேண்டும். வேறு ஒன்றும் வேண்டாம் என்றும் அவர்கள் சொன்னார்கள்.

அவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட நேரம் போர் உக்கிரமான காலப் பகுதி. அதில்தான் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஒரு தந்தைக்கோ தாய்க்கோ தமது பிள்ளைகள் உயிருடன் இல்லை என்பதைச் சொல்வதை ஏற்றுக் கொள்வதற்கு கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால், இது ஒரு கசப்பான உண்மை. இதைப்பற்றி இன்னும் 12 ஆண்டுகளுக்கும் கதைக்கலாம்.

இதை முடிவுக்கு கொண்டுவரவே விரும்புகின்றோம். உங்களுக்கு என்ன விரக்தி இருக்கின்றதோ அதைச் சொல்லுங்கள். நீங்கள் ஆர்ப்பாட்டம் செய்ய விரும்புகின்றீர்களா? செய்யுங்கள். அது உங்களின் உரிமை. அதை நாம் தடுக்கப் போவதில்லை.

ஆனாலும் இந்த விடயத்தை தொடர விரும்பவில்லை. கசப்பான உண்மையை எதிர்கொண்டு இதனைத் தீர்க்க வேண்டும்.

### காலக்கெடு விதிக்க முடியாது

**கேள்வி: இதற்கான கால வரையறையைச் சொல்ல முடியுமா?**

**பதில்:** தெளிவான கால வரையறை கொடுக்க முடியாது.

ஐ.நாவிடமிருந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான சில ஆவணங்கள் எமக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் போதிய விவரங்கள் இல்லை. இதனை வைத்து எம்மால் விசாரணைகளை ஆரம்பிக்க முடியாது. இதனால்தான் பெப்ரவரி 5ஆம் திகதி முன்னர், யாராவது காணாமல் ஆக்கப்பட்டிருந்தால் அவர்கள் தொடர்பில் விவரங்களைப் பதிவு செய்யுமாறு மக்களைக் கோரியுள்ளோம்.

எமக்கு வரும் முறைப்பாடுகளை வைத்து, அதிலும் எத்தனை பேர் விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைப்பார்களோ அதற்கு அமைவாகவே இதற்கான காலவரையறையை தீர்மானிக்க முடியும்.

### காயங்களை குணப்படுத்துவோம்

**கேள்வி: காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் காலத்தில் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் பின்னர் மெக்ஸ்வெல் பரணகம தலைமையிலான காணாமல் போனோரைக் கண்டறியும் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே மீண்டும் ஏன் பதிவுகளைக் கோருகின்றீர்கள்?**

**பதில்:** நாம் மீண்டும் பதிவு செய்யக் கோரவில்லை. ஏற்கனவே விவரங்களை கொடுத்தவர்களை நாம் பகுப்பாய்வு செய்துள்ளோம். சுமார் 3 ஆயிரம் ஆவணங்கள் இரட்டைப் பதிவாக உள்ளன. அதனைச் சீர் செய்கின்றோம். இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

விசாரணைக்கு விவரங்கள் போதாமல் உள்ள ஆவணங்களும் உள்ளன. ஐ.நாவால் எமக்கு அனுப்பப்பட்ட ஆவணங்களில் அவ்வாறானவையே அதிகம். அவர்களையே பதிவுகளை மேற்கொள்ளுமாறு கோருகின்றோம்.

நீங்கள் விவரங்களைத் தராவிட்டால் உங்களுக்கு இதில் ஆர்வமில்லையென்றால் நாம் ஒன்றும் செய்ய முடியாது.

போர் என்றால் இவ்வாறான காணாமல் ஆக்கப்படுதல் விடயங்கள் நடக்கும். அதனால்தான் எதிர்காலத்தில் போர் ஒன்று ஏற்படாமல் இருப்பதற்குரிய நிரந்தரத் தீர்வை நாம் காணவேண்டும். இந்தக் காயங்களை தொடர்ந்தும் வைத்திருக்க முடியாது. அதனைக் குணமாக்கவேண்டும்.

### சும்மா சொல்லவேண்டாம்

**கேள்வி: காணாமல் ஆக்கப்பட்டதில், போரின் இறுதிக் கட்டத்தில் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களும் உள்ளனர். அதாவது சரணடைந்தவர்களும் காணாமல் போயுள்ளனர். அவர்களின் உறவினர்கள், தாம் ஒப்படைத்த உறவுகளுக்கு என்ன நடந்தது என்று கேட்கின்றார்கள். இதற்கு என்ன பதில் சொல்லப் போகின்றீர்கள்?**

**பதில்:** நான் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளை சந்தித்தேன். போரின் இறுதியில் சுமார் 12ஆயிரம் போராளிகள் இராணுவத்தினரிடம் சரணடைந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் புனர்வாழ்வு வழங்கி சமூகமயப்படுத்தியுள்ளோம்.

இப்படியான நிலையில் சரணடைந்தவர்கள் காணாமல் போயுள்ளார்கள் என்று சொல்லும் குற்றச்சாட்டை அவ்வளவு இலகுவில் ஏற்றுக் கொள்ள முடியாது.

இதனையும் தாண்டி சரணடைந்த அல்ல இராணுவத்திடம் ஒப்படைத்த யாராவது உண்டு என்று கூறினால் அவர்கள் எங்களுக்கு முறைப்பாடு செய்யட்டும். அது தொடர்பில் விசாரணை நடத்தலாம். இப்படிச் சொல்கின்றார்களே தவிர எங்களுக்கு விசாரணைக்குத் தேவையான விவரங்களைத் தருகின்றார்கள் இல்லை.

### வடக்குக்குரிய பிரச்சினை அல்ல

**கேள்வி: வடக்கில் உள்ள நீதிமன்றங்களில் வழக்குகள் பல தேக்க நிலையில் உள்ளன. நீதிமன்றங்களிலுள்ள ஆளணிப்பற்றாக்குறை காரணமாகக் கூறப்படுகின்றது. இதனை எவ்வாறு சரி செய்யப்போகின்றீர்கள்?**

**பதில்:** இது வடக்குக்கு மாத்திரம் உள்ள பிரச்சினை அல்ல. நாடு முழுவதும் உள்ள பிரச்சினை. இலங்கை சுதந்திரமடைந்தது முதல் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை.

ஒரு மில்லியன் மக்களுக்கு எவ்வளவு நீதிபதிகள் இருக்கவேண்டும் என்ற ஒரு கணக்கு இருக்கின்றது. அதனை வைத்துத்தான் நீதித்துறையை மதிப்பிட முடியும்.

வளர்ந்த நாடுகளில் ஒரு மில்லியன் மக்களுக்கு 100 தொடக்கம் 150 வரை நீதிபதிகள் இருப்பார்கள். மத்தியதர நாடுகளில் 50 பேர் வரையில் நீதிபதிகள் இருப்பார்கள். இந்தியாவில் கூட ஒரு மில்லியனுக்கு 22 பேர் நீதிபதிகளாக இருக்கின்றார்கள். இலங்கையில் ஒரு மில்லியனுக்கு 15 பேர்தான் இருக்கின்றார்கள். இதனால்தான் நாங்கள் நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டு செல்கின்றோம்.

எதிர்வரும் ஜூன் மாதம் புதிதாக 50பேரை நீதித்துறைக்குள் நீதிவான்களாக இணைத்துக் கொள்ளப்போகின்றோம்.

வடக்கில், மாங்குளத்துக்கு முல்லைத்தீவிலிருந்து வாரத்தில் ஓர் நாள்தான் நீதிபதி வருகின்றார். அதனால் மாங்குளத்துக்கு நாம் ஒரு நீதிபதியை நியமித்துள்ளோம். இப்போது முல்லைத்தீவிலும் சரி மாங்குளத்திலும் சரி வாரத்தின் 5 நாட்களிலும் வழக்கு நடக்கும்.

இதைப்போன்று சட்டங்களிலும் சில மாற்றங்களைச் செய்கின்றோம். வளர்ந்த நாடுகளில் இருப்பதைப்போன்று 2 மில்லியன் ரூபா பெறுமதிக்கு குறைவான விடயங்களைக் கையாள தனியா நீதிமன்றத்தை அமைப்போம். அதேபோன்று குத்தகை, கடன் போன்ற ஆவணங்கள் தொடர்பான விவகாரங்களையும் இந்த நீதிமன்றங்கள் ஊடாக கையாள்வோம். இதனால் வழக்குகள் தேக்கமடையாது விரைவில் தீர்க்கப்பட முடியும்.

இலங்கையில் ஒரு மில்லியன் மக்களுக்கு 30 நீதிபதிகள் என்ற நிலைமையை உருவாக்குவதே எனது இலட்சியம். ஆனால் நாட்டின் பொருளாதார நிலைமைக்குள் இவை சாத்தியமா என்ற கேள்வியும் இருக்கின்றது. அப்படியிருந்தபோதும், நான் கூறிய செயன்முறைக்கான முயற்சிகள் முழு அளவில் எடுக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

47பேரை நீதிவான்களாக்கவுள்ளோம். இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் முதல் தடவையாக ஒரே தரத்தில் அதிகளவானோர் நீதிவான்களாகும் சந்தர்ப்பம் இதுவாகும்.

### சகலரின் உரிமைகளையும் பாதுகாக்கவேண்டும்

**கேள்வி: பல்வேறு இனங்கள், பல்வேறு கலாசாரங்களைப் பின்பற்றும் நாட்டில் ஒரே நாடு ஒரே சட்டம் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதா?**

**பதில்:** நாட்டிலுள்ள சட்டம், சாதி, மதம், இனம் என்ற வேறுபாடின்றி, பணக்காரன் அல்லது ஏழை என்ற வேறுபாடின்றி நடைமுறையாக்குவதுதான் ஒரே நாடு ஒரே சட்டம் என்பது தொடர்பில் எனது புரிதல்.

பல சட்டங்களில் மாற்றங்கள் வரவேண்டும் என்றால் அந்தந்த இனங்களுடன் கதைத்துச்செய்ய வேண்டும்.

ஒரே நாடு ஒரே சட்டம் என்று வாயால் சொல்ல முடியும். ஆனால் அது குழப்பகரமான விடயம். கண்டியச் சட்டத்துக்கு என்ன செய்யப்போகின்றீர்கள்? தேசவழமை சட்டத்துக்கு என்ன செய்யப்போகின்றீர்கள்?

முஸ்லிம் சட்டத்துக்கு பின்னால் செல்வதால் மாத்திரம் சரிவருமா? முஸ்லிம் சட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்படவேண்டும். அதை ஏற்றுக் கொள்கின்றேன். குறிப்பாக, சிறுவர்களை திருமணம் செய்வதற்கு இடமளிக்க முடியாது. இதைப்போன்று சில விடயங்களில் முன்னேற்றமான மாற்றங்கள் வரவேண்டும்.

ஆனால் எல்லாச் சமூகத்தினதும் உரிமைகளையும் கலாசாரத்தையும் பாதுகாக்கவும் வேண்டும்.

### நல்லாட்சி கூட செய்யவில்லை

**கேள்வி: பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்றது. அதில் எவ்வாறான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?**

**பதில்:** முக்கியமான மாற்றங்கள் உள்ளன. பயங்கரவாத தடைச் சட்டத்தில் வழங்கப்படும் தீர்ப்பு தொடர்பில் யாராவது அதிருப்திப்பட்டால் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கோ, உச்ச நீதிமன்றுக்கோ செல்ல முடியும். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்படுபவரை நீதிமன்றுக்கு முற்படுத்தாமல் 18 மாதங்கள் தடுப்புக் காவலில் வைத்திருக்க முடியும். அதனை 12 மாதங்களாகக் குறைத்துள்ளோம்.

சட்டமா அதிபரின் ஒப்புதல் இல்லாமல் பிணை வழங்க முடியாது. அதனை மாற்றியுள்ளோம். ஒரு வருடத்தின் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றுக்குச் சென்று பிணைக்கு விண்ணப்பிக்க முடியும்.

அவ்வாறு பல மாற்றங்களைச் செய்துள்ளோம். தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்து ஆட்சிக்கு கொண்டு வந்த நல்லாட்சி அரசின் காலத்தில்கூட இதனைச் செய்யவில்லை.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஆலோசனைச் சபையை நியமித்துள்ளோம். 44 முறைப்பாடுகள் அதற்குக் கிடைத்துள்ளன. அதனை ஆராய்ந்து அதில் 27 பேரை விடுவிக்க பரிந்துரைத்துள்ளோம்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக மாற்றியமைக்கும் நோக்கமும் எங்களுக்குண்டு.

### அரசியல் கைதிகள் விடுவிப்பு

**கேள்வி: அரசியல் கைதிகள் என்று யாரும் இல்லை. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள்தான் இருக்கின்றனர் என்று சில தினங்களுக்கு முன்னர் கூறியிருந்தீர்கள். ஆனால் ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்காக கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது, அரசியல் கைதிகளை விடுவிப்பேன் என்று கூறியிருந்தார். அந்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றுவதில் ஏன் தாமதம்?**

**பதில்:** நான் நீதி அமைச்சர். சட்டத்தின் பிரகாரம் அரசியல் கைதிகள் என்று எங்கும் இல்லை. அவர்களை ஏதோ ஒரு சட்டத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். வெசாக்கின்போது 16 பேரை விடுவித்தோம்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழான கைதுகளை இப்போது வெகுவாகக் குறைத்துள்ளோம். நீங்கள் யாரும் எங்களுக்கு வாக்களிக்கவில்லை. ஆனாலும் நாங்கள் செய்துள்ளோம். இவையெல்லாம் எவ்வளவோ காலத்துக்கு முன்னர் நடந்திருக்கவேண்டியவை.

முகநூலில் பதிவிடுவதற்காக எல்லாம் தமிழ் இளைஞர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கு நான் கடுமையான ஆட்சேபனைகளை பொலிஸ்மா அதிபருக்கு தெரிவித்திருக்கின்றேன்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இளைஞர்களைக் கைது செய்து வீணாக நீண்ட காலம் சிறையில் அடைத்தார்கள். அப்படிச் செய்ததால், அவர்கள் அதனுடன் சம்பந்தமில்லாவிட்டாலும் வெளியில் வரும் போது அதனுடன் தொடர்புடையதாக மாறிவரக்கூடும்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# புதிய தொழிற்துறைகளை வளர்த்தெடுப்பதனூடாகவே யாழ்ப்பாணத்தின் வறுமை நிலையை தீர்க்க முடியும்

## அங்கஜன் இராமநாதன் எம்.பி. தெரிவிப்பு



சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் நடத்தப்பட்ட, சமுர்த்தி குடும்ப வாழ்வாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் சுற்றுலாத்துறை கற்கைநெறிகளை பூர்த்தி செய்த இளைஞர், யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

நிகழ்வில் உரையாற்றிய அவர், "சமுர்த்தி திணைக்களத்தால் நடத்தப்பட்ட இக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த இளைஞர்கள் யுவதிகளுக்கு எனது வாழ்த்துகளை தெரிவிக்கிறேன். உங்களுக்குக்கிடைத்த வாய்ப்பு மிகப்பெரியதாகும். சுற்றுலாத் தொழிற்துறையில் இருக்கும் பணியாளர்களுக்கான தேவைப்பாட்டை நிவர்த்தி செய்யவும், புதிய தொழில்வாய்ப்பை பெற்றுக்கொள்வதும் இக்கற்கை நெறியால் சாத்தியப்படுகிறது.

அத்துடன் எமது மாவட்டத்தை வறுமையிலிருந்து மீட்டெடுக்க நாம் புதிய தொழில்களை ஆரம்பிக்க வேண்டிய தேவையும் உள்ளது. அவற்றை ஆரம்பிக்க முறையான தொழிற்பயிற்சிகள் எமது இளைஞர்களுக்கு வழங்கப்படும்போது அவர்களுக்கான தொழில்வாய்ப்புகளும் வலுப்பெறும்.

குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் முன்னேறிவரும் சுற்றுலாத்துறையில், நிலைத்த வருமானத்தை உருவாக்க இத்தகைய கற்கைநெறிகள் அவசியமாக உள்ளன. எனவே, இக்கற்கைநெறியை பூர்த்திசெய்த நீங்கள் அனைவரும் எம்மாவட்டத்தின் பெறுமதி மிக்க தொழில் வல்லுநர்களாக அமையவுள்ளீர்கள்.

மேலும், நாடு எதிர்கொண்டுள்ள டொலர் பிரச்சினையை நிறைவுக்கு கொண்டுவர உங்களது பங்களிப்பும் பிரதானமாக அமையவுள்ளது. நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகளை வரவேற்கும் துறையில் பணியாற்றவுள்ள நீங்கள், நாட்டின் பொருளாதாரத்தின் பிரதிநிதிகளாக செயற்படவுள்ளீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இதுவரை காலமும் பல்கலைக்கழக வாய்ப்பை இழந்த இளைஞர்கள், யுவதிகளுக்கு எதிர்காலம் கேள்விக்குறியாக இருந்தது. ஆனால், தற்போது அத்தகையவர்களும் சிறந்த எதிர்காலத்தை பெறும்வகையில் போதிய தொழில்துறை பயிற்சிகளை வழங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

உங்களுக்கான எதிர்காலம் தொடர்பான அச்சமின்றி, நீங்கள் முன்னெடுக்கும் வெற்றிப்பயணத்துக்கான தயார்படுத்தல்களை இந்த கற்கைநெறி தந்துள்ளது. எனவே, வாய்ப்புகளை உருவாக்கி வெற்றியை சுவீகரித்து குடும்பத்துக்கும், மாவட்டத்துக்கும் நாட்டுக்கும் பெறுமதி சேர்க்க எனது வாழ்த்துகளை தெரிவிக்கிறேன்" என்றார்.

இந்நிகழ்வில் 16 வகையான பயிற்சிநெறிகளை பூர்த்திசெய்த, 52 இளைஞர், யுவதிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், சமுர்த்தி மாவட்ட பணிப்பாளர் விஸ்வரூபன், சிரேஷ்ட முகாமையாளர் ரகுநாதன், யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பயிலுநர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# பருத்தித்துறை பொலிஸாரால் பேதுருமுனையில் சிரமதானம்





பருத்தித்துறை பொலிஸாரால் பேதுருமுனை பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் பணிகள் இடம்பெற்றன. காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஒழுங்குபடுத்தலில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுஜீவ இத்தமால்கொட பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொலிஸார் அனைவரும் கலந்துகொண்டனர். குறித்த பகுதியில் மரங்களும் நாட்டி வைக்கப்பட்டன.



எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினம் கொண்டாடப்படவுள்ள நிலையில், புறக்கோட்டையில் கொடி விற்பனையில் ஈடுபட்டுள்ள நபரை படத்தில் காணலாம்.
(படப்பிடிப்பு: ஏ.எஸ்.எம்.ஜாவித)

# சிவனொளிபாத மலைக்கு சென்ற 12 பேர் கைது

## போதைப்பொருளுடன் சிக்கினர்

(மனுர சுதத் செல்லஹேவா)

சிவனொளிபாத மலைக்கு கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களுடன் சென்ற 12 பேர் நேற்று முன்தினம் (29) கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் மோப்ப நாயின் உதவியுடன் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வி.அல்விஸ் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் - கொழும்பு பிரதான வீதி தியகல பகுதில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடியில் வாகனங்கள் மற்றும் நபர்களை பரிசோதனை செய்தபோதே இந்த 12 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# அன்னூர் பாடசாலையில் சுதந்திரதின நிகழ்வு

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு எதிர்வரும் பெப்ரவரி 04 ஆம் திகதியன்று உக்குவள பிரதேச செயலகமும், உக்குவள பிரதேச சபையும், பிரதேச மதத்தலைவர்களும் இணைந்து உக்குவள வரக்காமுர அன்னூர் முஸ்லிம் மகாவித்தியாலய மைதானத்தில் சுதந்திர நிகழ்வை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும் இந்நிகழ்வின் முதல் நிகழ்ச்சியாக, இந்நிகழ்வில் கலந்துகொள்ளும் முக்கிய பிரமுகர்கள் தேசியக்கொடிகளை ஏந்தியவாறு வாகனப் பேரணிகள் மூலமாக குறிப்பிட்ட மைதானத்தை சென்றடைவார்கள்.

இந்நிகழ்வில் மூவின மதத் தலைவர்கள் கலந்துகொள்வதுடன், பிரமுகர்களின் சிறப்புரைகளும், மரநடுகையும் இடம்பெறவுள்ளன. அத்துடன் கலாபூஷணம் விருது பெற்றுள்ள உக்குவளையைச் சேர்ந்த மூவர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இச்சுதந்திர தின நிகழ்வுகள் கொவிட் சுகாதார வழிகாட்டலின் பிரகாரம் இடம்பெறவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# புறா போட்டி நடத்த முற்பட்ட இருவர் தப்போவவில் கைது

## 359 புறாக்கள் அதிகாரிகளால் மீட்பு









கருவலகஸ்வெவ, தப்போவ வனப்பகுதியில் புறா போட்டிகளை நடத்துவதற்கு முயற்சித்த இருவர் பொலிஸாரால் நேற்று (30) காலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வனவள திணைக்கள அதிகாரிகளின் அனுமதியைப் பெறாமல் இப்போட்டிகளை நடத்துவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் கண்டி மற்றும் அக்குரணையைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 359 புறாக்கள் மீட்கப்பட்டதுடன், அவற்றை கொண்டுவந்த லொறியொன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# பலாங்கொடை கனகநாயகம் கல்லூரியில் ஸ்மார்ட் வகுப்பறை திறந்துவைப்பு









பலாங்கொடை கனகநாயகம் தமிழ் தேசியக்கல்லூரியின் மாணவ, மாணவியர் நன்மை கருதி, இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினர் பெருந்தோட்டங்களில் வீட்டிற்கொரு பட்டதாரியை உருவாக்கும் விஞ்ஞான தீபம் வேலைத்திட்டத்திற்கமைய ஸ்மார்ட் திறன் பலகையோடிணைந்த வகுப்பறை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், தேசிய கல்வி நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளரும், இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் ஆலோசகருமான டொக்டர் எஸ். கருணாகரன், தலைவர் ஆர்.ரமேஸ்வரன், செயலாளர் எஸ்.தயாளன், பொருளாளர் ஆர்.அஜித்குமார், கல்விப்பணிப்பாளர் எஸ். வினோத் கண்ணன் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.




சிரேஷ்ட சட்டத்தரணி ஜனாபா இர்மிசா டேஹல் மும்மொழிகளிலும் எழுதிய "சித்திரவதை புகார்களை கையாள்வதற்கான வழக்கறிஞர்களுக்கான வழிகாட்டுதல்கள்" கைநூல் வெளியீட்டு நிகழ்வு, கொழும்பு-5 இல் அமைந்துள்ள ஜானகி ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஜனாதிபதி சட்டத்தரணியும், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருமான சாலிய பீரிஸ் கலந்துகொண்டு நூலின் முதற்பிரதியை நூலாசிரியரிடமிருந்து பெற்றுக்கொண்டார். அத்துடன் சித்திரவதை புகார்களை பொலிஸார் கையாள்கின்ற முறைமை, சந்தேக நபர்களைக் கைதுசெய்யும்போது அவர்கள் மீதான சித்திரவதை, மரணம் போன்ற விடயங்களை சட்டத்தரணிகள் கையாளும் முறை பற்றியும் சிரேஷ்ட சட்டத்தரணியும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் இங்கு தெளிவுபடுத்தினார். (அஷ்ரப் ஏ.சமத்)

# உடப்பு புனித சவேரியார் தேவாலயத்தில் வருடாந்த திருப்பலியுடன் திருச்சொரூப பவனி











(உடப்பு செய்தியாளர்)

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த உடப்பு நகரில் 216 வருடங்கள் பழைமை வாய்ந்த (1806) புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலி, பங்குத்தந்தை வின்சன் ஜெயராசா அடிகளாரின் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு மிக விமரிசையாக ஆரம்பமானது.

இதன்போது இறைவனுக்கும், புனித பிரான்சிஸ் சவேரியாருக்கும் நன்றி தெரிவித்து தமிழ், மொழியில் பிரசங்கம் நடத்தப்பட்டது.

தமிழ்மொழியில் மறை உரையை வணக்கத்துக்குரிய அமல்ராஜ் அடிகளாரும், வின்சன் ஜெயராஜா அடிகளாரும் நிகழ்த்தினர். அத்துடன் தேவநற்கருணை நிகழ்வு மிகவும் பக்தியுடன் இடம்பெற்றது. இறுதியாக "பேண்ட்" வாத்தியக்குழுவின் இன்னிசையுடன், புனித பிரான்சிஸ் சவேரியார் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, பெருந்திரளான பக்தர்களுக்கு மத்தியில் இறை ஆசிகள் திருச்சொரூபத்தினால் வழங்கப்பட்டு, பக்தர்களின் கரகோஷத்துடன் திருவிழா திருப்பலிப் பூஜை முற்பகல் 11 மணியளவில், உடப்பு பொலிஸ் பாதுகாப்புடனும், பங்குத்தந்தை வின்சன் ஜெயராசா அடிகளாரின் நன்றியுரையுடனும் நிறைவு பெற்றது. இதில் உடப்பு மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கியது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சீனாவின் எதிர்பார்ப்பை நேரடியாகவும் மறைமுகமாகவும் செய்துவருகிறது!

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி. தெரிவிப்பு

(கனகராசா சரவணன்)

நாங்கள் இந்தியாவின் முகவர்கள் என சித்தரிக்கின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரே, அப்போ நீங்கள் யாரது முகவர்கள்? நீங்கள் சீனாவின் முகவர்களா? சீனா எதிர்பார்ப்பதைத்தானே நீங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் செய்கின்றீர்கள். எனவே 13 ஊடாக தமிழ் மக்களின் இருப்பைக்கூட இல்லாமல் செய்யும் இவர்களை தமிழ் மக்கள் விரட்டியடிக்க வேண்டும் என தமிழீழ விடுதலை இயக்க செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கண்ணகி அம்மன் ஆலய வீதியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (29) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

வடக்கு, கிழக்கிலே தற்போது அரசியல் பேசுபொருளாக 13ஆவது திருத்தச் சட்டமும் இந்திய - இலங்கை ஒப்பந்தமும் இருக்கின்றது. அந்தவகையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக அமுல்படுத்த வேண்டும். அமுல்படுத்திய 13ஆவது சரத்தின் ஊடாக மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் என தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள ஒரு கட்சியை தவிர ஏனைய அனைத்து கட்சிகளும் வேண்டி நிற்கின்றன.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக இந்த 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தவேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் கூடி தெரிவித்தனர். ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 13ஆவது திருத்தத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

இந்த இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987 ஜூலை 29ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டு கொண்டுவரப்பட்டது. இது வெறுமனே தமிழர்கள் மீதுள்ள அக்கறை மூலமாக இந்தியாவால் கொண்டுவரப்பட்டதல்ல. பல தியாகங்கள், உயிரிழப்புகள், பல போராட்டங்கள், பல அழிவுகளின் பின்பு அந்தப் போராட்ட தியாகத்தின் அடிப்படையில் தான் இந்த




ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

இன்று நாங்கள் இருக்கும் நிலையை சிந்தித்து பார்க்கவேண்டும். இந்த இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நாங்கள் அனைவரும் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொண்டிருந்தோம். இந்த ஒப்பந்தத்தின் மூலம் வந்த 13ஆவது திருத்தச் சட்டம் போராட்டத்தில் ஈடுபட்டு எமது உரிமைகளை பெறுவதற்காக போராடிய எமக்கு இறுதித் தீர்வாக நாங்கள் எந்த இடத்திலும் எவரிடமும் நாங்கள் கூறவில்லை.

நாங்கள் தமிழீழம் வேண்டும் என போராடியவர்கள். எனவே, 13ஆவது திருத்தச் சட்டம் மூலம் வந்த மாகாணசபை முறைமையை நாங்கள் இறுதித் தீர்வாக எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளமாட்டோம்.

தமிழ் மக்கள் தங்களை தாங்களே ஆளக்கூடிய சுயநிர்ணயம் கூடிய தாயகத்தை நாங்கள் ஆளக்கூடிய ஒரு சமஷ்டி முறையிலான தீர்வு தான் எமக்கான இறுதித் தீர்வாகும்.

2009ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்படும் வரை தமிழீழம் இன்று மலரும், நாளை மலரும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் இருந்தோம். அந்தக் காலகட்டத்தில் இலங்கை இந்த ஒப்பந்தத்தைவிட இன்னும் தமிழர்களுக்கு உரிமைகளை கொடுக்கக்கூடிய ஒரு சில ஒப்பந்தங்கள் வந்திருந்தும்கூட நாங்கள் தனிநாட்டை எதிர்பார்த்து அவைகளைகூட நிராகரித்தோம்.

ஆனால், 2009 மே 18க்கு பின்பு தமிழ் மக்கள் தற்போது எந்த நிலையில் இருக்கின்றோம் என சிந்தித்து பார்க்கவேண்டும். தற்போது வடக்கு, கிழக்கு நிலத் தொடர்பை நிரந்தரமாக பிரிக்க பேரினவாத அரசு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றதுடன் வடக்கு, கிழக்கில் எமது குடிப்பரம்பலை குறைப்பதற்காக எல்லைப்புறம் ஊடாக பெரும்பான்மை மக்களை குடியேற்றிவருகின்றார். 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஊடாக வழங்கப்பட்ட அதிகாரங்கள் அமுல்படுத்தப்படாமல் இருக்கின்றது. அமுல்படுத்தப்பட்ட அதிகாரங்கள் மீளப்பெறப்பட்டிருக்கின்றன.

புதிய அரசியலமைப்பு 3 மாதத்தில் வரவிருக்கின்றது. ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ வந்த பின்பு உரையாற்றும் அனைத்து சந்தர்ப்பங்களின்போதும், இந்த நாடு ஒரு பௌத்த நாடு, அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பேன் என்கின்ற ரீதியில் பேசிவருகின்றார். எனவே புதிய அரசியலமைப்பில் எங்களுக்கான தீர்வு வரும் என எதிர்பார்க்கவில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எங்களை இந்தியாவின் முகவர்கள் என சித்தரிக்கின்றனர். அப்போ நீங்கள் யாரது முகவர்கள்? நீங்கள் சீனாவின் முகவர்களா? சீனா எதிர்பார்ப்பதைத்தானே நீங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் செய்கின்றீர்கள்.

ராஜபக்ஷ சகோதரர்கள் தமிழ் மக்களுக்கு செய்த அட்டூழியங்கள், அநியாயங்கள், அழிப்புகளை எதிர்த்து அவர்களை தோற்கடிக்க வேண்டும் என்று அவர்களுக்கு எதிராக தமிழ்த் தேசியப் பரப்பிலே உள்ள அனைத்து கட்சிகள் அனைத்து மக்களும் வீறுகொண்டு எழுந்தபோது தேர்தலை பகிஷ்கரிக்குமாறு நீங்கள் கூறுகின்றீர்கள்.

அப்படியென்றால், நீங்கள் மறைமுகமாக யாருக்கு உதவி செய்ய நினைக்கின்றீர்கள்? இன்று சீனா, யாழ்ப்பாண கரையோரத்தில் இருந்து இந்தியா எவ்வளவு தூரம் என்று கேட்கும் அளவிற்கு வந்திருக்கின்றது. இந்த நிலையில் நீங்கள் அதை எதிர்க்கவில்லை.

சீனாவை பொறுத்தமட்டில், எந்தவொரு விடுதலைப் போராட்டத்திற்கும் மனித உரிமை மீறல்களுக்கும் எதிராக குரல்கொடுத்த வரலாறு இல்லை. எனவே, நாங்கள் எக்காரணம் கொண்டும் சீனாவை ஆதரிக்க முடியாது.

எமக்கிருக்கும் அண்டை நாடான இந்தியாவுக்கும் தமிழ் மக்களுக்கும் மாத்திரம் அல்ல இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நீண்டகால தொடர்புகள் உண்டு. தற்போது இலங்கை பொருளாதார ரீதியாக அதலபாதாளத்தில் இருக்கின்ற நிலையில் இந்தியா உதவி செய்துவருகின்றது.

1971ஆம் ஆண்டு ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது இந்தியா இலங்கைக்கு உதவி செய்தது. அதேபோன்று விடுதலைப் போராட்டத்துக்கு எந்தளவு உதவி செய்ததோ அந்தளவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு 2009 இலங்கை அரசுக்கு இந்தியா உதவி செய்தது.

அதற்கு பின்பு வடக்கு, கிழக்கிலே பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவி செய்தது. மலையகத்தில் ஆயிரக்கணக்கான வீடுகளை கட்டிக் கொடுத்துள்ளது. தற்போது இலங்கை பொருளாதாரத்தில் இருந்து மீட்பதற்கு பல உதவிகளை செய்துவருகின்றது.


13ஆவது திருத்தச்சட்டம் முற்று முழுதாக அமுல்படுத்தப்படுமாக இருந்தால் நாங்கள் இருப்பையாவது காப்பாற்றிக் கொள்ளலாம் என்பது தான் எங்களது நிலைப்பாடு. இதைவிடுத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் 13ஆவது திருத்தச் சட்டம் வேண்டாம்.

ஆனால், அதற்கு ஊடாக அதிகாரமற்ற மாகாணசபைத் தேர்தல் வந்தால் கூட போட்டியிடுவோம் என்ற நிலைப்பாட்டில் அவர்கள் இருக்கின்றனர்.

எனவே, தமிழ் மக்கள் எதற்காக போராடினார்களோ அந்த இலக்கை அடையவில்லை. இருந்தும் சமஷ்டியை பெறுவதற்காக நாங்கள் போராடுவோம். அதுவரை எமக்கு எமது இருப்பை காப்பாற்றுவதற்கு முழு அதிகாரப் பரவலுடன் 13ஆவது திருத்தச் சட்டம் வேண்டும்.

எனவே 13ஆவது திருத்தச் சட்டம் ஊடாக தமிழ் மக்களின் இருப்பைக்கூட இல்லாமல் செய்ய அதற்கு எதிராக நடைபெறும் ஆர்ப்பாட்டத்தினை உண்மையான தமிழ்த் தேசியத்தை விரும்பும் தமிழ் மக்கள் அதனை எதிர்க்கவேண்டும். அவர்களை விரட்டியடிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## போடியார் புலம்பல்!



வடக்கு தலைவர்களின் சதியில் இருந்து கிழக்கை மீட்கவே தனக்கு மட்டக்களப்பு மக்கள் வாக்களித்ததாம் எண்டு புள்ளயான் தம்பி புலம்பியிருக்காரு எலுவா... அப்ப இதுதான் கிழக்க மீட்கப்போறன் எண்டு எலக்சன் காலத்தில் கூவினதாக்கும்.. அம்பாந்தோட்டயில மட்டக்களப்ப அடவு வைக்கிற கத எலுவா இது!



மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரியும் தற்போதைய தோப்பூர் பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியுமான டாக்டர் என்.எம்.எம்.ஹஸ்ஸாலி மூதூர் வலயக் கல்விப் பணிமனையினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவ் கௌரவிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை தோப்பூர் பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்றது. மூதூரில் கொரோனா தொற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக இரவு பகலாக மக்கள் பணி செய்தமைக்காக மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் முனவ்வரா நளீமினால் இவ்வாறு டாக்டர் ஹஸ்ஸாலி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மூதூர் நிருபர்)

# மட்டு. மாமாங்கத்தில் பலசரக்கு கடை ஒன்று தீயில் எரிந்து முற்றாக சேதம்



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாமாங்கத்தில் பலசரக்கு கடை ஒன்று தீப்பற்றி எரிந்ததையடுத்து முற்றாக சேதமடைந்துள்ள சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (29) அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மாமாங்கம் 3ஆம் குறுக்கு வீதியில் வீடு ஒன்றுடன் பலசரக்கு கடையை நடத்திவரும் அதன் உரிமையாளர் வழமைபோல கடந்த வெள்ளிக்கிழமை இரவு பூட்டிச்சென்றுள்ள நிலையில், அதிகாலை 4.30 மணியளவில் கடை தீப்பற்றியுள்ளதையடுத்து கடை தீயினால் எரிந்து முற்றாக சேதமடைந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்கு பொலிஸ் தடயவியல் பிரிவு பொலிஸார் வரவழைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# மெதடிஸ்த திருச்சபை திருமலையில் காலடி பதித்து 200 வருடங்கள் பூர்த்தி

## திருச்சபையின் தலைவர் அருட்பணி எபநேசர் ஜோசப்




(ரவ்பீக் பாயிஸ்)

இலங்கை மெதடிஸ்த திருச்சபை திருகோணமலையில் காலடி பதித்து 200வருடங்கள் கடந்துள்ளதாக இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் அருட்பணி எபநேசர் ஜோசப் தெரிவித்தார்.

இந்நிலையில், 200ஆவது ஆண்டு நிறைவு விழாவினை இன்றைய தினம் கொண்டாடவுள்ள நிலையில், இது தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பொன்றினை மாலை 5.00 மணியளவில் திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது கருத்து தெரிவித்த இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் அருட்பணி எபநேசர் ஜோசப் கூறியதாவது,

இங்கிலாந்து நாட்டிலிருந்து 1814ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருச்சபை 1821ஆம் ஆண்டு முதல் தனது கல்விப் பணியினை ஆரம்பித்து பெண்களுக்கென தனிப் பாடசாலையினை உருவாக்கி கல்வி தொடர்பான செயற்பாடுகள் மற்றுமல்லாது, சமாதான செயற்பாடுகள் மற்றும் மருந்தக செயற்பாடுகள் போன்ற செயற்பாடுகளிலும் கால்பதித்து திருகோணமலை மாவட்டத்தில் மெதடிஸ்த பாடசாலைகளாக 16 பாடசாலைகள் வரை ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் இலங்கை அரசினால் உள்வாங்கப்பட்டு தற்போது 07 மெதடிஸ்த பாடசாலைகள் இன்றுவரை செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் அருட்பணி எபநேசர் ஜோசப், மட்டக்களப்பு மெதடிஸ்த பாடசாலை இலங்கையின் பழமையான கல்லூரி எனவும் கல்வித் திணைக்களத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது எனவும் இன்றுவரை மெதடிஸ்த திருச்சபை ஊடாக சமாதானம் நல்லிணக்க செயற்பாடுகள், மொழி சார்ந்த இலக்கிய செயற்பாடுகள் எனப் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும், மெதடிஸ்த திருச்சபையின் இன்னுமொரு அழுத்தம் தங்களுடைய சமய அர்ப்பணிப்புக்கேற்ப அனைத்து மக்களுடனும் நல்லுறவினை பேணுவது என்பது எந்தக்காலத்திலும் ஏற்ற திருச்சபையாகவே மெதடிஸ்த திருச்சபை காணப்பட்டது என தெரிவித்தார். தொடர்ந்து திருகோணமலை மெதடிஸ்த திருச்சபையின் முகாமைத்துவ குரு தேவகுமார் கருத்து தெரிவிக்கையில், இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் 200ஆவது பூர்த்தி விழாவில் திருச்சபை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முழு வரலாறு அடங்கிய LIGHT TO THE EAST நினைவு நூல் ஒன்றினையும் வெளியிடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் அருட்பணி எபநேசர் ஜோசப், ஜெரோம் ராசையா (youth with mission), திருகோணமலை மெதடிஸ்த திருச்சபையின் முகாமைத்துவ குரு எஸ்.டபிள்யூ. தேவகுமார் மற்றும் வைத்தியர் ஞானகுணாலன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை செயலகத்தில் தைப்பொங்கல் விழா







(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தில் பாரம்பரிய முறைப்படி தைப்பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

இப் பொங்கல் நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளர் பி.தனேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ் மக்களுடைய முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாக தைப்பொங்கல் நிகழ்வு காணப்படுவதுடன் சம்பிரதாய முறைகளை பின்பற்றி தைப்பொங்கல் விழா நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தைப்பிறந்தால் வழிபிறக்கும் என்பது போல் சூரியபகவானுக்கு நன்றி செலுத்தும் நிகழ்வாக தைப்பொங்கல் நிகழ்வு அமைகின்றது.

இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறுவது உத்தியோகத்தர்களிடையே சமயங்கள் தொடர்பான நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஏதுவாக அமையும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சித்தாண்டியில் வயோதிபரை மோதித்தள்ளிய வேன்

(ஏறாவூர்)

மரணவீட்டிற்குச் சென்று திரும்பி மற்றுமொரு மரண வீட்டுக்குச்சென்ற 75 வயதுடைய வயோதிபர், வாகன விபத்தில் உயிரிழந்த சம்பவமொன்று மட்டக்களப்பு- சித்தாண்டி பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு- மாவடிவேம்பு பகுதியைச் சேர்ந்த கூலித்தொழிலாளியான ஐந்து பிள்ளைகளின் தந்தையான செல்லப்பா சண்முகம் என்பவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தவேளை, பின்னால் வந்த வேன் இவரை மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.



திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸீர் சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் முதற்கட்ட விசாரணைகளை ஆரம்பித்தார்.

சந்திவெளி பொலிஸார் வேனின் சாரதியைக் கைதுசெய்துள்ளதுடன் இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சாய்ந்தமருது மருதம் கலைக்கூடல் மன்றத்தின் "பொன்மாலைப் பொழுது" குடும்ப ஒன்று கூடல்





(நூருல் ஹூதா உமர், எம்.என்.எம். அப்ராஸ்)

சாய்ந்தமருது மருதம் கலைக்கூடல் மன்றத்தின் "பொன்மாலைப் பொழுது" கலை நிகழ்ச்சிகளும், குடும்ப ஒன்று கூடலும் மன்றத்தின் தலைவர் கலைஞர் அஸ்வான் சக்காப் மௌலானாவின் தலைமையில் கல்முனை பரடைஸ் வரவேற்பு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு நடைபெற்றது.

பாட்டு, நடனம், அபிநயம், கவிதை, நாடகம் எனப் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை பணிப்பாளர் றிஸ்லி முஸ்தபா, இலங்கை மின்சார சபையின் அம்பாறை மாவட்ட பொறியியலாளர் எம்.எப்.எம். பர்ஹான், கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதம பொறியியலாளர் ஏ.எம்.ஸாஹிர், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம். பழில், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.கே. முஹம்மட் றிம்ஸான், சாய்ந்தமருது கமு /கமு/ அல்-ஹிலால் வித்தியாலய அதிபர் யூ.எல். நஸார், சாய்ந்தமருது கமு /கமு/ லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம். சம்சுதீன் உட்பட பிரதேச செயலக அதிகாரிகள், பிரதேச கலைஞர்கள், இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள், வர்த்தகர்கள், முக்கிய பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அதிதிகளின் பாடல், கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் என மிகவும் சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வானது கொரோனா தாக்கத்தின் வீரிய அலையின் பின்னர் சாய்ந்தமருது மருதம் கலைக்கூடல் மன்றம் நீண்ட இடைவெளியின் பின்னர் நடத்திய நிகழ்வென்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவினுடைய கைக்கூலிகளாகவும் எடுபிடிகளாகவும் திகழும் தமிழ்த் தலைவர்களை மக்கள் ஓரங்கட்டவேண்டும்

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ்

(கனகராசா சரவணன்)

கடந்த 34 வருடங்களுக்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டம் தமிழ் மக்களுக்கு எந்தவித பாதுகாப்பையும் கொடுக்கவில்லை. ஒற்றையாட்சிக்குள் 13 ஆவது திருத்தத்தை கொண்டு வர 6 தலைவர்கள் இந்தியாவினுடைய கைக்கூலிகளாகவும், எடுபிடிகளுமாக இருக்கின்றனர். எனவே, ஒற்றையாட்சிக்குள் தமிழர்களை முடக்குகின்ற சதி முயற்சியை செய்கின்ற இந்த தமிழ்த் தலைவர்களை மக்கள் ஓரங்கட்டவேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு அரசடி பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட காரியாலயத்தில் கடந்த சனிக்கிழமை (28) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்

தற்போது சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக தற்போதைய அரசாங்கம் புதிய அரசியல் அமைப்பை நிறைவேற்றுவதற்காக திட்டங்களை தீட்டிக் கொண்டிருக்கின்றனர். அது முற்றுமுழுதாக சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாகவே நடைபெற்றுக் கொண்டிக்கின்றது. இந்நிலையில் ஒருசில மாதங்களில் அந்த அரசியல் யாப்பை முன்வைப்பதற்காக ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கின்றனர்.

இலங்கையில் சீனாவின் வருகையையடுத்து கட்டுப்படுத்துவதற்காக இந்தியா எவ்வாறான விடயங்களை செய்யவேண்டும் என இந்த அரசோடு பேசி இலங்கையில் இருக்கின்ற தமிழர்களை ஒற்றையாட்சிக்குள் அடக்க கூடியவாறு பேசி செய்து தருவோம். எனவே, நீங்கள் சீனாவின் வருகையை மட்டுப்படுத்த வேண்டும்.இந்த நிலைப்பாட்டிலேயே இந்த அரசியல் அமைப்பு கொண்டுவரப்படுகின்றது. குறிப்பாக 13 ஆவது திருத்தம் ஏற்கனவே நடைமுறையில் இருக்கின்றது. அது 1987 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருக்கின்றது. ஆனால், இந்த 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பையும் கொடுக்கவில்லை. மாறாக தமிழ் மக்கள் தொடர்ந்து அடக்குமுறையான காணி அபகரிப்புக்கள் வாழ்வியல் என முழுக்க அழிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இங்கிருக்கின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர்ந்த ஏனைய அரசியல் தலைவர்கள் மீண்டும் அதனைப் புதுப்பிக்கும் விதமாக வந்து அந்த அரசியல் அமைப்பில் 13 ஆவது திருத்தத்தை புகுத்தி அதில் மாகாணசபை முறைமைகளை இருப்பதாக காட்டிக் கொண்டு தாங்கள் சொல்லித்தான் அரசு அந்த வேலைத்திட்டத்தை செய்கின்றது



என்ற நிலைப்பாட்டை காட்டுவதற்காக இந்த 6 கட்சிகள் கடந்த 18-1-2022 அன்று இந்தியாவிடம் கடிதம் கொடுத்தனர்.

இது தமிழ் மக்களை மீண்டும் ஒரு சதிவலையான அழிவுக்குள் கொண்டு போவதற்கான ஒரு சாவுமணியாகத்தான் இருக்கின்றது. தமிழ் மக்களை பொறுத்தமட்டில் 1948 ஆம் ஆண்டிலிருந்து இதுவரைக்கும் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடிவருகின்றார்கள். அன்றிலிருந்து தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வந்து அடக்குமுறைக்கு உட்பட்டுவருகின்றார்கள். அவர்களுடைய உரிமை பறிக்கப்பட்டுள்ளது. இறையாண்மை கையகப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறான வேலைகள் நடந்து கொண்டிருக்கும்போது இந்தியா தன்னுடைய தேசிய பாதுகாப்புக்காக இங்கே இருக்கின்ற தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமல் வெறுமனவே தங்களின் நலனுக்காக மட்டும் எங்களுடைய மக்களின் அபிலாஷைகளை தூக்கி எறிந்துவிட்டு வெறுமனே உப்பு சப்பில்லாத 13 ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவதற்குரிய தங்களுடைய கைகூலிகளாக இருக்கின்ற முகவர்களை இங்கே பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள் .

மக்கள் ஒன்றைத் தெளிவாக விளங்கி கொள்ள வேண்டும். இந்த 13 ஆவது திருத்தத்தில் எவ்விதமான பாதுகாப்பும் இல்லை . அது கடந்த 34 வருடங்களுக்கு மேலாக நிராகரிக்கப்பட்ட ஒன்று. அந்த அடிப்படையில் இப்போது சரியான தலைவர்களை இனங்கண்டுள்ளனர்.

6 தலைவர்களால் தயாரிக்கப்பட்ட கையளிக்கப்பட்ட கடிதம் தொடர்பாக நியாயம் கற்பிக்க 6 தலைவர்களும் இணைந்து ஒரு ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தியுள்ளனர். எனவே, இவர்கள்தான் இந்தியாவினுடைய கைக்கூலிகளும், அவர்களுடைய எடுபிடிகளுமாக இருக்கின்றனர்.

இந்தியாவுக்கும் எமக்கும் எந்தவித பிரச்சினையும் இல்லை. ஆனால், தமிழ் மக்களை அவர்களது அடிமைகளாக அடக்கக்கூடாது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் அவர்களுக்கு நன்கு தெரியும். எனவே, அதனை அமுல்படுத்தும் விதமாக இந்தியாவின் செயற்பாடு இருக்கவேண்டும்.

எனவே, இவர்கள் எங்களுடைய மக்களில் எவ்வித அக்கறையுமில்லாமல் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ் மக்களின் இணைந்த வடகிழக்கு இறையாண்மை, சுயநிர்ணய உரிமை, அதற்கான சமஷ்டி தீர்வு தேவை என கடந்த கால தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்து விட்டு இங்கே வந்து வெறுமனே ஒற்றையாட்சிக்குள் தமிழர்களை முடக்குகின்ற சதி முயற்சியை செய்கின்ற இந்த தமிழ் தலைவர்களை மக்கள் ஓரங்கட்டவேண்டும். தொடர்ந்து கடந்த காலத்தில் 3 யாப்புக்கள் வந்தது இந்த மூன்று யாப்புக்களும் ஒற்றையாட்சிக்குட்பட்டவை. இப்போது நான்காவதாக கொண்டுவரப்படும் யாப்பும் ஒற்றையாட்சிக்குட்பட்டது. எனவே, இதனை இந்த இடத்தில் எதிர்க்காவிட்டால் இந்த நாட்டில் தமிழர்கள் வாழமுடியாத ஆபத்து ஏற்படும் எனவே, இதற்கு எதிராக தமிழர்கள் அனைவரும் அணிதிரளவேண்டும். - என்றார்.

# கொவிட் தடுப்பூசித் திட்டத்தின் ஒரு வருட நிறைவு நிகழ்வு கோறளைப்பற்று மத்தியில்

( மீராவோடை நிருபர் )

கொரோனா தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்க அரசாங்கம் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.







அந்தவகையில், நாட்டு மக்களுக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டு கடந்த சனிக்கிழமையுடன் (29) ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ளது.

குறித்த ஒரு வருட நிறைவு நிகழ்வுகள் நாட்டிலுள்ள அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களிலும் அன்றைய தினம் காலை 10.06 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டன. அந்தவகையில், கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும், வைத்திய அதிகாரி எஸ்.ரீ.எம்.நஜீப்கான் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது கொவிட் பரவல் தொடர்பாகவும், தடுப்பூசியால் ஏற்படும் பயன்கள் தொடர்பாகவும் விளக்கங்கள் அளிக்கப் பட்டன. அத்துடன், கொவிட்டால் மரணித்தவர்களை நினைவு கூரும் வகையில் இரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப் பட்டது. இந்நிகழ்வில் பிரதேச செயலக, பிரதேச சபை உத்தியோகத்தர்கள், சமூக மட்ட அமைப்புகளின் உறுப்பினர்கள், பள்ளிவாசல்கள் நிர்வாகிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# கொரோனா தொற்றை தடுப்பதற்கு பணியாற்றியவர்கள் கௌரவிப்பு

## ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில்

(வி.சுகிர்தகுமார் )

கொரோனா தடுப்பூசி வழங்கல் ஆரம்பித்து கடந்த சனிக்கிழமையுடன் ஒரு வருடம் பூர்த்தியானதை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதற்கமைவாக ஐக்கியமாக – ஒரே மனதுடன் வலுவாக எனும் கருப்பொருளுக்கமைவாக பெருந்தொற்றுக்கு சவால் விடுத்த மனிதநேயத்திற்கு செய்யும் மரியாதை எனும் நோக்குடன் கொரோனா தொற்றை தடுப்பதற்கு அரும்பணியாற்றியவர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலும் இடம்பெற்றன.

இதன் ஒரு கட்டமாக அக்கரைப்பற்று யங் ஸ்டார் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று 9 பிரிவின் பல்தேவைக் கட்டடத்தில் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹ.டிலக்ஷன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.







நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச சபை உறுப்பினரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழுத்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டி.வீரசிங்கவின் ஆலையடிவேம்பு பிரதேச இணைப்பாளருமான சிந்துஜா பிரதீபன் மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் கே.சசீந்திரன் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ தாதிகள், கிராம உத்தியோகத்தர் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

பொதுமக்களை இத்தொற்று நோயிலிருந்து பாதுகாப்பதற்காக ஜனாதிபதி மற்றும் பிரதமர், சுகாதார அமைச்சு, சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச சபையினர் எடுத்த முயற்சியைப் பாராட்டி பலரும் உரையாற்றினர்.

இதேநேரம் பிரதேச செயலாளர் ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் அப்பணிமனையின் உத்தியோகத்தர்களுக்கும் விசேடமாக அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்தார்.

இறுதியாக அர்ப்பணிப்போடு சேவையாற்றிய பிரதேச செயலாளர், சுகாதாரத்துறை ஊழியர்கள், பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்டவர்கள் ஏற்பாட்டாளர்களால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சாய்ந்தமருது சம்பவத்தின் கொலையாளியை கண்டுபிடிக்க சி.சி.ரி.வி. காட்சிகள் பகுப்பாய்வு

(சாய்ந்தமருது நிருபர்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் படுகொலை செய்யப்பட்ட பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, அவரது ஜனாஸா மட்டக்களப்பு, ஓட்டமாவடியில் அமைந்துள்ள மஜ்மா நகர் கொவிட் மையவாடியில் நேற்று (30) நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இத்தகவலை குறித்த பெண்ணின் புதல்வரான அலியார் சௌபர் உறுதிப்படுத்தியுள்ளார்.

சாய்ந்தமருது-15 ஆம் பிரிவு புதுப்பள்ளி வீதியிலுள்ள ஒழுங்கையில் அமைந்துள்ள வீடொன்றில், தனிமையில் வசித்து வந்த 78 வயதுடைய சுலைமான் செய்யது முஹாரி என்பவர் கடந்த வியாழக்கிழமை (27) அதிகாலை கொலை செய்யப்பட்டு, அவர் வசமிருந்த தங்க ஆபரணங்கள் மற்றும் பணம் என்பன கொள்ளையிடப்பட்டிருந்தன.

இதையடுத்து, அன்றைய தினம் மாலை கல்முனை நீதவான் சம்பவ இடத்திற்கு சென்று விடுத்த உத்தரவை முன்னிட்டு குறித்த பெண்ணின் சடலம் பிரதேச பரிசோதனைக்காக அம்பாறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. அங்கு அவரது உடலிலிருந்து பெறப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரி மட்டக்களப்பு கொவிட் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அந்த பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை சனிக்கிழமை (29) மாலை அம்பாறை வைத்தியசாலைக்கு கிடைக்கப் பெற்றதாகவும், அதில் தனது தாய்க்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டிருப்பதாக தங்களுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் புதல்வர் அலியார் சௌபர் தெரிவித்தார்.

இதையடுத்தே தமது தாயின் ஜனாஸா நேற்று மஜ்மா நகரில் நல்லடக்கம் செய்யப்பட்டதாக



அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை கொலையாளி இன்னும் கண்டுபிடிக்கப்படாத நிலையில், இச்சம்பவம் தொடர்பான பொலிஸ் விசாரணைகள், குற்றப்புலனாய்வுப் பிரிவினிடம் ஒப்படைக்கப்பட்டு தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சாய்ந்தமருது பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ நேரத்திலும் அதற்கு முன்னிரவிலும் குறித்த பெண்ணின் வீடு அமைந்துள்ள வீதியில் காணப்பட்ட சந்தேக நபர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற சி.சி.ரி.வி. வீடியோ காட்சிகளைக் கொண்டு பல கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், கொலையாளி என சந்தேகிக்கப்படும் அந்த மர்ம நபரை அடையாளம் காண்பதற்காக அந்த வீடியோ காட்சிகள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்பிலுள்ள பகுப்பாய்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# இரண்டு கஜமுத்துகளுடன் மட்டக்களப்பில் இருவர் கைது

(மட்டக்களப்பு நிருபர்)

80 இலட்சம் ரூபா பெறுமதியான இரு கஜமுத்துகளுடன் மட்டக்களப்பு புல்லுமலையில் இருவர் கைதுசெய்யப்பட்



டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சுரேஸ்குமார் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை (28) மாலை 7.00 மணியளவில் மோட்டார் சைக்கிளில் மகா ஓயாவிலிருந்து மட்டக்களப்பு நோக்கி குறித்த கஜமுத்துகளை கடத்திக்கொண்டு வந்து கொண்டிருந்தவேளை புல்லுமலை விஹாரைக்கு முன்னால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடமிருந்து 30.8 கிராம் மற்றும் 4.5 கிராம் எடையுள்ள இரு கஜமுத்துகளும், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதானவர்கள் ஏறாவூர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர்.

# ஆலையடிவேம்பு வர்த்தக நலன்புரிச்சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

(வி.சுகிர்தகுமார் )

ஆலையடிவேம்பு பிரதேச வர்த்தக சமூக நலன்புரிச்சங்கத்தின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் ஆலையடிவேம்பு பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

வர்த்தக சமூக நலன்புரிச்சங்கத்தின் தலைவர் ஆர்.ஜெகநாதன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் மற்றும் பிரதேச சபை தவிசாளர் த.கிரோஜாதரன் ஆகியோர் விசேட அதிதிகளாகவும், கணக்காளர் க.பிரகஸ்பதி உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் வர்த்தகர் சங்க பொருளாளர் ஆ.ராஜகாந்தன், செயலாளர் கே.கிருசாந்தன் உள்ளிட்ட வர்த்தக சங்க உறுப்பினர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.







வர்த்தக சங்கத்தின் கடந்தகால செயற்பாடுகள் மற்றும் எதிர்கொண்ட சவால்கள் தொடர்பில் தலைவர் மற்றும் செயலாளர் உரையாற்றினர். எதிர்காலத்தில் சங்கம் செயற்பட வேண்டிய வழிமுறைகள், புதிய நிர்வாகத்தின் பொறுப்புகள் மற்றும் தமது காலத்தில் சங்கத்தில் அங்கத்தவர்களை அதிகம் இணைத்துக்கொண்ட விடயங்கள் தொடர்பிலும் கூறினர்.

மேலும், கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த வருடம் பொதுக்கூட்டம் கூட்ட முடியாத நிலை தோன்றியதாகவும் குறிப்பிட்டனர்.

தொடர்ந்து பொருளாளர் கணக்கறிக்கையினை சமர்ப்பித்ததுடன், மேலதிக தகவல் தேவையெனில் பதில் வழங்க முடியும் எனவும் கூறினார்.

இங்கு உரையாற்றிய பிரதேச சபை தவிசாளர் மற்றும் பிரதேச செயலாளர் உள்ளிட்டோர் சங்கத்தினை முன்கொண்டு செல்வது தொடர்பில் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினர். இதன் பின்னராக புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. செயலாளராக சி.சுதாகரன் தெரிவு செய்யப்பட்டதுடன், பலரது வேண்டுகோளுக்கிணங்க முன்னாள் தலைவர் ஆர்.ஜெகநாதன் மீண்டும் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். பொருளாளராக ச.நிரஞ்சலராஜும், உப செயலாளராக சோ.புண்ணியமூர்த்தியும், உபதலைவராக சி.தர்மராசாவும் தெரிவாகினர்.

உறுப்பினர்களாக க.கிருஷ்ணமூர்த்தி க.காந்தரூபன், த.யோகேஸ்வரன், ந.தவராஜா பா.இராஜேஸ்வரன், க.சத்தியமோகன், சி.ரமேஸ், ந.இராசலிங்கம் ஆகியோரும் ஆலோசனைக்குழு உறுப்பினர்களாக க.கிருசாந்தன், ஆ.ராஜகாந்தன் உள்ளிட்டவர்களும் தெரிவானார்கள்.

# இஸ்லாம் பாடப்புத்தகங்கள் மீளப்பெறப்படுவதன் நோக்கம் என்ன? ஆளுங்கட்சியின் முஸ்லிம் உறுப்பினர்கள் தெளிவுபடுத்த வேண்டும்

## இம்ரான் எம்.பி. கோரிக்கை



(பதுர்தீன் சியானா)

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் அச்சிட்டு விநியோகிக்கப்பட்ட இஸ்லாம் பாடநூல்கள் மீளப்பெறப்படுவதன் நோக்கம் என்ன என்பதை நீதி அமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட அரசிலுள்ள முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரர் தலைமையிலான "ஒரேநாடு ஒரே சட்டம்" ஜனாதிபதி செயலணியின் பரிந்துரைக்கமைய இஸ்லாம் பாட நூல்கள் மீளப்பெறப்படுவதாக ஊடகங்களில் செய்தி வெளிவந்துள்ளது.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் நியமிக்கப்படும் துறைசார்ந்த வாண்மை மிகுந்தோரினால்தான் பாடநூல்கள் எழுதப்படுகின்றன. இஸ்லாம் பாடநூல்களும் அவ்வாறுதான் எழுதப்படுகின்றன. இவ்வாறு எழுதி வெளியிடப்பட்டு விநியோகிக்கப்பட்ட இஸ்லாம் பாடநூல்கள் சம்பந்தமான தீர்மானம் எடுக்கும் உரிமை ஞானசார தேரருக்கு உண்டா என்பதைக் கேட்க விரும்புகின்றேன்.

இந்த விடயத்தில் அரசில் முக்கிய பங்கு வகிக்கும் அமைச்சர் அலி சப்ரி கவனம் செலுத்த வேண்டும். இதனை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

அரசுக்கு ஆதரவு வழங்கி வரும் தேசிய காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் மௌனம் காப்பதன் அர்த்தம் என்ன? இந்த மௌனம் இவர்களது சம்மதத்தோடுதான் இந்த நாடகம் அரங்கேற்றப்படுகின்றதா என்ற சந்தேகத்தை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இது குறித்து இவர்களும் தெளிவுபடுத்த வேண்டும். அற்ப சுய இலாபத்துக்காக சமூக உரிமைகளைத் தாரைவார்க்க வேண்டாமென நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசிடமிருந்து நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காகத்தான் அரசுக்கு ஆதரவு வழங்குவதாக கூறும் இவர்கள் பெற்றுக் கொடுக்கும் நன்மை இதுதானா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதாவுல்லா, ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் ஆகியோரும் கூட இந்த விடயத்தில் மௌனமாக இருப்பது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இது முஸ்லிம் மக்களது உரிமை சார்ந்த பிரச்சினை இல்லை என இக்கட்சிகள் கருதுகின்றனவா என்ற சந்தேகம் எழுகின்றது. மீளப்பெறப்படும் இஸ்லாம் பாடநூல்களில் என்ன மாற்றங்கள் செய்யப்படவுள்ளன என்பதையாவது இவர்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

எந்த மார்க்கத்தினதும் விடயங்களில் தீர்மானம் எடுக்கும் உரிமையை அந்தந்த மார்க்க அறிஞர்கள்தான் செய்ய வேண்டும். மார்க்கத்தோடு தொடர்பில்லாத வேறு யாரும் செய்ய முடியாது. இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் - என்றார்

# நிந்தவூர் கரப்பந்தாட்ட மைதான திறப்பு விழா

(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்ட நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவில் கரப்பந்தாட்ட பொது மைதானம் புனரமைக்கப்பட்டு திறந்துவைக்கும் அங்குரார்ப்பண நிகழ்வு நாளை 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனயின் நிந்தவூர் அமைப்பாளரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழு இணைப்பாளருமாகிய எ.எல்.மீராசாகிபு தலைமையில் நிந்தவூர் பொது மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருமான யூ.டி.வீரசிங்க, அதிதிகளாக நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.முஹம்மட் தாஹிர், பிரதேச சபை உதவித் தவிசாளர் வை.எல்.சுலைமாலெப்பை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், விளையாட்டுக் கழகங்களின் நிர்வாக உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

# சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்க பொதுக்கூட்டமும் இரங்கல் நிகழ்வும்





(நூருல் ஹுதா உமர் )



சம்மாந்துறை நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் பொத்துவில் தனியார் விடுதியில் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.நஸீல் தலைமையில் கடந்த சனிக்கிழமை (29) நடைபெற்றது.

இந்தப் பொதுகூட்டத்தின் போது நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது. அதனடிப்படையில் மீண்டும் சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்கத் தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி யூசுப் அன்வர் சியாட் சபையோரினால் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டதுடன், செயலாளராக சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.எம் முஸ்தபாவும், பொருளாளராக சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். நஸீலும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதன்போது பல்வேறு முக்கிய அம்சங்கள் தொடர்பில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன், அண்மையில் காலஞ்சென்ற பிரபல சிரேஷ்ட சட்டத்தரணிகளான தாஹா செய்னுதீன், முஹம்மட் லத்திப் மற்றும் எம்.கே.பேரின்பராஜா ஆகிய மூவரின் நினைவாக மௌன அஞ்சலியும், நினைவுரைகளும் நடைபெற்றன.

இங்கு உரையாற்றிய சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்க செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஸ்தபா, அரை நூற்றாண்டுகள் மிகப்பேணுதலான சட்டத்தரணியாக மிளிர்ந்து அண்மையில் மறைந்த சிரேஷ்ட சட்டத்தரணி தாஹா செய்னுதீனை சட்டத்துறையில் ஒரு மேதையாக தன்னை திறமைகளைக் கொண்டு அடையாளப்படுத்தியவராக காண்கிறேன் என்றும், அண்மையில் அமர்த்துவமடைந்த சிரேஷ்ட சட்டத்தரணி எம்.கே.பேரின்பராஜா மனிதநேயம் மிக்க சட்டத்தரணியாக இருந்து எல்லோருடனும் அன்பாக பழகிய மக்களின் அபிமானம் பெற்ற ஒருவர். இவரின் இழப்பு தமிழ் பேசும் மக்களின் பேரிழப்பாகவே உள்ளது. அத்துடன் மறைந்த அக்கரைப்பற்றை சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி முஹம்மட் லத்திப் மென்மையான போக்கை கொண்ட ஒருவராக இருந்ததுடன், நல்ல பல குணாம்சங்களை கொண்டவராகவும் இருந்தார். இப்படியானவர்களின் இழப்புகள் பெரியளவிலான இடைவெளியை உண்டாக்கியுள்ளது என்று தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

# பல தசாப்தங்களாக கவனிப்பாரற்று இருந்த சம்மாந்துறை உள்ளக வீதிகள் அபிவிருத்தி

(நூருல் ஹுதா உமர், ஐ.எல்.எம்.நாஸிம் எம்.என்.எம்.அப்ராஸ் )





மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் இருந்த சம்மாந்துறை பிரதேச சபைக்குட்பட்ட புளியடி வீதி, கஞ்சர் வீதி, பண்டு வீதி ஆகிய வீதிகளை கிராமிய வீதி மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் நிதியொதுக்கீட்டில் புனரமைப்பு செய்து உத்தியோகபூர்வமாக மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முக்கியஸ்தருமான கடந்த பொதுத்தேர்தல் வேட்பாளர் அஸ்பர் உதுமாலெப்பையின் பங்கெடுப்புடன் இடம்பெற்றது.

சுமார் 60 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் நடைபெற்ற இந்த அபிவிருத்திகளை மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் கே. கோவிந்தசாமி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம நிலதாரிகள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

2.8 கிலோமீற்றர் நீளமுள்ள வீதிகள் அபிவிருத்தி செய்யவும் இத்திட்டத்தை சம்மாந்துறை பிரதேசத்தில் செயற்படுத்தவும் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ ஆகியோருக்கும் இத்திட்டத்தை நிறைவேற்ற காரணமாக அமைந்த அமைச்சர்கள் உட்பட அதிகாரிகளுக்கு நன்றிகளை தெரிவித்து கொள்வதாக இங்கு பேசிய சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முக்கியஸ்தருமான அஸ்பர் உதுமாலெப்பை தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர் கடந்த சுனாமி காலத்தில் பல ஊர்களுக்கே சோறு போட்ட சம்மாந்துறை மக்கள் அரிசிக்கும், பருப்புக்கும், சில்லறை காசுகளுக்கும் தமது வாக்குகளை அளித்தமை வருத்தமளிக்கிறது. அரசுடன் இணைந்து சென்றே எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு நானே சாட்சியாக இருக்கிறேன். நாம் பலமிக்க பெரும்பான்மை சக்தி கொண்ட அரசை எதிர்த்து எதிராளிகளாக மாற முடியாது என்பதற்கு தேர்தல் காலங்களில் அரசை எதிர்த்துப் பேசியவர்கள் இன்று வென்றவுடன் அரசுடன் ஒட்டி உறவாடுவதை பார்த்தாலே நாம் அறிந்து கொள்ளலாம். நமது வாக்குகளை நாம் வீணடித்தமையால் தற்போது அரசியல் அனாதையாக இருக்கிறோம். எனக்கு நம்பி வாக்களித்த மக்களுக்கு நான் என்னால் முடிந்தவற்றை செய்து கொண்டிருக்கிறேன். எந்நேரத்திலும் மரணத்தை சுமந்து கொண்டிருக்கும் நான் எனது சேவைகளை தேர்தலை இலக்காகக் கொண்டு செய்வதில்லை என்றார்.

# 'அக்கரைப்பற்று புகைப்படத் திருவிழா' ஆரம்பம்





(நூருல் ஹுதா உமர்)

Club Photo Ceylonica வின் ஏற்பாட்டில் இடம்பெறும் 'அக்கரைப்பற்று புகைப்படத் திருவிழா' நேற்று முன்தினம் (29) அக்கரைப்பற்று மாநகர சபை ஹல்லாஜ் மண்டபத்தில் மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. முதல் நாள் நிகழ்வுகள் புகைப்படக் கலைஞரும், விழா ஏற்பாட்டாளருமான அப்துல் ஹமீட் தாஹிர் தலைமையில் இடம்பெற்றது. முதல் நாள் நிகழ்வுகளின் பிரதம அதிதியாக மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி கலந்துகொண்டு சிறப்பித்தார்.

Club Photo Ceylonica அமைப்பானது பிராந்திய புகைப்படக் கலைஞர்களின் திறமைகளை போட்டிகள் மற்றும் கண்காட்சிகள் வாயிலாக வெளிக்கொணர்ந்து அவர்களைப் பாராட்டி ஊக்குவிக்கின்ற செயற்பாடுகளை வருடாந்தம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இத்திருவிழாவில் சர்வதேச புகைப்படப் போட்டிகள் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண புகைப்படக் கலைஞர்களிடையே வெற்றி பெற்ற புகைப்படக் கலைஞர்களின் படைப்புகள், அக்கரைப்பற்று வரலாற்றுடன் தொடர்புடைய அரிதான பல பழைய புகைப்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்ட முதலாவது ஆண்டு நிறைவு நிகழ்வு கல்முனையில்





(நூருல் ஹுதா உமர், சர்ஜூன் லாபீர், எம்.என்.எம்.அப்ராஸ்)

"ஐக்கியமாக, ஒரே மனதுடன்,வலுவாக" எனும் தொனிப்பொருளில் பெருந்தொற்றுக்கு சவால் விடுத்த மனிதநேயத்திற்கு செய்யும் மரியாதையாக கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்டு முதலாவது ஆண்டை நிறைவு செய்யும் தேசிய நிகழ்வின் ஒரு அங்கமாக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியாசலையின் நிகழ்வு வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எப்.ரஹ்மான் தலைமையில் வைத்தியசாலையில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கொரோனா தொற்றில் மரணித்தவர்களுக்காக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அறிமுக உரையை வெளிநோயாளர் பொறுப்பு வைத்திய அதிகாரி சிரேஷ்ட வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஆர்.எம்.ஹரிஸ் நிகழ்த்தினார். மேலும், தொற்றுத்தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியும், பொது சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியுமான டொக்டர் ஏ.எல்.பாரூக் கொரோனா கட்டுப்பாட்டு முகாமைத்துவ திட்ட அறிக்கை விளக்கத்தை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். ரக்கிப் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டார்.

மேலும் பிரிவுகளுக்கான பொறுப்பு வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கொரோனாவை கட்டுப்படுத்த பல்வேறு அர்ப்பணிப்புகளை செய்த சுகாதாரத் துறையினர் இந்நிகழ்வின்போது பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# விஞ்ஞான ரீதியாக துறை சார்ந்த நிபுணர்கள் சொல்பவற்றை நம்பி செயற்பட்டு கொரோனாவை வெல்ல ஒத்துழையுங்கள்

## மக்களுக்கு கல்முனை பிராந்திய பணிப்பாளர் றிபாஸ் கோரிக்கை

(பாறுக் ஷிஹான்)



விஞ்ஞான ரீதியாக துறை சார்ந்த நிபுணர்கள் சொல்வதை நம்பி செயற்பட்டு கொரோனா தடுப்பு, தவிர்ப்பு நடவடிக்கைகளுக்கு மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

கொரோனா தடுப்பூசி முதன்முதலாக இந்நாட்டில் ஏற்றப்பட்ட நாளின் முதலாவது ஆண்டு நிறைவு தேசிய நிகழ்வாக நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை அனுஷ்டிக்கப்பட்டது.

கல்முனை பிராந்தியத்தின் பிரதான நிகழ்வு வைத்திய கலாநிதி றிபாஸின் தலைமையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதிலும், இதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசேட ஊடகவியலாளர்கள் மாநாட்டிலும் கலந்துகொண்டு வைத்திய கலாநிதி றிபாஸ் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தேசிய மட்டத்தில் மட்டுமல்ல, சர்வதேச மட்டத்திலும் மிகச்சிறந்த இயங்குதிறன் நிறைந்த நிர்வாகக் கட்டமைப்பை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கொண்டு அற்புதமாக இயங்கி வருகின்றது.

முன்னாள் பணிப்பாளர் நண்பர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணன் விட்டுச் சென்ற இடத்திலிருந்து தொடங்கி இன்னமும் மேலதிகமாக எனது சேவைகளை திறம்பட முன்னெடுப்பேன் என்று இத்தருணத்தில் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கொரோனா என்றால் மக்கள் அலறித் துடித்த காலம் இப்போது மாறிவிட்டது. அதன் பேராபத்தை மக்கள் மறந்து விட்டனர். அதை தடுக்கவும், தவிர்க்கவும் செய்ய வேண்டிய அடிப்படை விடயங்கள் சிலவற்றைக்கூட செய்ய தவறுகின்றனர்.

உண்மைக்கு புறம்பான தகவல்களில் கூடுதல் கவனம் செலுத்துகின்றனர்.விஞ்ஞான ரீதியாக துறை சார்ந்த நிபுணர்கள் சொல்வதை நம்பி செயற்பட்டு கொரோனா தடுப்பு, தவிர்ப்பு நடவடிக்கைகளுக்கு மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கொரோனா தடுப்பு, தவிர்ப்பு நடவடிக்கைகளில் எமது நாடு உலக அளவில் முன்னிலையில் நிற்கின்றது. கொரோனா தடுப்பூசி நடவடிக்கைகளில் சர்வதேச அளவில் சாதனை படைத்து நிற்கின்றது. அதையே நாம் நினைவு கூர்கின்றோம். அதற்காக ஆபத்து எம்மை விட்டு நீங்கி விட்டது என்று அர்த்தமில்லை.

நாட்டில் எத்தகைய பொருளாதார அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டாலும்கூட சுகாதாரத்துறையினரின் சேவைகள் எந்த நிலையிலும் தவிர்க்க முடியாதவை. கொரோனா மீண்டும் மீளெழுச்சி பெற்று பரவுகின்றது. பேயாட்டம் ஆடுகின்றது.

ஒமிக்ரோன் திரிபு மிக வீரியமாகத் தொற்றிய வண்ணம் உள்ளது. சுகாதாரத்துறையினர் இதை வெல்வதற்கு இன்னமும் வீரியமாக போராட வேண்டியுள்ளது. ஆனால், மக்கள் இயல்பு நிலைக்கு மீண்டும் திரும்பியது போல் நடந்து கொள்வது கவலை தருகின்றது.

கிழக்கு மாகாணத்தின் நிலை உண்மையிலேயே மிக கவலைக்கிடமானதாக இருக்கின்றது. மிகக் கணிசமான எண்ணிக்கையில் தொற்றாளர்கள் இங்கு அடையாளம் காணப்பட்ட வண்ணம் உள்ளனர் என்பதை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

இம்மாகாணத்தில் மிகக் கணிசமான அளவு கொரோனா மரணங்களும் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. கல்முனை பிராந்தியத்தை பொறுத்தவரை நாம் புதிய உத்வேகத்துடன் பயணிக்க வேண்டும்.

கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றபோது பொதுமக்கள் தவறாமல் ஒத்துழைக்க வேண்டும். எமது மக்கள் ஒத்துழைக்கின்றபோது மீண்டும் எமது பிராந்தியம் கொரோனா தடுப்பு, ஒழிப்பு நடவடிக்கைகளில் வெற்றிக்கொடி நாட்ட முடியும். தற்பொழுது வந்திருக்கின்ற பிறழ்வு எவ்வாறான தாக்கத்தை மேற்கொள்ளும் என்பதை எம்மால் எதிர்வு கூறமுடியாது. விழிப்பூட்டப்பட்ட மக்களாகவும் சுகாதார நடைமுறைகளை மீண்டும் பின்பற்றக்கூடியவர்களாகவும் எமது மக்கள் மாற வேண்டும். மேற்படி விடயங்களை மக்கள் புறக்கணித்து வாழ்வார்களாயின் எவ்வாறான பின்விளைவுகள் ஏற்படும் என்பதை சொல்ல முடியாது.

வருமுன் காப்போம் என்ற அடிப்படையில் கொரோனாவிற்கான போராட்டத்தை முன்னெடுத்து செல்ல வேண்டும். மேலும், இதனைக் கட்டுப்படுத்த எதிர்வரும் வார காலங்களில் தடுப்பூசிகளை வழங்க திட்டமிட்டுள்ளோம். எனவே, மக்களாகிய நீங்கள் எமது சுகாதார தரப்பினருக்கு ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# இனப் பிரச்சினை தீர்வு முயற்சியில் பொது இணக்கத்தை எட்டுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - முஸ்லிம் புத்திஜீவிகள் பேச்சுவார்த்தை

## பெப்ரவரி நடுப் பகுதியில் சந்திப்பு; சுமந்திரன், ஹசன் அலி ஏற்பாடு

இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் பொது இணக்கப்பாட்டை எட்டுவது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முஸ்லிம் புத்திஜீவிகளுக்கும் இடையில் அடுத்த மாத நடுப் பகுதியில் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், யாழ். மாவட்ட எம்.பியுமான எம்.ஏ. சுமந்திரன், ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், சுகாதார முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஹசன் அலி ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் பொது இணக்கப்பாட்டை எட்டுவதை நோக்கமாகக்கொண்டு தமிழ், முஸ்லிம் கட்சிகள் பல தடவைகள் சந்தித்துப் பேசின. இதைத் தொடர்ந்து இனப் பிரச்சினை தீர்வுக்கான உத்தேச யோசனைகள் தயார் செய்யப்பட்டன.

ஆயினும், கடைசி நேரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் கையொப்பம் இடவில்லை. முஸ்லிம் தரப்பினரின் கையொப்பம் இல்லாமலேயே உத்தேச தீர்வு ஆவணம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பப்பட்டது. இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் பொது இணக்கப்பாட்டை தமிழ் - முஸ்லிம் தரப்புகளுக்கு இடையில் ஏற்படுத்துகின்ற முயற்சி மகத்தானதுதான் என்று வரவேற்று வாழ்த்தி ஹசன் அலி பகிரங்க அறிக்கை வெளியிட்டிருந்தார்.

ஆனால், அதற்கான பொறிமுறைதான் சரியாக அமையவில்லை. முஸ்லிம் தரப்பில் முஸ்லிம் புத்திஜீவிகளின் யோசனைகளை உள்வாங்கியே தீர்வு யோசனை தயார் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

இதன்பின்னணியில் எம்.ஏ.சுமந்திரன், ஹசன் அலி ஆகியோருக்கிடையில் உரையாடல்கள் இடம்பெற்றன. இவற்றைத் தொடர்ந்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், முஸ்லிம் புத்திஜீவிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடாகியுள்ளது.

நாம் இது தொடர்பாக ஹசன் அலியை தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்தவை வருமாறு,

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களை நேரடியாக பிரதிநிதித்துவம் செய்யாத ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் ஆகியோர் கடைசி நேரத்தில் கையொப்பம் இட தவறியதில் நியாயங்கள் இருக்கலாம். முஸ்லிம் புத்திஜீவிகளே முஸ்லிம் தரப்பில் யோசனைகளை முன்வைப்பதற்கு பொருத்தமானவர்கள்.

இதை சுமந்திரனுக்கு நாம் வலியுறுத்தியுள்ளோம். அதைத் தொடர்ந்துதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், முஸ்லிம் புத்திஜீவிகளுக்கும் இடையில் சந்திப்புக்கும், பேச்சுவார்த்தைக்கும் ஏற்பாடாகியுள்ளன. நான் உத்தேச தீர்வு யோசனையை பார்வையிட்டேன். அதில் முஸ்லிம்களுக்கான விடயங்களும் இடம்பெற்றுதான் உள்ளன. ஆகவே, நாம் அந்த இடத்திலிருந்து மீண்டும் ஆரம்பித்து முஸ்லிம் புத்திஜீவிகளின் யோசனைகளை உள்வாங்கி மேம்பட்ட தீர்வு திட்டத்துக்கு செல்ல முடியும் என்பது எமது நிலைப்பாடும், நம்பிக்கையும் ஆகும்.

# பயணப்பொதியில் வெளிநாட்டு நாணயங்கள்

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு நாணயங்களை தமது பயணப் பொதிகளில் கொண்டு செல்ல முற்பட்ட ஐவர், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை சுங்கத்தின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணைகளை அடுத்து சந்தேகநபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட பணத்தில் 95ஆயிரம் அமெரிக்க டொலர்கள், 18ஆயிரம் யூரோக்கள் மற்றும் 37ஆயிரம் சவூதி ரியால்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மதிப்பில் இந்த நாணயத்தின் பெறுமதி சுமார் 25 மில்லியன் ரூபாவாகும்.

சந்தேக நபர்களிடம் இலங்கை சுங்கத் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாலைதீவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் நற்சான்றிதழ் கடிதத்தின் பிரதியை கையளிப்பு



மாலைதீவுக்கான நியமனம் செய்யப்பட்ட உயர்ஸ்தானிகர் ஏ.எம்.ஜே.சாதிக், அனைத்து ஊழியர்களும் கலந்து கொண்ட எளிமையான விழாவின் பின்னர், அதே தினத்தில் மாலேயில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கடந்த 26ஆம் திகதி, நியமனம் செய்யப்பட்ட உயர்ஸ்தானிகர் சாதிக் தனது நற்சான்றிதழின் திறந்த பிரதியை மாலேயில் உள்ள வெளியுறவு அமைச்சில் வைத்து உபசரணைப் பிரிவின் தலைவரான தூதுவர் ஐஷாத் ஷான் ஷாகிரிடம் ஒப்படைத்தார்.

இந்த சந்திப்பின்போது, கல்வி, சுகாதாரம் மற்றும் முதலீடு போன்ற இருதரப்பு நலன் சார்ந்த பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன. தனது நற்சான்றிதழின் திறந்த பிரதியை முன்வைப்பதற்காக முன்கூட்டிய சந்தர்ப்பமொன்றை வழங்கியமைக்காக உபசரணைப் பிரிவின் தலைவருக்கு நியமனம் செய்யப்பட்ட உயர்ஸ்தானிகர் நன்றிகளைத் தெரிவித்ததுடன், இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான நெருங்கிய மற்றும் நல்லுறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.







அதன்பின்னர், இணைச் செயலர் கதீஜா நஜீஹாவைச் சந்தித்த நியமனம் செய்யப்பட்ட உயர்ஸ்தானிகர் சாதிக், இந்த வருடம் கொழும்பில் இலங்கை - மாலைதீவு கூட்டு ஆணைக்குழுக் கூட்டத்தை கூட்டுவதற்கு முன்னர், குறிப்பாக இரட்டை வரி விதிப்பைத் தவிர்த்தல், இருதரப்பு முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு மற்றும் சுங்க விடயங்களிலான நிலுவையில் உள்ள பல இருதரப்பு ஒப்பந்தங்கள், புரிந்துணர்வு ஒப்பந்தங்களை முன்கூட்டியே இறுதி செய்வது குறித்து கலந்துரையாடினார்.


மேற்படி சந்திப்புகளில், நியமனம் செய்யப்பட்ட உயர்ஸ்தானிகருடன் பதில் உயர்ஸ்தானிகர் டி. அமானுல்லாவும் இணைந்திருந்தார்.

# எத்துல்கோட்டே - நாவல வீதியின் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு: இராஜகிரிய புதிய பாலத்தின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்க!









எத்துல்கோட்டே - அங்கம்பிட்டிய வீதி மற்றும் நாவல - ராஜகிரிய வீதியை இணைத்து ராஜகிரிய - நாவல கால்வாயின் குறுக்கே நிர்மாணிக்கப்படும் புதிய பாலத்தின் நிர்மாணப் பணிகள், 60வீதம் நிறைவடைந்துள்ளதாகவும் நிர்மாணிப் பணிகளை துரிதப்படுத்தி பாலத்தை நிறைவு செய்யுமாறும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் ஆகியோருக்கு ஆளுந்தரப்பு பிரதம கொறடா நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பணிப்புரை வழங்கினார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின்போது இந்தப் பணிப்புரைகளை வழங்கியதாக அமைச்சர் தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முழு மேற்பார்வையின் கீழ், அரச அபிவிருத்தி மற்றும் வடிவமைப்புக் கூட்டுத்தாபனத்தினால் இரு வழிப்பாதையுடன் கூடிய இந்தப் பாலம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. 600 மீற்றர் நீளமும் 10.4 மீற்றர் அகலமும் கொண்ட இந்தப் புதிய பாலத்திற்கு ரூ.1,698.55 மில்லியன் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பாலத்தின் இருபுறமும் தலா 1.5 மீற்றர் அளவில் இரண்டு நடைபாதைகள் அமைக்கப்படும்.

மேலும், அங்கம்பிட்டியில் இருந்து பாலம் நோக்கி 60 மீற்றர் நீள பிரவேச வீதியும், பாலத்தில் இருந்து பாடசாலைக்கான பாதை வரை 40 மீற்றர் நீள பிரவேச வீதியும் அமைக்கப்படும். இப்பகுதியில் உள்ள சதுப்பு நிலங்கள் சேதமடையாத வகையில் மின்கம் பங்களில் புதிய பாலம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய பாலம் நிர்மாணிக்கப்படுவதன் மூலம் நாடாளுமன்ற வீதி மற்றும் கோட்டே ஆகிய பகுதிகளில் இருந்து வரும் வாகனங்கள் நாவலை நோக்கி இலகுவாக செல்லக்கூடியதாக இருப்பதுடன் ராஜகிரிய வீதியில் நிலவும் போக்குவரத்து நெரிசல் குறையும்.

# பொலன்னறுவை அஹதிய்யா சம்மேளனத்தின் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது

(ரஸீன் ரஸ்மின்)





பொலன்னறுவை மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் சம்மேளனத்தின் புதிய நிர்வாக தெரிவு நேற்றுமுன்தினம் (29) பொலன்னறுவை கதுறுவல ஜும்ஆப் பள்ளிவாசல் மர்கஸ்வளாகத்தில் இடம்பெற்றது.

அஹதிய்யா பாடசாலை சம்மேளனத்தின் தேசியத் தலைவர் எம்.ஆர்.எம். ஸரூக் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சமேளனத்தின் பொருளாளர் எம்.எச்.எம்.உவைன், உப தலைவர்களான பாரூக் பதீன், அஷ்ஷெய்ஹ் யூ.எல். றிபாய்தீன், உப செயலாளர் ஹிஸாம் ஸுஹைல், பொருளாளர் அஷ்ஷெய்ஹ் அக்ரம் ஜூனைத், முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் அஷ்ஷெய்ஹ் பீ.றவூப்தீன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது நடப்பு வருடத்திற்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டவர்களின் விபரங்கள் பின்வருமாறு,

இதன்படி பொலன்னறுவை மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் சம்மேளனத்தின் புதிய தலைவராக ஓய்வு பெற்ற அதிபர் என்.எம்.ஏ.மஜீத், செயலாளராக அமானா வங்கி முகாமையாளர் ஆர்.ஜிப்ரி, பொருளாளராக தொழிலதிபர் எஸ்.எச்.அமானுல்லாஹ், உதவி தலைவர்களாக அஷ்ஷெய்ஹ் ஏ.சீ.எம். ஜௌபர், ஏ. மௌஸூர் (அதிபர்), அஷ்ஷெய்ஹ் .ஐ.ஏ.மஜீத், உதவிச் செயலாளராக அஷ்ஷெய்ஹ் எம்.என்.எம். சிபான், உதவிப் பொருளாளராக பி.ஏ. ஜப்பார் (தொழிலதிபர்) ஆகியோருடன் நடப்பு வருடத்திற்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் 17 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துருக்கி வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயத்தில் பொருளாதார, கலாசார மேம்பாடு குறித்து கலந்துரையாடல்







துருக்கி குடியரசின் வெளியுறவு அமைச்சர் மெவ்லட் சாவுசோக்லுவுடன் கடந்த 28, வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற இருதரப்பு சந்திப்பில், இலங்கைக்கும் துருக்கிக்கும் இடையில் நிலவும் மிதமான, சுமூகமான மற்றும் பரஸ்பர ஆதரவான பங்காளித்துவத்தை வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக் காட்டினாரென வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

துருக்கி தனது ஆசியா புதிய முயற்சி என்ற கட்டமைப்பில் இலங்கையுடன் இன்னும் நெருக்கமான ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கு வெளிப்படுத்திய விருப்பத்தை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் வரவேற்றார். துருக்கியுடனான இருதரப்பு உறவுகளில் பரஸ்பர நண்பர், நட்பு நாடு மற்றும் மதிப்புமிக்க பங்காளி என்ற வகையில் இலங்கையின் முக்கியத்துவத்தை துருக்கிய வெளிவிவகார அமைச்சர் சாவுசோக்லு எடுத்துரைத்தார்.

இலங்கையில் நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பாக துருக்கியினால் பேணப்படும் கொள்கை ரீதியான நிலைப்பாட்டையும், பிராந்திய மற்றும் பலதரப்பு மன்றங்களில் வெளிப்படுத்தப்பட்ட ஒற்றுமையையும் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் பாராட்டி, ஒப்புக்கொண்டார். மேலும் விளக்கமளித்த அமைச்சர், இலங்கையில் வாழும் அனைத்து சமூகங்கள் மற்றும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அதேவேளையில், நம்பகமான, அனைத்தையும் உள்ளடங்கிய உள்நாட்டு செயன்முறையின் மூலம் நல்லிணக்கத்தின் எஞ்சிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை மேம்படுத்துவது குறித்து இரு வெளிநாட்டு அமைச்சர்களும் கலந்துரையாடினர். பொருளாதார ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி, ஜூன் 2021இல் நடைபெற்ற இலங்கை - துருக்கி பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான துருக்கி கூட்டுக் குழுவின் இரண்டாவது அமர்வில் அடையாளம் காணப்பட்டவாறு, வர்த்தகத்தை மேலும் பன்முகப்படுத்தி, ஆண்டுக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தக இலக்கை அடைந்து கொள்வதற்காக சீராக செயற்பட வேண்டியதன் அவசியத்தை அவர்கள் அடையாளம் கண்டனர்.

முதலீடு மற்றும் வணிக இணைப்புகளை மேம்படுத்துதல், சுற்றுலா மற்றும் இணைப்பை மேம்படுத்துதல் மற்றும் ஒத்துழைப்பின் சாத்தியமான புதிய பகுதிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இலங்கை மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான தொடர்பை மேம்படுத்துவதில் துருக்கிய விமான சேவையின் பங்களிப்பை அமைச்சர் பீரிஸ் பாராட்டினார்.


எல்லை தாண்டிய வர்த்தகம் மற்றும் முதலீட்டை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக, இரு அமைச்சர்களும் இந்த விஜயத்தின்போது இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.


இரு அமைச்சர்களும் பாதுகாப்பு, காவல் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட பரஸ்பர ஆர்வமுள்ள ஏனைய பகுதிகள் குறித்தும் ஆலோசித்ததுடன், எதிர்காலத்தில் உயர்மட்ட விஜயங்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் எதிர்பார்த்தனர். கொவிட்-19 தொற்றின் தாக்கத்தை குறைப்பதற்காக 2021ஆம் ஆண்டு துருக்கிய ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு முகவரமைப்பின் ஊடாக வழங்கப்பட்ட மருத்துவ உதவிகள் மற்றும் 2004 சுனாமிக்குப் பின்னர் தென்னிலங்கையில் வீட்டுக் கட்டுமானத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட மனிதாபிமான உதவிகளுக்காக துருக்கி அரசாங்கத்திற்கு இலங்கையின் பாராட்டுகளை அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.


பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே மற்றும் வெளிநாட்டு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த இருதரப்பு சந்திப்பில் கலந்துகொண்டனர். வெளிவிவகார அமைச்சர் சாவுசோக்லுவுடன் இலங்கைக்கான துருக்கித் தூதுவர் டிமெட் செகெர்சியோகுலு மற்றும் வெளிவிவகார அமைச்சரின் ஆலோசகர்களும் இணைந்திருந்தனர். இந்த விஜயத்தின்போது துருக்கிய வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

இதற்கு முன்னர் ஜூன் 2016இல் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த வெளிவிவகார அமைச்சர் சாவுசோக்லு இலங்கைக்கு மேற்கொண்ட இரண்டாவது விஜயம் இதுவாகும்.

# புத்தளம் இளைஞர் யுவதிகளுக்கு ஜப்பானில் வேலைவாய்ப்பு







(ரஸீன் ரஸ்மின்)

ஜனாதிபதியின் சிந்தனையில் உருவான சௌபாக்கியா வேலைத்திட்டத்தின் கீழ் இளைஞர், யுவதிகளுக்கு வெளிநாட்டில் தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில், புத்தளத்தில் அதற்கான பதிவுகளும் ஒருநாள் செயலமர்வும் நேற்றுமுன்தினம் (29) புத்தளம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமின் வேண்டுகோளுக்கிணங்க, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

பதிவுக் கட்டணம் மற்றும் மொழி உள்ளிட்ட பயிற்சிக்குரிய கட்டணங்கள் மாத்திரமே தெரிவு செய்யப்படும் இளைஞர், யுவதிகளிடமிருந்து அரசாங்கத்தினால் அறவிடப்படவுள்ளது.

அத்துடன், தொழில் வாய்ப்புகளுக்காக பதிவு செய்வோர், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் நிபுணத்துவம் பெற்றவர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்ட பின்னர், நடைபெறும் நேர்முகத் தேர்வு மற்றும் பரீட்சையில் சித்தி பெறுவோர் மாத்திரமே ஜப்பானுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமின் வேண்டுகோளுக்கிணங்க, குறித்த பயிற்சி நெறி தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் நடத்தப்படவுள்ளன.

குறித்த ஆரம்ப நிகழ்வில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பொது முகாமையாளர் எம்.பி. ரன்தெனிய, ஜப்பான் நாட்டின் இலங்கை முகாமையாளர் கவஹார ஆகியோருடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் அதிகாரிகள், சமயத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தடுப்பூசி திட்டத்துக்கு எதிராக கனடாவில் வெடித்தது போராட்டம்



## தலைநகரைச் சூழ்ந்தது மக்கள் வெள்ளம்
## பிரதமர் ட்ரூடோவும் குடும்பத்தினரும் இரகசிய இடத்துக்கு மாற்றம்



கனடா அரசின் தடுப்பூசி கட்டாயம் உள்ளிட்ட கொவிட் விதிகளுக்கு எதிராக தலைநகரில் பெரும் போராட்டம் நடைபெற்று வருகிறது. இதனால் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் குடும்பத்தினர் இரகசிய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கனடாவிலிருந்து எல்லைத்தாண்டி சென்று வரும் கனரக வாகன சாரதிகளுக்கு தடுப்பூசி கட்டாயம் என அந்நாட்டு அரசு அறிவித்தது. இதற்கு எதிராக சாரதிகள் ஒன்று திரண்டு போராட்டம் நடத்தத் தொடங்கினர். பின்னர் இப்போராட்டம் சுதந்திரப் பேரணி என்ற பெயரில் மக்கள் பங்கேற்புடன் பெரும் போராட்டமாக மாறியது.

ஆயிரக்கணக்கான வாகன சாரதிகள், பொதுமக்கள் என கட்டாய தடுப்பூசி மற்றும் பிற கொவிட் விதிமுறைகளை நீக்க வலியுறுத்தி நாடாளுமன்றம் அமைந்துள்ள பகுதியில் திரண்டனர்.

சிறுவர்கள், பெரியவர்கள், முதியவர்கள் என பல தரப்பு மக்களும் கையில் பதாகைகளுடன் கூடியுள்ளனர். கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை கடுமையாகவும் ஆபாசமாகவும் விமர்சிக்கும் வாசகங்கள் அதில் இடம்பெற்றுள்ளன.

கடுமையான குளிர் எச்சரிக்கையையும் மீறி, நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள் நாடாளுமன்ற வளாகத்திற்குள் நுழைந்துள்ளனர்.

இதனால், வன்முறை ஏற்படும் அபாயம் இருப்பதால் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். மேலும் நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

# கச்சத்தீவு அந்தோனியார் திருவிழாவுக்கு தமிழக பக்தர்களுக்கு அனுமதி வழங்குக!



## இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி மத்திய அரசிடம் கோரிக்கை

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

கச்சத்தீவு அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவிற்கு தமிழக பக்தர்களையும் அனுமதிக்க மத்திய அரசு இலங்கை அரசிடம் பேசி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில துணைத் தலைவரும், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினருமான கே. நவாஸ்கனி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில துணைத் தலைவரும், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினருமான கே. நவாஸ்கனி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது,

கச்சத்தீவு அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 11 மற்றும் 12ஆம் திகதிகளில் நடைபெறும் எனவும் இதில் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தி கொண்ட 500 பேருக்கு மட்டும் அனுமதி வழங்குவதாகவும், இந்திய பக்தர்களுக்கு இம்முறையும் அனுமதி மறுக்கப்படுவதாகவும் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கச்சத்தீவு அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா குறிப்பாக ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் கலந்து கொள்ள விரும்பும் திருவிழாவாகும்.

இத்திருவிழாவில் தமிழக மீனவர்கள் உள்ளிட்ட பக்தர்கள் பங்கேற்க அனுமதி வழங்க வேண்டுமென மீனவர் சங்கங்கள் உள்ளிட்ட பக்தர்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர்.

கொரோனா பேரிடர் நிலைமை காரணமாக குறைவான பக்தர்களுக்கு அனுமதி வழங்குவதாக இருந்தால் அதில் தமிழக பக்தர்களையும் இணைத்து குறைவான அளவிலாவது தமிழக பக்தர்களும் இடம்பெற உரிய அனுமதியை பெற்றுத்தர மத்திய அரசு இலங்கை அரசிடம் பேசி நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# விபரீதமான பப்ஜி மோகத்தினால் குடும்பத்தையே கொன்ற சிறுவன்

பாகிஸ்தானில் பப்ஜி மோகத்தால் குடும்பத்தையே சிறுவன் ஒருவன் சுட்டுக் கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் குழந்தைகள், சிறுவர்களிடையே ஸ்மார்ட்போன் மோகம் அதிகரித்துள்ளது. முக்கியமாக சிறுவர்கள் பப்ஜி போன்ற சாகச ஒன்லைன் கேம்களை தொடர்ந்து விளையாடுவதால் ஏற்படும் ஆபத்தான விளைவுகள் அதிர்ச்சியூட்டுபவையாக உள்ளன.

பாகிஸ்தானின் லாகூர் பகுதியை சேர்ந்த 14 வயது சிறுவன் பப்ஜி விளையாடுவதில் தீராத ஆர்வம் கொண்டவனாக இருந்துள்ளான். சமீபத்தில் சிறுவனின் குடும்பத்தினரை மர்ம நபர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தாய், தந்தை, சகோதரன், இரு சகோதரிகள் இவ்வாறு கொல்லப்பட்டனர்.

இதில் சிறுவன் மட்டும் தப்பித்திருந்ததால் சிறுவனிடம் தொடர் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அப்போது தனது குடும்பத்தை தானே சுட்டுக் கொன்றதை சிறுவன் ஒப்புக்கொண்டுள்ளான். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# நகர்ப்புற உள்ளூராட்சித் தேர்தல் பணிகள் தமிழகத்தில் தீவிரமாக முன்னெடுப்பு

## 52 கண்காணிப்பாளர்களை நியமிக்க அரசு அனுமதி



நகர்ப்புற உள்ளூராட்சித் தேர்தல் பெப்ரவரி 19ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், 32 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் உட்பட 52 தேர்தல் கண்காணிப்பாளர்களை நியமிக்க தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஊரக உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்துள்ள நிலையில், உயர்நீதிமன்ற உத்தரவின்படி நகர்ப்புற உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

**வேட்பு மனுத் தாக்கல்**

மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் உள்ள உள்ளூராட்சி அமைப்புகளுக்கு ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வேட்பு மனுத் தாக்கல் தொடங்கியது.

பிரதான கட்சிகள் இன்னமும் கூட்டணி கட்சிகளுடன் ஆசனப் பங்கீட்டை நிறைவு செய்யாததால் வேட்பு மனுத் தாக்கல் இன்னமும் விறுவிறுப்பு அடையவில்லை.

இதற்கிடையே தேர்தலுக்கான ஏற்பாடுகளை மாநில தேர்தல் ஆணையம் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. வாக்குச்சாவடிகள், வாக்கு எண்ணும் மையங்களை மாவட்ட கலெக்டர்கள் நேரடியாக பார்வையிட்டு தேர்தல் ஏற்பாடுகளை முடுக்கிவிட்டு வருகிறார்கள். தேர்தல் பறக்கும் படையினர் ஆவணம் இன்றி கொண்டு செல்லப்படும் பொருட்களையும், பணத்தையும் கைப்பற்றி வருகிறார்கள்.

**தேர்தல் பணி**

தமிழகத்தில் நடக்கவிருக்கின்ற நகர்ப்புற உள்ளூராட்சித் தேர்தலுக்கு 49 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை பயன்படுத்திக்கொள்ள தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கு அரசு அனுமதி அளித்து உத்தரவிடுகிறது.

கோவா, மணிப்பூர், பஞ்சாப், உத்தரகாண்ட், உத்தரபிரதேசம் ஆகிய 5 மாநிலங்களில் நடக்கவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்காக 60 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் பட்டியலை இந்திய தேர்தல் ஆணைக்குழு பெற்றுள்ளது. உள்ளூராட்சித் தேர்தலுக்காக தயார் செய்யப்பட்ட 49 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை கொண்ட பட்டியலில், 36 பேர் இந்திய தேர்தல் ஆணைக்குழுவின் பட்டியலில் காணப்படுகின்றனர்.

---

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

### நீதித்துறை மீது நம்பிக்கையில்லை

**கேள்வி: பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இலங்கையின் நீதித்துறை மீது நம்பிக்கை இல்லை. இதனால்தான் அவர்கள் ஆவணங்களை ஐ.நா.வுக்கு அனுப்புகின்றனர். சர்வதேச விசாரணையைக் கோருகின்றனர். நம்பிக்கையை எப்படி கட்டியெழுப்பப் போகின்றீர்கள்?**

**பதில்:** தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, முஸ்லிம்கள் ஏன் சிங்கள மக்களுக்கும் நம்பிக்கையில்லை.

தமிழ் மக்களுக்கு மாத்திரம் நம்பிக்கைக்குரியதாக கட்டியெழுப்ப முடியாது. நீதித்துறையை பலப்படுத்தவேண்டும். அதன் ஊடாகவே நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியும். நீதித்துறையின் சுயாதீனத்தை மேலும் மேலும் அதிகப்படுத்துவதன் ஊடாக இதனைச் செய்யலாம்.

எனது நாட்டிலுள்ள பிரச்சினைக்கு எனது நாட்டிலேயே தீர்வு காணலாம் என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கு வரவேண்டும்.

இதற்காகத்தான் இப்போது இந்த நடமாடும் சேவையைக் கூட வடக்கில் முன்னெடுக்கின்றேன். நான் இவற்றைச் செய்வதற்கு ஜனாதிபதியின் ஆசீர்வாதம், அரசின் ஆசீர்வாதம் இல்லாவிட்டால் செய்ய முடியாது. நீதித்துறையைப் பலப்படுத்தி அதன் மீதான நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு எனக்கு முழுச் சுதந்திரம் தந்துள்ளார்கள்.

தமிழ் ஊடகங்களில் வெளிவரும் செய்திகளுக்கும் சிங்கள ஊடகங்களில் வரும் செய்திகளுக்கும் ஆங்கில ஊடகங்களில் வரும் செய்திகளுக்கும் இடையில் வேறுபாடுகள் உண்டு. ஒவ்வொரு ஊடகங்களுக்கும் தத்தமது வாசகர்களுக்கு பத்திரிகைகளை விற்பதற்கு ஏற்ற வகையில் செய்திகளைக் கொடுக்கின்றார்கள். அரசியலும் இதேபோன்றுதான். அவர்கள் தங்கள் வாக்காளர்களைத் திருப்திப்படுத்துவதற்கு மாத்திரம்தான் முயல்கின்றார்கள். தமிழ் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள், சிங்களக் கட்சிகள் என்று எந்தவேறுபாடுமின்றி இதைத்தான் செய்கின்றார்கள். நாடு முன்னோக்கிச் செல்லாதமைக்கு இதுதான் காரணம்.

இதனால்தான் நீதித்துறையை சுயாதீனமாக பலப்படுத்தவேண்டும் என்று அதைச் செய்கின்றோம்.

### புதிய அரசியலமைப்பு

**கேள்வி: புதிய அரசியலமைப்புக்கான வரைவு நிபுணர் குழுவால் தயாரிக்கப்படுகின்றது. அந்த வரைவு மூவின மக்களுக்கும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று நம்புகின்றீர்களா?**

**பதில்:** இலங்கையில் வாழும் ஒவ்வொருவரும் கண்ணியத்துடன், மதிப்புடன், கௌரவமாக வாழவேண்டும் என்பதை உறுதி செய்யும் வகையிலேயே புதிய அரசமைப்பு உருவாக்கப்படுகின்றது.

இந்தப் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு நியமிக்கப்பட்டுள்ள சுயாதீன நிபுணர் குழுவில் சகல மதத்தவர்கள், இனத்தவர்கள் இருக்கின்றார்கள். பன்மைத்துவத்தை அடிப்படையாக வைத்து புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்பதுதான் எமது நோக்கம்.

இலங்கையில் எந்தவொரு அரசியலமைப்பும் தமிழ் மக்களின் ஆதரவு இல்லாமல் நிறைவேற்றப்பட முடியாது. நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை என்றால், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளிக்கவேண்டும்.

தற்போது எமது அரசிலும் 150 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 12 பேர் தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான். தமிழ் மக்களுக்கு விரோதமான அரசியலமைப்பு வந்தால் அவர்கள் ஆதரிக்கமாட்டார்கள். எனவே மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறவேண்டுமானால் நடுநிலையான மூவின மக்களாலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஓர் அரசியலமைப்பே கொண்டுவரப்படவேண்டும்.

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அப்படித்தான். சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களிலும் கணிசமானோர் நியாயமான புதிய அரசியலமைப்புத்தான் உருவாகவேண்டும் என்று நினைக்கின்றார்கள்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கு கால வரையறை சொல்ல முடியாது. சும்மா ஒன்றைச் சொல்ல முடியும். ஆனால் உண்மை, எப்போது முடியும் என்பதைச் சொல்ல முடியாது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்காக 1994ஆம் ஆண்டிலிருந்து முயற்சித்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். கடந்த ஆட்சியில் நாடாளுமன்றத்தில் இதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டது. காலத்தை வீணடித்ததுதான் மிச்சம். இதனால்தான் நாம் நிபுணர்களை நியமித்து வரைவை உருவாக்கிவிட்டு தரச் சொல்லியுள்ளோம். கடந்த காலங்களில் ஆராயப்பட்ட வரைவுகளையும் அவர்கள் ஆராய்கின்றார்கள்.

### சில்லறைத்தனமான அரசியல்

**கேள்வி: தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பியுள்ளன. அது தொடர்பில் தங்களின் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** நாங்கள் எங்களுடைய பிரச்சினையை உள்நாட்டில் தீர்த்துக் கொள்ளவேண்டும். அரசுடன் தமிழ்க் கட்சிகள் பேசவேண்டும் என்பதுதான் எனது நிலைப்பாடு.

இந்தியாவுக்கான கடிதத்தை இப்படிப் பகிரங்கமாகக் கொடுத்தால் தெற்கில் அது எப்படி எதிர்வினையை வெளிப்படுத்தும் என்பதை அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். வேறு நாட்டிலிருந்து எங்களுக்கு அழுத்தத்தை கொடுக்க முயற்சிக்கின்றார்கள் என்றுதான் தென்னிலங்கையில் சிந்திப்பார்கள்.

இப்படிச் செய்வதன் ஊடாக தமிழ் மக்களின் வாக்குகளை தமிழ்க் கட்சிகள் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் சிங்கள மக்களின் விரோதத்தை சம்பாதிக்கவேண்டிவரும். மீண்டும் பழைய கதையாகும். தமிழ் - சிங்கள மக்கள் விரோதத்துடன் வாழவேண்டிவரும்.

தமிழ்க் கட்சிகள் இதில் பொறுப்புடன் நடந்திருந்தால் நல்லது என்று நினைக்கின்றேன். அரசுக்கு அழுத்தம் கொடுக்கத்தான் வேண்டும் என்றால் தமிழ்க் கட்சிகள் இந்த விடயத்தில் இராஜதந்திர ரீதியில் நகர்வுகளை மேற்கொண்டிருக்கலாம். பகிரங்கமாகச் செய்திருக்கவேண்டியதில்லை. ஆனால் தமிழ் கட்சிகள் செய்தது அரசியல் ஏமாற்றுவேலை. தமிழ் மக்களின் வாக்குகளுக்காக இதைச் செய்துள்ளார்கள். இப்படிச் செய்வதால் பிரச்சினைக்கு தீர்வு வராது. இதைத்தான் எல்லோரும் செய்கின்றார்கள்.

### பேசுவோம்

**கேள்வி: போரை வெற்றிகொண்ட அரசு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்திருந்தால், தமிழ்க் கட்சிகள் இந்தியாவை நாட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காதுதானே?**

**பதில்:** நிச்சயமாக. தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசு தீர்க்கவேண்டும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமும் இதைச் சொல்லியுள்ளேன்.

அனைத்து தமிழ்க் கட்சிகளையும் அழைத்து பேச்சு நடத்தவேண்டும் என்று ஜனாதிபதியிடம் சொன்னேன். அவர் இணங்கினார். விரைவில் அது நடக்கும்.

இந்த நாட்டில் சிறுபான்மையின மக்கள் பெரும்பான்மையின மக்களை நம்பத் தயாராக இல்லை. பெரும்பான்மையின மக்கள் சிறுபான்மையின மக்களை நம்பத் தயாராக இல்லை. எல்லாவற்றுக்கும் அடிப்படை அதுதான்.

சின்ன விடயம் நடந்தாலும் சிங்கள ஊடகங்கள் விடுதலைப் புலிகள் மீளெழுச்சி கொள்கின்றார்கள் என்று சொல்ல, சிங்கள மக்கள் அதனை நம்புகின்றார்கள். அது நடக்காது என்பது எனக்குத் தெரியும். இந்த மாதிரியான தவறான புரிந்துணர்வு இருக்கின்றது.

மனிதர்களுக்கு இடையிலான தொடர்பாடல்களை அதிகரிக்கவேண்டும். அதனால்தான், ஜனாதிபதியிடம் நான் ஓர் கோரிக்கை முன்வைத்திருக்கின்றேன். வடக்குக்கும், தெற்குக்கும் இடையில் அதிவேக பாதையை விரைவில் நிர்மாணிக்குமாறு கேட்டுள்ளேன். இடைவெளி குறையும்போது, வடக்கு மக்களுக்கும், தெற்கு மக்களுக்கும் நெருக்கமான தொடர்பாடல்களைப்பேணும் போது தவறான புரிந்துணர்வுகளை களைந்துகொள்ள முடியும் என்று நம்புகின்றேன்.

# பீஜிங் ஒலிம்பிக் ஆரம்ப விழாவில் 32 தலைவர்கள் பங்குபற்றுவார்கள்

சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங்கின் அழைப்பை ஏற்ற 32 தலைவர்கள் எதிர்வரும் 04ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் ஆரம்ப விழாவில் கலந்து கொள்வார்கள். ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் தலைமையில் ஆரம்பவிழா நடைபெறும்.



பீஜிங் விளையாட்டுகளுக்கு சர்வதேச ஆதரவை அதிகரிக்க சீனா ஆர்வமாக உள்ளது.

சீனாவின் மனித உரிமைகள் செயலை மேற்கோள் காட்டி பல மேற்கத்தேய நாடுகள் இராஜதந்திர புறக்கணிப்பை அறிவித்துள்ளன. குறிப்பாக, சின்ஜியாங்கின் மேற்குப் பகுதியில் உள்ள முஸ்லிம் உய்குர்களை அமெரிக்கா "இனப்படுகொலை" என்று முத்திரை குத்தியது.




வெள்ளிக்கிழமை நடக்கவுள்ள ஆரம்ப விழாவிற்கான புதுப்பிக்கப்பட்ட விருந்தினர் பட்டியலை சீனா வெளியிட்டது. இதில் சீனாவின் பல அண்டை நாடுகள், அரச குடும்ப உறுப்பினர்கள் மற்றும் முக்கிய எதேச்சதிகார நாடுகளின் தலைவர்கள் உள்ளனர்.

ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடின், எகிப்து ஜனாதிபதி அப்தெல் ஃபத்தா அல்-சிசி, சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், கட்டார் எமிர், தாய்லாந்தின் இளவரசி சிறிந்தோர்ன், மொனாக்கோவின் இளவரசர் ஆல்பர்ட் ஈ.ஈ., போலந்தின் ஜனாதிபதி ஆண்ட்ரெஜ் டுடா, செர்பியாவின் ஜனாதிபதி அலெக்சாண்டர் வுசிக், உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் தோமஸ் பாக், செர்பியா, போலந்து, ஆர்ஜென்ரீனா ஆகிய நாடுகளின் தலைவர்கள் பீஜிங் ஒலிம்பிக்கில் கலந்துகொள்வார்கள்.

சிசி, இளவரசர் முகமது மற்றும் புடின் ஆகியோர் தங்கள் நாடுகளில் உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக மனித உரிமை அமைப்புகள் நீண்டகாலமாக குற்றம்சாட்டி வருகின்றன.

சின்ஜியாங் உய்குர் தன்னாட்சி பிராந்தியத்தின் கறுப்பு பட்டியலில் 25 நாடுகளுடன் பாகிஸ்தானும் பெயரிடப்பட்டுள்ளது.



இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா, டென்மார்க், பெல்ஜியம், லித்துவேனியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் உள்ள அரசாங்கங்கள், சீனாவுக்கு எதிராக அமெரிக்காவுடன் இணைந்து இராஜதந்திர ரீதியாக புறக்கணித்துள்ளன. இந்த நாடுகள் அதிகாரிகளை அனுப்பவில்லை. ஆனால், வீரர்கள் கலந்து கொள்வதற்கு தடைவிதிக்கவில்லை.

ஜப்பான் போன்ற பிற நாடுகள் அதிகாரிகளை அனுப்பவில்லை. சீனாவில் மனித உரிமைகள் பற்றி கவலை தெரிவித்துள்ளன. அதே நேரத்தில் தாங்கள் புறக்கணிப்பின் ஒரு பகுதியாக அதிகாரபூர்வமாக அறிவிப்பதில் இருந்து விலகியுள்ளன.

நெதர்லாந்து போன்ற சில மேற்கத்தேய நாடுகள் சீனாவின் கடுமையான தொற்றுநோய் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக அதிகாரிகளை அனுப்ப மறுத்துவிட்டன.

கட்டாய உய்குர் தொழிலாளர்களைப் பயன்படுத்துதல், வெகுஜன கண்காணிப்புத் திட்டத்தை செயல்படுத்துதல், ஆயிரக்கணக்கானவர்களை தடுப்பு முகாம்களில் தடுத்து வைத்தல், கட்டாய கருத்தடை செய்தல் மற்றும் சின்ஜியாங் பிராந்தியத்தில் உய்குர் பாரம்பரியத்தை வேண்டுமென்றே அழித்தல் போன்ற குற்றச்சாட்டுகளை சீனா எதிர்கொள்கிறது.

பெய்ஜிங் தனக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளை மறுக்கிறது மற்றும் முகாம்கள், இஸ்லாமிய தீவிரவாதம் மற்றும் பிரிவினை வாதத்தை முத்திரை குத்துவதற்கான பயிற்சி மையங்கள் என்று கூறுகிறது.

சீன தலைநகர் பெப்ரவரி 4 முதல் 20 வரை குளிர்கால ஒலிம்பிக்கை நடத்த திட்ட மிடப்பட்டுள்ளது. குளிர்கால பாராலிம் பிக் மார்ச் 4 முதல் 13 வரை நடைபெறவுள்ளது.

# ஐ.பி.எல் இல் பூட்டான் வீரர்

ஐ.பி.எல். 2022 தொடருக்கான வீரர்கள் ஏலம் பெப்ரவரி 12 மற்றும் 13 ஆகிய திகதிகளில் 2 நாட்கள் மிகப்பெரிய அளவில் பெங்களூருவில் நடைபெறவுள்ளது. இந்த மிகப்பெரிய ஏலத்தை நடத்துவதற்காக அனைத்து விதமான வேலைகளிலும் பி.சி.சி.ஐ. மும்முரமாக ஈடுபட்டுவருகிறது. இந்த ஏலத்தில் இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த மொத்தம் 1,214 வீரர்கள் போட்டியிட உள்ளார்கள்.




இந்தியாவின் அண்டை நாடான பூட்டான் நாட்டிலிருந்து வரலாற்றிலேயே முதல் முறையாக ஒரு வீரர் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்க விண்ணப்பம் செய்துள்ளார். பூட்டான் நாட்டிலுமிருந்து "மிக்யோ டோர்ஜி" எனும் 22 வயது நிரம்பிய இவர் தற்போது கிரிக்கெட் ரசிகர்களிடையே மிகப்பெரிய கவனத்தை ஈர்த்துள்ளார். இந்நிலையில் ஐ.பி.எல். தொடருக்கான ஏலத்தில் விண்ணப்பம் செய்ய இந்தியாவின் முன்னாள் நட்சத்திர வீரர் மற்றும் கெப்டன் எம்.எஸ். தோனி அளித்த உற்சாகமே காரணமென மிக்யோ டார்ஜி உணர்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள ஒரு வீடியோவில் தோனி அவருக்கு ஒரு சில ஆலோசனைகளை வழங்குவதுடன் இறுதியில் அவரின் பூட்டான் நாட்டு கிரிக்கெட் அணியின் சீருடையில் கையொப்பமிட்டு தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

பூட்டான் நாட்டில் கிரிக்கெட் என்பது மிகவும் பிரபலமடையாத ஓர் விளையாட்டாகும். சொல்லப்போனால் கடந்த 2019ஆம் ஆண்டு தான் பூட்டான் அணி சர்வதேச கிரிக்கெட் வாரியத்தின் ஒரு துணை உறுப்பு நாடாக சேர்த்து கொள்ளப்பட்டது.

பூட்டான் அணிக்காக மிக்யோ டார்ஜி இதற்கு முன் நேபால் மற்றும் மாலைதீவுகள் ஆகிய அணிகளுக்கு எதிராக நடைபெற்ற சர்வதேச ரி20 போட்டிகளில் விளையாடியுள்ளார். அத்துடன் கடந்த வருடம் அந்நாட்டில் நடந்த எவரெஸ்ட் பிரீமியர் லீக் தொடரில் சாகித் அப்ரிடி போன்ற தரமான கிரிக்கெட் வீரர்களுடன் விளையாடிய அனுபவம் கொண்டுள்ளார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# அவுஸ்திரேலிய ஓபனில் நடுவரைத் திட்டியதாக மெத்வதேவுக்கு அபராதம் விதிக்கப்பட்டது

அவுஸ்திரேலிய ஓபனில் ஸ்டெஃபனோஸ் சிட்சிபாஸுக்கு எதிரான அரையிறுதி வெற்றியின் போது, நாற்காலி நடுவரில் அவர் அசாதாரணமான கோபத்தை வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து, டேனியல் மெத்வதேவுக்கு சனிக்கிழமை மொத்தம் $12,000 அபராதம் விதிக்கப்பட்டது.




ரஷ்ய உலகின் இரண்டாம் நிலை வீரரான மெத்வதேவுக்கு டென்னிஸ் அவுஸ்திரேலியா இரண்டு குற்றங்களுக்காக அபராதம் விதித்தது. ஆபாசத்திற்கு" $8,000 மற்றும் "விளையாட்டுத்தனமற்ற நடத்தைக்கு" $4,000 அபராதமாக விதிக்கப்பட்டது.




சிட்சிபாஸுக்கு எதிரான அவரது நான்கு செட் வெற்றியால் தொடர்ச்சியான இரண்டாவது அவுஸ்திரேலிய இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

ஆனால், போட்டிக்குப் பின்னர் கோபமாகவும் ஆபாசமாகவும் நாற்காலி நடுவர் ஜாம் கேம்பிஸ்டலை திட்டினார்.

"உனக்கு பைத்தியமா? பைத்தியமா? (சிட்சிபாஸின்) மெட்வெடேவ் கேம்பிஸ்டலில் கத்தினார். "நீ முட்டாளா? அவன் அப்பா எல்லா விஷயத்தையும் பேசுவாரா?

"அவருடைய அப்பா ஒவ்வொரு விஷயத்தையும் பேச முடியுமா?

"என் கேள்விக்கு பதில் சொல்லு. என் கேள்விக்கு பதில் சொல்லுவாயா? என் கேள்விக்கு பதில் சொல்லுவாயா? என் கேள்விக்கு உன்னால் பதில் சொல்ல முடியுமா? என் கேள்விக்கு பதில் சொல்ல முடியுமா, ப்ளீஸ்?

"கடவுளே, கடவுளே, நீங்கள் மிகவும் மோசமானவர், மனிதனே. அரையிறுதியில் நீங்கள் எப்படி மோசமாக இருக்கிறீர்கள், உங்கள் பதில்? என்னைப் பாருங்கள். நான் உன்னிடம் பேசுகிறேன்!"

என்று கோபமாகக் கத்தினார்.

பின்னர், மெத்வதேவ் நடுவரை "சின்ன பூனை" என்று அழைத்தார். போட்டிக்கு பிந்தைய செய்தியாளர் சந்திப்பில் வருத்தம் தெரிவித்தார்.

ஏ.டி.பியின் படி, மெத்வதேவின் தொழில் வருமானம் $22 மில்லியனுக்கும் அதிகமாகும், வெற்றியாளரின் பரிசுத் தொகை A$2.875 மில்லியன் ($2 மில்லியன்) ஆகும்.

அவுஸ்திரேலிய ஓபன் இறுதிப் போட்டியில் ரஃபேல் நடால், 21 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களுடன் மெத்வதேவ்வை எதிர்த்து விளையாடுகிறார்.

# பிரிட்டிஷ் வீரர்கள் அணியும் உடைகள் மறுசுழற்சி செய்யப்பட்டவை

பீஜிங் 2022 குளிர்கால ஒலிம்பிக் மற்றும் பராலிம்பிக்ஸில் பிரித்தானிய விளையாட்டு வீரர்கள் அணியும் உடைகளை எடிடாஸ் வெளியிட்டது. மறுசுழற்சி செய்யப்பட்ட கடல் பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட காப்புகளை உள்ளடக்கிய வடிவமைப்புகளுடன் PrimaLoft insulation x Parley Ocean Plastic, கடலோர சமூகங்கள் மற்றும் கரையோரங்களில் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளில் இருந்து உருவாக்கப்பட்ட உயர் செயல்திறன் காப்பு, ஹூட் போடியம் ஜாக்கெட் உள்ளிட்ட துண்டுகளாக உள்ளன.

பொருள் 100 சதவீதம் மறுசுழற்சி செய்யப்பட்ட




நார்ச்சத்து கொண்டது. மேலும் இது வேகமாக உலர்த்தும், நீடித்த மற்றும் சுவாசிக்கக்கூடியது என்று உற்பத்தியாளர் கூறுகிறார்.



"தைரியம் மற்றும் கொண்டாட்டத்தை பிரதிபலிக்கும் வண்ணம் தடுக்கும் வடிவமைப்புடன் யூனியன் கொடியின் சமகால பிரதிநிதித்துவத்தை" காட்டுவதற்காக இந்த உடைகள் வடிவமைக் கப்பட்டுள்ளதாக எடிடாஸ் தெரிவித்துள்ளது. நேவி ப்ளூ என்பது பெரும்பாலான ஆடைகளுக்கு அடிப்படை நிறம்.

புதிய சேகரிப்பில் உள்ள பொருட்களில் 40 சதவீதம் பார்லி ஓஷன் பிளாஸ்டிக்கால் செய்யப் பட்ட போடியம் ஹூட் ஜாக்கெட், ஒரு போடி யம் மிட்-லேயர் ஜாக்கெட் ஆகியவை பாரம் பரிய ஃபிளீஸ்களை விட குறைந்த விகிதத்தில் மைக்ரோஃபைபர்களை உதிர்ப்பதாகக் கூறப்படு கிறது. எனவே சுற்றுச்சூழலுக்கு ஏற்றதாக இருக்கும்,

பிரிட்டிஷ் ஒலிம்பிக் சங்கத்தின் தலைமை நிர்வாகி ஆண்டி அன்சன், பிரிட்டிஷ் விளையாட்டு வீரர்களுக்காக உருவாக்கப்பட்ட "சின்னமான தோற்றத்தை" பாராட்டினார்.

"டோக்கியோவில் நடந்த கோடைக்கால விளையாட்டுகளின் வெற்றியைத் தொடர்ந்து, எங்கள் குளிர்கால விளையாட்டு வீரர்கள் பீஜிங்கிற்குச் செல்லும்போது அவர்களுக்கு ஆதரவளிப்பது மிகவும் உற்சாகமாக இருக்கிறது" என்று அன்சன் கூறினார்.

"பயணம் எப்போதும் எளிதானது அல்ல என் றாலும், எங்கள் விளையாட்டு வீரர்கள் நம்பமுடி யாத உறுதியை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும், சீனாவில் வெற்றிபெற அவர்களுக்கு சிறந்த வாய்ப்பை வழங்க நாங்கள் கடுமையாக உழைக்கிறோம்.

"எடிடாஸ் குழு ஜீ.பியின் அற்புதமான கூட்டாளியாகத் தொடர்கிறது. மேலும் எங்கள் விளையாட்டு வீரர்கள் தங்கள் நாட்டைப் பிரதிநிதித் துவப்படுத்துவதால் அவர்கள் பெருமையுடன் அணியக்கூடிய ஒரு சின்னமான தோற்றத்தைக் கொண்டு வந்துள்ளனர்."

பிரிட்டிஷ் பராலிம்பிக் சங்கத்தின் தலைமை நிர்வாகி மைக் ஷரோக் மேலும் கூறுகையில் பீஜிங் 2022இல் பரா விளை யாட்டு வீரர்கள் தாங்கள் அணியும் ஆடை களைப் பார்க்க இது ஒரு "சிறப்பு நாள்" என்று கூறினார்.

# நெஷனல் சுப்பர் லீக் கிரிக்கெட் தொடர் – 2022 கண்டி – ஜவ்னா அணிகள் அபார வெற்றி

டயலொக் நிறுவனத்தின் பூரண அனுசரணையில் இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் நெஷனல் சுப்பர் லீக் தொடரில் நேற்று (30) தம்புள்ளை – கண்டி அணிகள், கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் மோதின.



இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 318 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. பின்னர் 319 என்ற இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தம்புள்ளை அணி 42.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 163 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியடைந்ததால், 155 ஓட்டங்களால் கண்டி அணி அபார வெற்றி பெற்றது.

இதேவேளை, காலி – ஜவ்னா அணிகள் பி. சரவணமுத்து மைதானத்தில் நேற்று (30) மோதின.

இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜவ்னா அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 263 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. பின்னர், 264 என்ற இலகுவான இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய காலி அணி 36.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 175 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியடைந்ததால், 88 ஓட்டங்களால் ஜவ்னா அணி வெற்றி பெற்றது.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7